பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 17 சனிக்கிழமை (04-10-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:310

# இராணுவ ட்ரக் மோதி இளைஞர்கள் இருவர் பலி!

# கொதிப்படைந்த மக்கள் படையினர் மீது கல்வீச்சு!!

## பிரதான வீதி, கன்னியர் மடம் சந்தியில் நேற்று மாலை சம்பவம்

## ஐந்து படையினர் காயம்; ட்ரக் சாரதி பொலீஸாரினால் கைது!

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்4

**யாழ்ப்பாணம் பிரதான வீதியில் தண்ணீர்த் தாங்கி அருகில் உள்ள கன்னியர் மடச் சந்தியில் இராணுவ ட்ரக் ஒன்று மோட்டார் சைக்கிளை மோதிப் பந்தாடியதில் அதில் பயணஞ்செய்த இரு இளைஞர்களும் அந்த இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தனர்.**

**இந்தச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த மக்கள், விபத்து நடந்த இடத்தைவிட்டு இராணுவ ட்ரக்கை அகற்றுவதற்கு அனுமதிக்கவில்லை. இதனால், அங்கு குவிக்கப்பட்டிருந்த இராணுவம் மற்றும் பொலீஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே முறுகல் ஏற்பட்டது. அங்கு கூடியிருந்த பொதுமக்கள் படையினரை நோக்கி கல்வீச்சில் ஈடுபட்டனர். இதனையடுத்து படையினர் வான்நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுவீச்சும் நடத்தி மக்களை விரட்டியடித்தனர்.**

**இந்தக் கலவரத்தில் நான்கு படையினருக்கும் பொலீஸார் ஒருவருக்கும் காயங்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.**

யாழ். நகரப்பகுதியில் இருந்து பிரதானவீதி வழியாக வந்துகொண்டிருந்த படையினரின் ட்ரக்கும் யாழ். நகரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளுமே திருக்குடும்ப கன்னியர் மடத்துச் சந்தியில் நேற்று மாலை 4.55 மணியளவில் மோதி விபத்துக்குள்ளாகின.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். அவர்களில் ஒருவர் உரும்பிராய் அன்னங்கையைச் சேர்ந்த மகாலிங்கம லிங்கரூபன் (வயது 21) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் சுண்டுகுளி மகளிர் கல்லூரியில் பணிபுரியவர் எனக்கூறப்பட்டது.

உயிரிழந்த மற்றைய இளைஞ

(16ஆம் பக்கம் பார்க்க)



பிரதான வீதியில் கன்னியர் மடச்சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிள், சின்னாபின்னப்பட்டுப் போய்க் கிடப்பதைப் படத்தில் காணலாம். சம்பவத்தில் உயிரிழந்த ம.லிங்கரூபனின் படத்தையும், மோதிய ட்ரக் வண்டியையும் உள் படங்களில் காணலாம்.

# பாதிக்கப்பட்ட சிறுவர் மறுவாழ்வுக்காக கிளிநொச்சியில் இடைத்தங்கல் முகாம்

## நேற்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.4

வடக்கு-கிழக்கில் யுத்தத்தால் நலிவுற்ற சிறுவர்களுக்கு மறுவாழ்வு வழங்குவதற்கான இடைத்தங்கல் நிலையம் ஒன்று நேற்று கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தாய்லாந்திலும், ஜப்பானிலும் நடந்த பேச்சுக்களின் போது, சிறுவர் நலன் பேணுவது தொடர்பாக எட்டப்பட்ட உடன்பாட்டின் பிரகாரம் இந்த நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தை நேற்று முற்பகல் 11.30 மணியளவில் அரசின் சமாதானச் செயலக இணைப்பாளர் டாக்டர் ஜோன் குணரத்தின வைபவ ரீதியாகத் திறந்துவைத்தார்.

அதையடுத்து, நடந்த நிகழ்வில் விருந்தினர்களாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் கே.பி.ரெஜி, சமூக சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.பி.சொய்ஸா, யுனிசெவ் அமைப்பின் தென்னாசியப் பிரதிநிதி சதிக் ரசீத், இலங்கைப் பிரதிநிதி ரெட் சல்டான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு நடந்த நிகழ்வை அடுத்து, அங்குவந்திருந்த சர்வதேச, உள்ளூர் செய்தியாளர்கள் சகிதம் விருந்தினர்கள்

(16ஆம் பக்கம் பார்க்க)

### ஆஸி.நாடாளுமன்ற குழுவினருடன் கூட்டமைப்பினர் சந்திப்பு

கிளிநொச்சி,செப்.4

ஆஸ்திரேலிய நாடாளுமன்றக் குழுவினரை தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்கள் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், பொ.கஜேந்திரகுமார், என்ரவிராஜ், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் ஆஸ்திரேலிய நாடாளுமன்றக் குழுவின் தலைவர் டொனால்ட் டொன் பற்றிஸின் தலைமையிலான குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். (ம-8)

# புலிகள் பயங்கரவாதிகள்தான் என்று அமெரிக்கா பிடிவாதம்!

தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள்தான் என்று அமெரிக்க அரசு பிடிவாதமாக இருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை, வெளிநாட்டுப் பயங்கரவாத இயக்கம் என்று முன்னர் முத்திரை குத்தித் தடை செய்திருந்த அமெரிக்க அரசு அதை மீண்டும் நேற்றுமுன்தினம் உறுதி செய்திருக்கிறது.

இலங்கை அரசுடன் புலிகள் சமாதானம் பேசுகிறார்கள். அதை அமெரிக்க அரசு முற்றுமுழுதாக ஆதரிக்கிறது. அதேவேளை, புலிகள் தமது பயங்கரவாத நடவடிக்கைகளை இன்னும் கைவிடவில்லை. தொடர்ந்து அவற்றில் ஈடுபட்டுவருகிறார்கள் என்று அமெரிக்க அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

வெளிநாட்டுப் பயங்கரவாத இயக்கம் என்று கொள்வதற்கு உரிய நிலையில் புலிகள் இயக்கம் இல்லை.

(16ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் தடை நீடிப்பு கவலை தருகின்ற ஒரு விடயம்

### புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர்

கிளிநொச்சி,செப்.4

விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் இரு ஆண்டுகளுக்கு நீடிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளமை தமக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தி உள்ளதாக புலிகளின் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தடை நீடிப்புக் குறித்து அவர் பி.பி.ஸியின் தமிழோசைக்கு கருத்துத் தெரிவித்த போதே

(16ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தை விட்டோடியோர் சட்டப்படி விலக அமைச்சு அனுமதி

### முதல் கட்டம் கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பம்

கொழும்பு,ஒக்.4

இராணுவத்தை விட்டு வெளியேறி, கடந்த ஜனவரி 8ஆம் திகதியுடன் மூன்று ஆண்டுகளைக் கடந்த படைவீரர்கள் சட்டபூர்வமாக இராணுவத்தை விட்டு விலக அனுமதி வழங்குவதென பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்திருக்கிறது.

இராணுவத்தை விட்டோடிய ஒருவராக சமூகத்தில் அச்சத்துடனும் சந்தேகத்துடனும் கழிந்த காலத்தை முடித்து, பயனுள்ள ஒரு பிரஜையாக வாழ இதன்மூலம் சந்தர்ப்பம் கிட்டும் எனவும், மீண்டும் தொழில் பெறத் தேவையான விலகல் பத்திரத்தை

(16ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான அறிகுறிகள் தென்பட்டதும் புலித் தடை நீக்கத்தை ஆதரிப்போம்

### பொ.ஐ.மு. பேச்சாளர் அமுனுகம கூறுகிறார்

புலிகள் மீதான தடையை அமெரிக்கா மேலும் நீடித்திருப்பதை பொது ஜன ஐக்கிய முன்னணி வரவேற்கின்றது. ஆயினும், சமாதான அறிகுறிகள் தென்பட்டதும் அத்தடை நீக்கப்படுவதை ஆதரிப்போம் எனவும் அது கூறுகிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)



தீருவில் புனிதத் திடலில் புனரமைக்கப்பட்ட பன்னிரு வேங்கைகளின் நினைவுத் தூபியின் தோற்றம். (படம்: கரவெட்டி செய்தியாளர்)

# குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகள் நினைவுதினம் நாளை

வடமராட்சி,ஒக்.4

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளான குமரப்பா, லெப்டினன்ட் கேணல் புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் 16ஆவது நினைவுதினம் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு தீருவில் சதுக்கத்தில் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

கடந்த 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்தவேளை சயனைட் உட்கொண்டு வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இந்த பன்னிரு வேங்கைகளின் நினைவாக தீருவில் புனித சதுக்கத்தில் புனரமைப்புச் செய்யப்பட்ட நினைவுத்தூபியும் அன்றைய தினம் திரை நீக்கம் செய்து வைக்கப்படவிருக்கின்றது.

இதே இடத்தில் முன்னர் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி ஸ்ரீலங்கா படையினரால் துவம்சம் செய்யப்பட்டிருந்தது.

தற்போது அந்தத் தூபி வடமராட்சி மக்களால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த வேங்கைகளின் நினைவு தினம் தொடர்பாக வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கம் நேற்று துண்டுப் பிரசுரம் ஒன்றை விநியோகித்தது.

"எமது வீரர்களை சாவின் பொறிக்குள் தள்ளியது இந்தியா. அது எமது மக்களுக்கு செய்த மன்னிக்கமுடியாத குற்றமாகும். குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் வீரச்சாவு ஒருபெரும் வல்லரசை எதிர்த்து நிற்கும் நெஞ்சுரத்தை எமக்கு ஏற்படுத்தியது" - என்று அந்தத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-70-4-173-150)

# குடாநாட்டில் தொழில் நீதிமன்றம் நிறுவுவதற்கு அமைச்சு அனுமதி

யாழ்ப்பாணம்,ஒக்.4

அடுத்த வருட முற்பகுதியில் குடாநாட்டில் தொழில் நீதிமன்றம் ஒன்றை நிறுவுவதற்கு தொழில் அமைச்சு அனுமதி வழங்கியிருக்கிறது.

நீண்ட காலமாக குடாநாட்டில் தொழில் நீதிமன்றங்கள் இயங்காததால் தொழிலாளர்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை உரிய முறையில் விசாரிக்க முடியாத நிலை இருந்துவந்தது.

அத்துடன், முன்னர் தொழில் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புகளும் நீண்ட காலமாக நடைமுறைப் படுத்தப்படாது இருக்கின்றன.

இந்தநிலையில், மீண்டும் குடாநாட்டில் தொழில் நீதிமன்றம் ஒன்றினை அமைக்குமாறு யாழ்ப்பாணம் தொழிலதிணைக்களம் கடந்த சில வருடங்களாக தொழில் அமைச்சிடம் கோரி வந்தது. இதனையடுத்தே அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் இங்கு தொழில் நீதிமன்றத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தமது அமைச்சைப் பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, குடாநாட்டில் தொழில் நீதி மன்றத்தினால் முன்னர் வழங்கப்பட்ட தீர்ப்புக்களை நடைமுறைப் படுத்தாதோருக்கு எதிராக யாழ்ப்பாணம் தொழில் திணைக்களம் தற்போது யாழ்ப்பாணம் மாவட்ட நீதி மன்றில் வழக்குகளை தாக்கல் செய்து நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# இராணுவவீரர் தற்கொலை!

வாழைச்சேனை, புனானை இராணுவ முகாமைச் சேர்ந்த ஒரு வீரர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் எனக் கூறப்படுகிறது. நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் முகாமுக்குள் வைத்தே அவர் தற்கொலை செய்திருக்கிறார்.

தியத்தலாவை பகுதியைச் சேர்ந்த டி.எம்.சி. திஸாநாயக்க என்பவரே இப் படைவீரராவார்.

ஏதோ ஒரு நோயினால் பீடிக்கப்பட்ட தன்னை தனது காதலி கைவிட்டுச் சென்றதால், மனவேதனை அடைந்து தற்கொலை செய்துகொள்வதாக அவர் கடிதம் ஒன்றில் எழுதியிருக்கிறார் என்று பாதுகாப்புப் படையினர் தெரிவித்திருக்கின்றனர்.

# 10ஆவது இஸ்லாமிய மாநாட்டுக்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு

கொழும்பு,ஒக்.4

எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை மலேசியாவில் நடைபெறும் 10ஆவது இஸ்லாமிய மாநாட்டிற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டின் ஆரம்ப அமர்விலும் இறுதி அமர்விலும் கலந்து கொள்ளுமாறு மலேசியப் பிரதமர் மஹாதிர் மொகமட், பிரதமர் ரணிலுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வதன் மூலம் இஸ்லாமிய நாடுகளுடனான அரசியல், பொருளாதார, சமூக, கலாசார உறவுகளை இலங்கை மேலும் வலுப்படுத்தமுடியும் என்று மலேசியப் பிரதமர் அனுப்பிவைத்துள்ள அழைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் விசேட பிரதிநிதியாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் மலேசியாவில் நடைபெறவுள்ள 10ஆவது இஸ்லாமிய மாநாட்டில் கலந்துகொள்வார் என்று பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தமாநாட்டில் ஒரு முஸ்லிம் கலந்து கொள்வது அர்த்தமுள்ளதாகவும் ஆக்கபூர்வமாகவும் இருக்குமென மலேசியப் பிரதமருக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

பிரமாண்டமான இஸ்லாமிய மாநாடு ஒன்றில் இலங்கை கலந்துகொள்வது இதுவே முதற்றடவை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் மலேசியாவுக்குச் சென்று பேச்சுக்கள் நடத்தியதன் விளைவாக இந்த அழைப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. (ம-8)

# தமிழக அரசு ஒத்துழைத்தால் விரைவில் தூத்துக்குடி - இலங்கை கப்பல் சேவை

## இந்திய மத்திய அமைச்சர் தெரிவிப்பு

தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க மத்திய அரசு தயாராக உள்ளது. இதற்கு தமிழக அரசு ஒத்துழைத்தால் கப்பல் போக்குவரத்து உடனடியாக ஆரம்பிக்கப்படும்.

- இவ்வாறு இந்திய மத்திய கப்பல் போக்குவரத்து இணையமைச்சர் சத்ருகன்சின்கா தெரிவித்தார்.

தூத்துக்குடி துறைமுக நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அமைச்சர் சத்ருகன்சின்கா அங்கு தெரிவித்ததாவது:-

முதன்முறையாக இப்போதுதான் தூத்துக்குடி துறைமுகத்திற்கு வந்துள்ளேன். சுப்பத்தில்தான் சுகாதாரத் துறையிலிருந்து கப்பல் போக்குவரத்து துறையைப் பொறுப்பேற்றேன்.

தூத்துக்குடி துறைமுகம் முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறது. சேது சமுத்திரக் கால்வாய் திட்ட அறிக்கை இம்மாதம் இறுதியில் சமர்ப்பிக்கப்படவேண்டும். ஆனால், தமிழகம் அடுத்த மாதம் 15இல் அறிக்கையை தாக்கல் செய்வதாக அறிவித்துள்ளது.இந்த அறிக்கை நமக்குச் சாதகமாக இருக்கும் என நம்புகிறேன். அதன் பின்னர் கால்வாய் திட்டத்திற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும்.

இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் தமிழகத்தின் பொருளாதார வாசல் விரிவாக்கப்படும்; தொழில்வளம் பெருகும். தூத்துக்குடி - இலங்கை பயணிகள் கப்பல் சேவையை நடத்துவதற்கான அனைத்துப் பணிகளையும் மத்திய அரசு முடித்துவிட்டது. தமிழக அரசு ஒத்துழைத்தால் உடனடியாக கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படும்

### சிறுவர் தின விழா

கொக்குவில் வளர்மதி நிறைவாழ்வக சுவதேச சிறுவர்தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு கொக்குவில் வளர்மதி சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வளர்மதி நிறைவாழ்வக போஷகர்களில் ஒருவரான ஆ.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக 'தாயகம்' சிறுவர் இல்ல இயக்குநர் எஸ்.வி. ஸ்ரீதரனும், சிறப்பு விருந்தினராக வளர்மதி நிறைவாழ்வக போஷகர் சி.விஜயரட்ணமும் கலந்துகொள்வார்கள். இவ்விழாவில் 'சிறுவர் உள நலம்' என்னும் தலைப்பில் டாக்டர் ஜே.சிவசங்கர் சிறப்புரையாற்றுவார் தொடர்ந்து சிறுவர், கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

### கலந்துரையாடல்

யாழ். மாவட்ட பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றி அண்மையில் நிரந்தர நியமனம் பெற்றுக்கொண்டவர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் சேவை உள்வாங்கல் மற்றும் பிரச்சினைகள், தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக சங்கத்தின் பொதுக்செயலாளர் தாமோதரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஏ-10)

# வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் விரைவில் குடாநாட்டிலும் நிறுவப்படும்

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொழில் அமைச்சின் ஏற்பாட்டில் அமையவிருக்கும் இந்த வேலைவாய்ப்புப் பணியகத்தை தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பித்து வைக்கவுள்ளார் என்று கூறப்பட்டது.

இந்த மாதம் 20ஆம், 21ஆம் திகதிகளில் யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள பனை அபிவிருத்திச் சபையின் வெள்ளி விழா நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவென இங்கு வரவிருக்கும் தொழில் அமைச்சர், அன்றையதினமே இங்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஒன்றை ஆரம்பித்து வைப்பார் என்று கூறப்பட்டது.

இந்தப் பணியகம் திறந்து வைக்கப்பட்டால் வேலைவாய்ப்பு மற்றும் ஏனைய தேவைகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்வோர் அது தொடர்பான முன்னேற்பாட்டுப் பணிகளுக்காக கொழும்புக்குச் செல்லவேண்டிய அவசியம் ஏற்படாது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-4)

# கணவனுக்கு ஹெரோயின் வாங்க பிள்ளைகளை விற்றாள் மனைவி!

## விலை 3,750 ரூபா: ஒரு பிள்ளைக்கு 3 வயது; மற்றப் பிள்ளை 7 மாதம்

கொழும்பு,ஒக்.4

ஹெரோயின் போதைப் பொருள் குடிக்க கணவனுக்குப் பணமில்லை. பணமில்லாத கணவனுக்குப் பணம் தேடிக் கொடுக்க மனைவி தனது இரு பிள்ளைகளையும் விற்றாள். இரு பிள்ளைகளினதும் விலை 3 ஆயிரத்து 750 ரூபா!

விற்கப்பட்ட இவ்விரு பிள்ளைகளும் தெஹிவளை பகுதியிலுள்ள இரு வீடுகளிலிருந்து கல்கிசை பொலீஸாரினால் மீட்கப்பட்டனர். பிள்ளைகளை வாங்கிய இரு பெண்களும் பிள்ளைகளை விற்ற தாயும் தந்தையும் கைது செய்யப்பட்டனர்.

விற்கப்பட்ட இரு பிள்ளைகளில் மூத்த பிள்ளையின் வயது 3, மற்றப் பிள்ளையின் வயது 7 மாதம்.

இப்பிள்ளைகளின் தந்தை ஒரு பேக்கர் ஹெரோயின் குடிக்க அவருக்கு ஒரு நாளைக்கு 500 ரூபா தேவை என்பது பொலீஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்திருக்கிறது.

ஹெரோயினுக்கு அடிமையான கணவன், தொழிலுக்குச் செல்லாததால் ஹெரோயின் வாங்க பணம் தேடிக் கொடுக்க வேண்டிய நிலை மனைவிக்கு ஏற்பட்டது. பணம் தேட வழியில்லா ததால் மூத்த பிள்ளையை சில தினங்களுக்கு முன்னர் அவர் 3 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்றிருக்கிறார். அப்பணமும் ஹெரோயினுக்குத் தீர்ந்து போகவே இரண்டாவது பிள்ளையை 250 ரூபாவுக்கு விற்றார்.

இப் பிள்ளைகளின் தாய் கித்துல்கல பகுதியைச் சேர்ந்தவர். கணவனின் ஹெரோயின் பழக்கத்தால் அவர் தனது குடும்பத்திலிருந்து விலகியிருந்தார்.

# பல்கலைக்கழக 2ஆம் வருட மாணவி எரிந்த நிலையில் சடலமாக மீட்பு!



கார்த்திகா

வடமராட்சி,ஒக்.4

யாழ்.பல்கலைக்கழக 2ஆம் வருட மாணவி ஒருவர் நேற்று பூட்டிய அறை ஒன்றினுள் இருந்து எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை, தம்பசிட்டிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதேஇடத்தைச் சேர்ந்த அரியகுணராஜா கார்த்திகா (வயது-22) என்ற மாணவியே கருகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இவர் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தில் இரண்டாம் வருட மாணவியாவார். வீட்டிலுள்ளவர்கள் வேலைநிமித்தம் வெளியே சென்றிருந்த சமயம் கார்த்திகா வீட்டில் தனித்திருந்தார் என்று கூறப்பட்டது. பகல் 11.00 மணியளவில் வீட்டின் கூரையோடுகள் வழியாக புகை மண்டலம் மேற்கிளம்பியதை அவதானித்த அயலவர்கள் ஓடிச்சென்று பார்த்துள்ளனர்.

அப்போது பூட்டிய அறையினுள் இருந்து மண்ணெண்ணெய் வாடையுடன் புகை வந்ததை அவர்கள் அவதானித்துள்ளனர். பூட்டப்பட்டிருந்த அறைக்கதவை உடைத்துத் திறந்த அவர்கள் உள்ளே சென்று பார்த்தபோது மாணவி எரிந்த நிலையில் சடலமாகக் கிடக்கக் காணப்பட்டுள்ளார். சம்பவம் பற்றிப் பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அந்த இடத்துக்கு வந்த பொலீஸார் சடலத்தை மந்திகை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

பருத்தித்துறை பதில் நீதிவான் எஸ்.தங்கராஜா வைத்தியசாலைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். இந்த விசாரணைகளின் போது மாணவி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மன அழுத்த நோய் காரணமாக சிகிச்சை பெற்றிருந்தார் என்பதற்கான வைத்தியச் சான்றிதழ்கள் உறவினர்களால் சமர்ப்பிக்கப்பட்டன. பிரேதபரிசோதனையை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் கதிரவேற்பிள்ளை மேற்கொண்டார்.

விசாரணைகளின் இறுதியில் உடல் எரிகாயங்களால் பாதிக்கப்பட்டமையால் ஊனம் வெளியேறி அதிர்ச்சியால் ஏற்பட்ட மரணம் என்று நீதிவான் தீர்ப்பளித்தார். (ம-8-70-173)

# நல்லூர் உற்சவகாலத் திருட்டுகள்; அநுராதபுரவாசிக்குத் தண்டனை!

யாழ்ப்பாணம், ஒக்.4

நல்லூர் ஆலய உற்சவ காலத்தில் இடம்பெற்ற பலதிருட்டுச் சம்பவங்களில் தொடர்புடையவர் என்று கருதப்பட்டு, யாழ். நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபருக்கு 5 வருடங்களுக்கு ஒத்தி வைத்த 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் உற்சவ காலத்தில் ஆலயப் பகுதியில் இடம்பெற்ற பல திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக 12 சந்தேக நபர்களைக் கைதுசெய்த யாழ். பொலீஸார் கடந்த 9ஆம் திகதி யாழ் நீதிமன்றில் அவர்களை ஆஜர் செய்தனர்.

அதில் பிரதான சந்தேக நபரான 3 ஆம் கட்டை, சாளியபுரம், அநுராதபுரத்தைச் சேர்ந்த நாகராசா சண்முகநாதன் என்பவரைத் தவிர ஏனைய 11 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ். நீதிமன்றில் இடம்பெற்றது. இதன் முடிவில் யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் குறிப்பிட்ட சந்தேக நபருக்கு 5வருடங்களுக்கு ஒத்தி வைத்த 6 மாத சிறைத்தண்டனையை விதித்தார். (ஏ-5)

### வென்னப்புவ விபத்தில் இருவர் பலியாகினர்!

கொழும்பு,ஒக்.4

வென்னப்புவ, போலவத்த சந்தியில் நேற்று நடைபெற்ற ஒரு விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

வீதியோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கற்கள் ஏற்றப்பட்ட ஒரு 'டிப்பர்' லொறியின் பின்புறத்தில் மோட்டார் சைக்கள் ஒன்று மோதியதில் அதில் பயணம் செய்த இருவரும் உயிரிழந்தனர். கொல்லப்பட்டவர்களில் ஒருவர் தங்கொட்டுவ பகுதியையும் மற்றையவர் கண்டிப்பகுதியையும் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

# பேரழிவு ஆயுதங்கள் ஈராக்கில் இல்லை; தேடுதலில் ஈடுபட்ட சி.ஐ.ஏ. கைவிரிப்பு

## மூடிய கதவுக்கு பின்னால் அறிக்கை சமர்ப்பிப்பு

வாஷிங்ரன்,ஒக்.4

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்று அங்கு தேடுதலில் ஈடுபட்ட சி.ஐ.ஏ. அதிகாரிகள் குழு அமெரிக்க நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளது.

அத்துடன், தனது தேடுதல் குறித்து அறிக்கையையும் அது இரகசியமாக அமெரிக்க காங்கிரஸ் அதிகாரிகளுக்கு வழங்கியது.

அந்த அறிக்கையிலேயே ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்ற முடிவை, தேடுதலில் ஈடுபட்ட சி.ஐ.ஏ. குழுவின் தலைவர் டேவிட் கே தெரிவித்திருக்கிறார்.

அறிக்கையைக் கையளித்த டேவிட் கே, செய்தியாளர்களுக்கு பேட்டியும் வழங்கினார்.

பேட்டியில் அவர் கூறியதாவது:-

நாம் ஈராக்கில் கடந்த சில மாதங்களாகத் தேடுதல்களை நடத்தினோம். ஆனால், அங்கு இதுவரை பேரழிவு ஆயுதங்கள் எதனையும் எம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆனால், பேரழிவு ஆயுதங்கள் தயாரிப்பிற்கான உபகரணங்கள், அதற்கான ஆவணங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டன. ஆனாலும், அவற்றை வைத்து பேரழிவு ஆயுதங்களைத் தயாரிக்க முடியாது.

இதனால், ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

பேரழிவு ஆயுதங்கள் போருக்கு முன்பு அங்கு இருந்தனவா?

அல்லது இப்போது அங்கே அவை இல்லையா என்பது பற்றி தீர்க்கமான முடிவைக் கூற முடியாது - என்றார்.

ஈராக் போர் குறித்த சர்ச்சை கிளம்ப ஆரம்பித்ததும் அமெரிக்க நிர்வாகத்தால் இந்தக் குழு கடந்த மே மாதம் உருவாக்கப்பட்டு பக்தாத்திற்கு அனுப்பப்பட்டது. இந்தக் குழுவில் அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா ஆகிய மூன்று நாடுகளைச் சேர்ந்த 1,200 பேர் உள்ளனர். இதன் தலைமையகம் அமெரிக்காவிலும் கிளைகள் பக்தாத்திலும், சவூதியிலும் இயங்குகின்றன.

இந்த அறிக்கை குறித்து பிரிட்டிஷ் வெளியுறவுச் செயலாளர் கூறுகையில்:-

ஈராக் ஜனாதிபதி சதாம் பதவி விலக்கப்பட்டதை இந்த அறிக்கை நியாயப்படுத்துகிறது. இந்த ஆட்சி எத்தகைய ஆபத்தானதாக இருந்தது என்பது அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது - என்று போரை நியாயப்படுத்திக் கூறியுள்ளார்.

ஈராக்கைப் புனரமைக்கவும், அங்கு கடமையில் இருக்கும் அமெரிக்கப் படையினருக்கு செலவிடுவதற்குமென ஜனாதிபதி புஷ் காங்கிரஸிடம் 7 பில்லியன் டொலர்களைக் கோரியுள்ள நிலையிலேயே மேற்படி அறிக்கை வெளியாகியுள்ளது.

இந்த அறிக்கையை வைத்தே ஜனாதிபதி புஷ் கோரிய தொகையை வழங்குவது குறித்து காங்கிரஸ் பரிசீலிக்குமெனக் கூறப்படுகிறது. (ஐ)



ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் உள்ளதாகச் சந்தேகிக்கப்பட்ட இடங்களில் ஒன்று.

# சர்வதேச பயங்கரவாதியாக புஷ்ஷை சித்திரிப்பது குற்றமல்ல

## அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு

வேர்ஜினியா,ஒக்.4

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷை சர்வதேச பயங்கரவாதியாக சித்திரிக்கும் ரி.ஷேட்டை அணிந்திருந்தமை சட்டத்திற்கு முரண் அல்ல என்று அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது.

ஜனாதிபதி புஷ்ஷின் படத்துடன் கூடிய 'சர்வதேச பயங்கரவாதி' என்ற எழுத்து பொறிக்கப்பட்ட ரி.ஷேட்டை பதினாறு வயது மாணவன் அணிந்திருந்தமை சட்டத்திற்கு முரண் என்று வழங்குத் தொடரப்பட்டது. இந்த வழங்கை விசாரித்த நீதிபதி மேற்படி ரி.ஷேட்டை அணிந்தமை சட்டத்திற்கு முரண் அல்ல என்று தீர்ப்புக் கூறினார்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

பதினாறு வயதான மாணவன் பிரிட்டொன் பார்பர் கட்டுரைப்போட்டி ஒன்றில் பங்குபற்றுவதற்காக மேற்படி ரி.ஷேட்டை அணிந்து கடந்த பெப்ரவரி மாதம் பாடசாலைக்குச் சென்றுள்ளான்.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்பவர்களில் பெரும்பாலானோர் அரபு மாணவர்கள். அங்கு 'ஒற்றுமை வேற்றுமைகளில் ஒப்பீடு' என்ற தலைப்பில் ஆங்கில மொழியிலான கட்டுரைப் போட்டி அன்றைய தினம் நடந்தது.

அங்கு, பிரிட்டொன் பார்பர் அணிந்திருந்த ரி.ஷேட்டை அவதானித்த பாடசாலையின் உப அதிபர், அவரை அழைத்து ரி.ஷேட்டை கழற்றி விடுமாறு உத்தரவிட்டார். மறுத்துவிட்டால் அவரை வீட்டிற்கு போகுமாறும் அவர் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக வழக்குத் தொடரப்பட்டது.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. மாணவர் அணிந்திருந்த ரி.ஷேட் குழப்பத்தையோ அல்லது பீதியையோ ஏற்படுத்தவில்லை என்று தெரிவித்த நீதிபதி, மாணவனை குற்றமற்றவர் என்று கூறி தீர்ப்பளித்தார்.

# மணம்புரிந்த ருமேனிய சிறுசுகளை பிரிந்திருக்க அதிகாரிகள் உத்தரவு

சியூபி,ஒக்.4

ருமேனிய சிறுசுகளின் திருமணம் சர்வதேச ரீதியில் சூடுபிடித்திருப்பதையடுத்து, மணமகளும், மணமகனும் பிரிந்திருக்க வேண்டுமென அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

அனாமரியா (வயது12), பிரிட்டா (வயது15) என்ற இந்த சிறுசுகளின் திருமணம் பெற்றோர்களின் முன்னிலையில் கடந்த சனிக்கிழமை நடந்தது.

சுமார் ஒரு வாரம் கழிந்த நிலையில் சிறுசுகளின் இந்தத் திருமணம் குறித்து பொலஸார் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றனர்.

மணமக்களின் பெற்றோர் முதல் கட்டமாக வாக்குமூலம் அளித்துள்ளனர். மணமக்களிடம் இனிமேல் தான் விசாரணை நடைபெறவுள்ளது.

அத்துடன், ருமேனியச் சட்டப்படி பதினாறு வயதுக்கு மேற்பட்டவர்களே திருமணம் முடிக்கலாம் என்பதால், மணமக்கள் இருவரையும் பிரிந்திருக்கும்படி அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

500 பொற்காசுகளைப் பெற்றுக் கொண்டு அனாமரியாவை திருமணம் செய்து கொடுப்பதாக அவள் ஏழு வயதாக இருக்கும்போது வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது.

# மதகுருமாரின் சேஷ்டைகளால் அயர்லாந்து அரசுக்கு சங்கடம்

உலக அரங்கில்

மதகுருமாரின் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகள் சரியாக வழங்கப்படாமை குறித்து அயர்லாந்து அரசாங்கத்தின் மீது பாரதூரமான கண்டனங்கள் எழுந்துள்ளன.

கத்தோலிக்க தேவாலயங்களில் பாலியல் ரீதியானதும், உடல் ரீதியானதுமான துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீடுகளை பிரதமர் ஏர்ன் மற்றும் அவரது அமைச்சரவை சகாக்கள் குறைத்து மதிப்பீடு செய்துள்ளதாக எதிர்க்கட்சிகள் ஐரிஷ் நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டியுள்ளன.

கத்தோலிக்க மத பீடங்களால் 1930 - 1970 காலப்பகுதியில் நடத்தப்பட்ட மடங்களில் ஆயிரக்கணக்கான பெண்களும், சிறுவர்களும் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டனர்.

இவர்களுக்கு வழங்கவேண்டிய இழப்பீட்டுத் தொகையையே அரசு குறைத்து மதிப்பீடு செய்துள்ளது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. 130 மில்லியன் யூரோ நாணயங்களை பாலியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு அல்லது அவர்களின் குடும்பங்களுக்கு வழங்க அங்குள்ள கத்தோலிக்க நிர்வாகம் சம்மதித்திருந்தது.

ஆனால், இந்த இழப்பீட்டுத் தொகை போதாது என்று கூறும் எதிர்க்கட்சிகள், மதகுருமார்களுக்கு அரசும் உடந்தையாகிறது என்று குற்றஞ்சாட்டியுள்ளது.

மதகுருமாரின் பாலியல் சேஷ்டைகளுக்கு உட்பட்ட பதினாறாயிரம் பேர் இழப்பீடு கோரி சட்டமா அதிபர் திணைக்களத்தில் விண்ணப்பித்துள்ளனர்.

அயர்லாந்தில் மதகுருமாரினால் மக்கள் துன்புறுத்தப்படுவது சாதாரண விடயமாகிவிட்டது என்று ஊடகத்துறையினர் தெரிவித்திருக்கின்றனர்.

## பிரேஸிலில் நிதி மோசடி!

பிரேஸிலில் 90 மில்லியன் டொலர் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி மோசடியை 24 அரச உயர் அதிகாரிகள் இணைந்து செய்துள்ளனர் என்று பொலீஸார் கூறுகின்றனர். நிதிமோசடி குறித்து மேற்படி 24 பேரிடமும் விசாரணை நடைபெறுகிறது.

வர்த்தக நிறுவனங்கள் அரசிற்கு வழங்கியிருந்த வரி, காப்புறுதி தொகை சுமார் 90 மில்லியன் டொலர் பதிவுகளை மேற்படி 24 பேரும் ஆவணங்களிலிருந்து அழித்துள்ளனர்.

இந்த மோசடியைச் செய்வதற்கு உடந்தையாக இருந்த வர்த்தக நிறுவனங்கள் சிலவற்றுக்கு இவர்கள் கமிஷன் வழங்கினர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மோசடி செய்யப்பட்ட உண்மைத் தொகை இதனைவிட நான்கு மடங்காக இருக்கலாம் என்று மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. மேற்படி அரச உயர் அதிகாரிகள் 24 பேரும் நாடு முழுவதும் கடந்த இரு வருடங்களாக பெரும் நிதி மோசடி செய்தவர்கள் என்பது விசாரணையில் தெரியவருகிறது.

# அணு குண்டுகள் தயாரிப்பதாக வடகொரியா பகிரங்க அறிவிப்பு!

தன்னிடம் கைவசம் இருக்கும் புளூடோனியத்தைக் கொண்டு அணு குண்டுகளைத் தயாரித்து வருவதாக வடகொரிய பகிரங்கமாக அறிவித்துள்ளது.

வடகொரியாவின் அதிகாரபூர்வ அரச இணையத்தளம் இத்தகவலைத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் மிலேச்சத்தனமான கொள்கை காரணமாகவே அணுகுண்டுகளைத் தயாரிப்பதாக அந்த இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், புளூடோனியத்தைக் கொண்டு தனது அணு சக்தியை அதிகரிக்க உள்ளதாகவும் அது அறிவித்துள்ளது.

தலைநகர் பியங் யொங்கிற்கு வடக்காக உள்ள அணு சக்தி வளாகம் ஒன்றிலேயே அணு குண்டுகள் தயாரிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு முயற்சிகளிலிருந்து தன்னைப் பாதுகாக்கும் முன்னேற்பாடாக இக்குண்டுகளைத் தயாரிப்பதாகவும் அந்த இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடகொரியா ஆறுக்கும் மேற்பட்ட அணு குண்டுகளை வைத்திருக்கலாம் என்று அமெரிக்கா கூறியிருந்த நிலையிலேயே வடகொரியாவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

# ஆஸ்திரேலிய வானொலிச் செய்திக்கு பாப்பரசரின் செயலாளர் கண்டனம்

வத்திக்கான்,ஒக்.4

பாப்பரசர் இறக்கும் தறுவாயிலில் உள்ளார் என்று ஆஸ்திரேலிய வானொலி வெளியிட்ட செய்திக்கு பாப்பரசரின் செயலர் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

வியன்னாவிலிருக்கும் அதிமேற்றாணியார் ஒருவர் தெரிவித்ததாகக் கூறியே மேற்படி செய்தி ஒலிபரப்பப்பட்டது.

இது குறித்து பாப்பரசரின் செயலர் கூறியதாவது:-

குடல் தொடர்பான வியாதி ஒன்றினாலேயே பாப்பரசர் அவதிப்படுகிறார். இது ஒரு பாரதூரமான வியாதி அல்ல. ஆனால், பாப்பரசர் இறக்கும் தறுவாயிலிலுள்ளார் என்று செய்திகள் வெளியாகிவருகின்றன. இது உண்மைக்குப் புறம்பானது.

நேற்றுமுன்தினம் அவர் லுதுவேனிய ஜனாதிபதி ரொலண்டாஸ் பக்சானிடம் 15 நிமிடம் பேசினார். மற்றும் மூவரையும் அவர் சந்தித்தார். தற்போது அவர் நல்ல நிலையில் இருக்கிறார் என்றார் அவர்.

83 வயதான பாப்பரசர் கடந்த புதன்கிழமை தேவாலயத்திற்கு சமுகமளிக்காதுவிட்டதையடுத்து அவர் கடும் சுகவீனமுற்றிருக்கிறார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

# ஷ்வாஸ்நேகரின் பாலியல் சேஷ்டைகள் அமெரிக்கப் பத்திரிகையில் அம்பலம்!

## அதற்கு அவர் பகிரங்க மன்னிப்புக் கோரினார்

வாஷிங்ரன்,ஒக்.4

கலிபோர்னிய ஆளுநர் தேர்தலில் போட்டியிடும் நடிகர் ஆனோல்ட் ஷ்வாஸ்நேகர் தனது பாலியல் நடத்தைகளால் பலரை இம்சைப்படுத்தியிருந்ததை ஒப்புக்கொண்டுள்ளார்.

'அந்நேரத்தில் இதனை விளையாட்டாகவே செய்துவந்தேன். ஆனால், பெண்கள் அதனால் பாதிக்கப்பட்டனர் என்று இப்பொழுது உணர்கிறேன்' என்று கலிபோர்னிய தேர்தல் பிரசாரம் ஒன்றில் அவர் பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார்.

லொஸ்ஏஞ்சல்ஸ் டைம்ஸ் பத்திரிகையே ஆர்னோல்டின் பாலியல் சேஷ்டைகளை கடந்த வாரம் அம்பலப்படுத்தியது. ஆறு பெண்கள் இவரின் சேஷ்டைகளால் பாதிக்கப்பட்டனர் என்று அப்பத்திரிகை கூறியிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டை பகிரங்கமாக ஒத்துக்கொண்ட ஆனோல்ட், அதற்கு மன்னிப்பும் கோரியுள்ளார்.

ஆர்னோலடின் பாலியல் சேஷ்டை அம்பலமாகியுள்ளதால் அவருக்கு கலிபோர்னிய ஆளுநர் தேர்தலில் செல்வாக்கு சரியும் என்று கூறப்படுகிறது.

ஆனாலும், தற்போதைய கருத்துக் கணிப்பின்படி அவரே முன்னிலையில் திகழ்கிறார்.

மேற்படி பத்திரிகை ஆர்னோலால் பாதிக்கப்பட்ட பெண்களைப் பேட்டி கண்டு எழுதியிருக்கிறது. ஆனோல்ட்டின் சேஷ்டைகள் எப்படி எப்படி இருந்தன என்றெல்லாம் அதில் விபரமாக எழுதப்பட்டிருக்கிறது. ஒரு பிரபல நடிகராக இருந்தாலும் தனது நடத்தைக்காக மன்னிப்புக்கோரும் நிலை ஆர்னோல்டுக்கு வந்திருப்பதாக விமர்சிக்கப்படுகிறது.




சாவகச்சேரி வாரியப்பர் சிவன்கோயில் புராதன தான்தோன்றீஸ்வரர்

அருள்மிகு அமிர்தபாஷிணி அம்பாள் சமேத வாரிவனநாத சுவாமி தேவஸ்தானம்

கேதாரகௌரி விரதபூஜை விஞ்ஞாபனம்

கேதாரகௌரி விரதபூஜை 05.10.2003 புரட்டாதி 18ஆம் நாள் ஞாயிறு முதல் ஆரம்பமாகி தொடர்ந்து 21 தினங்கள் முன்னைய ஆண்டுகளில் நிகழ்வுற்றது போல் தலவிருட்சம் இத்தி சிவன் வாரிவனநாத சுவாமி அமிர்த பாஷிணி அம்பாளுக்கு சிறப்புற பூஜைவழிபாடுகள் நடைபெறவுள்ளன.

வாரியப்பர் சிவனுடன் கேதாரகௌரியம்பாள் அமிர்த பாஷிணியை துதித்து விரத பலன் பெறுவோமாக!

ஆலய பிரதமகுரு:

சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ து.கு ஜெகதீஸ்வரக் குருக்கள் - புன்னாலைக்கட்டுவன்.

திரு.இராமநாதன் கருணாகரன்
ஆலய தர்மகர்த்தா.

பிரம்மஸ்ரீ இ.சுரேஸ்வரசர்மா
ஆலய ஸ்தானிக்குரு
போன் - 077 - 6159011.

(23276) (31-11-14)

உ
ஸ்ரீ ராம ஜெயம்

# யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்-04.10.2003

ஸ்ரீ ராம ஜெயம்


## ஆலய பிரதம குருவின் ஆசியுரை

ஈழத்து திருப்பதி என போற்றப்படும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளின் இரதோற்சவம் இன்று நிகழ்கின்றது. செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே என குலசேகராழ்வாரினால் போற்றித் துதிக்கப்படும் ஸ்ரீ மந் நாராயணன் எமது துயரங்களை நீக்க வல்லவன். தன்னையே கதி என சரணடைந்தவர்களை அவன் ஒரு போதும் கைவிட்டதில்லை. தர்மம் அழிந்து அதர்மம் தழைக்கும் வேளையில் பகவான் அவதாரம் எடுத்து தர்மத்தை நிலை நாட்டுகின்றார். ஏனைய தெய்வங்களில் இல்லாத சிறப்பு ஸ்ரீ மந் நாராயணனுக்குரியது. அவர் மனிதரிடையே பிறந்து மானிடர் உய்வதற்கு வழிகாட்டினார். அவை என்றும் போற்றப்படும் மகாபாரத, இராமாயண இதிஹாசங்களாகத் திகழ்கின்றன.

சர்வ ரட்ஷகரும், பகவத்கீதையை உலகிற்குத் தந்தவனுமான பகவான், ஸ்ரீதேவி, பூமிதேவி சஹிதராக இன்று அழகிய ரதத்தில் உலா வருகிறார். வடம் தொட்டு இழுத்து அவனின் பேரழகைக் கண்டு தரிசித்து உய்ய வரும் அடியார்களுக்கும் மற்றும் அனைவருக்கும் சகல வளங்களும் கிடைக்கப்பிரார்த்தித்து எமது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

"வேறொன்றிலும் புலன்களை செலுத்தாது என்னை வழிபடுகின்ற பக்தனுடைய யோகக்ஷேமங்களை நான் தாங்குகின்றேன்"
பகவத்கீதை

ஸ்ரீவத்ஸ. வ. இராஜேஸ்வரக் குருக்கள்
பிரதமகுரு ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.



## தேரேறி வந்திடும் தேவாதி தேவனே!

நீங்காது நெஞ்சங்களில் நிறைந்து நிலைத்திருக்கும்
நீல வண்ணக் கண்ணனே ஜாலங்களில் மன்னனே
தாங்காத வேதனைகள் தீர்த்திடும் திருமாலே
தாமோதரனே கோவிந்தா! கோபாலா!! கேசவா!!!
பாங்காகவே நல்ல கண்ணன் பக்தர்கள் புடைசூழ
தேரேறி வந்திடும் தேவாதி தேவனே! வேங்கடவா!!
ரீங்காரமிடும் வண்டுகள் நிறை மாலையணிமார்பனே!!
வேங்கடேச வரதராஜப் பெருமாளே சரணம்! சரணம்!!

"கவிமணி"
-இராசையா ஸ்ரீதரன்

## கண்ணனைக்காண வாரீர்

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் செருக்கிளரும்
பொன் ஆழிகண்டேன் புரி சங்கம் கைக்கண்டேன்
என் ஆழிவண்ணன் பால் இன்று
எமது ஈழத்திருப்பதிவாசன்
வண்ணை நகர் வளம் பெறவிளங்கும்
வள்ளல் ஸ்ரீவேங்கடவரதன் தேரில்
எழுந்தருளும் அரும் பெரும் காட்சியைத்
தரிசிக்க இவன் முற்றம் கூடும் அடியார்
கூட்டம் கோவிந்தா! கோவிந்தா!
என்று பக்திப் பரவசத்துடன் பரவும் காட்சி
காணவாரீர்!
திரு வேங்கடநாதன் தேரில் ஆரோகணிக்கும்
சிறப்புக் காணவாரீர்!
ஜடா முடி தரித்து துளாய் மலர் சூடும்
பிரானைக் காணவாரீர்!
கமலத் திருவினுக்கு அரசன் தேரில் உலா
வரும் காட்சி காணவாரீர்!
அணி அரங்கத்துப் பள்ளி கொள்ளும்
மாயோன் பவனி வரும் காட்சி காணவாரீர்!

முகில் உருவாய் கனல் உருவாய்
புனல் உருவாய் நிற்கும் எந்தையின் திருவுரு
காணவாரீர்!
உறிமேல் நறு நெய் உண்ட அமுதனைத் தரிசிக்க
வாரீர்!
மாபலி அகந்தை அகற்ற குறளாய்
வந்து மூவுலகு அளந்ததிரிவிக்கிரமனைக்
காணவாரீர்!
திரு வேங்கடமலை மீது உறையும்
இறையை வணங்க வாரீர்!
பார்மகள் பூமங்கையொடு பொலிந்து
நிற்கும் வரதனைக் காணவாரீர்!
சிவன் பிரமன் இந்திரன் வானவர்க்குநாய
கராக திகழும் நாராயணனை வணங்கவாரீர்!
வேதம் நான்கும் உணர்ந்த வேதியனை
துதிக்கவாரீர்!
பிணி பசி மூப்புத் துன்பம் அகற்றும்
வித்தகனை வணங்கவாரீர்!
அறந்திகழத் தோன்றிய அண்ணல் இராமனைத்
துதிக்கவாரீர்!
பாண்டவர்க்குத் தூது சென்று பாரதப் போர்
முடித்த பார்த்த சாரதியைக் காண வாரீர்!
வாட்கலி ஆறையிடச் செல்வனாய்த் தோன்றி
ஆட்கொண்ட மாலைத் தரிசிக்கவாரீர்!
கணிகை பால்மையல் கொண்ட தொண்டரடிப்
பொடியின் பழவினை அகற்றிய
அரங்கனைத் துதிசெய்யவாரீர்!
வலமார் பினில் வாழ் மங்கை மணாளனை ரத
ஊர்தியில் காணவாரீர்!
வேண்டுவார் வேண்டும் வரனை ஈந்தருளும்
வேங்கடேசன் தாள் பணியவாரீர்!

நா. ஸ்ரீரஞ்சன்
தலைவர், ஆத்ம மகா சபை,
வண்ணை ஸ்ரீவேங்கடேச
வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.


விழா சிறப்புற வாழ்த்துவோர்...

உறுதியான உத்தரவாதம் மிக்க நகைகளுக்கு
நதியா நகைமாடம்
149, 02, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். ☎:021-3479
நிதியா நகைமாடம்
99, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
பெஷன் மொடன் ஜுவல்லறி
129, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/30517)

LANKA (PVT) LTD. இன் அங்கீகாரம் பெற்ற
யாழ். TVS மோட்டார் சைக்கிள் விற்பனை முகவர்
யசோ மோட்டோர்ஸ்
163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
☎:222 2544
(C/30519)

சிறப்பு மிக்க மூக்குக் கண்ணாடிகளுக்கு
சிறந்த இடம்
எரிக் கணேஷ்
564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். ☎: 222 2486
(C/30496)

நவீன பாணியிலான நகைகளுக்குச்
சிறந்த இடம்
நியூ விதுஷன் நகைமாடம்
6, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/30501)

நல்ல தரமான பொருள்களுக்கு
நாடுங்கள்
மகேந்திரன் ஸ்ரோர்ஸ்
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/30502)

நவநாகரிக நகைகளுக்கு
நம்பிக்கையான ஸ்தாபனம்
ஸ்ரீ லக்சுமி ஜுவல்லறி
220A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/30504)

நம்பிக்கையான நகைகளுக்கு
நாணயம்மிக்க இடம்
பொ. அம்பலவாணர் நகைமாளிகை
119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/30505)

நவ நாரீமணிகளுக்கேற்ற
நகைகளுக்குச் சிறந்த இடம்
சாரங்கா நகைமாடம்
157/1, 15, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். ☎:021 222 2480
(C/30495)

விழா சிறப்புற வாழ்த்துவோர்...

நல்ல தரமான மின்சாரப் பொருள்களுக்கு
நாடுங்கள்:
யாழ்ப்பாண மின்னகம்
141, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். ☎ 222 5766
(C/30498)

நவீன பாணி சாறி வகைகளுக்கு
நாடவேண்டிய இடம்:
மகாநதி புடைவையகம்
16, நவீன சந்தை, யாழ்ப்பாணம். ☎ 222 2552
(C/30499)

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு சிறந்த இடம்
சானுகா நகைமாடம்
200C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். ☎: 021 222 3700
(C/30500)

ருசிமிக்க குளிர்பான சிற்றுண்டிகளுக்கு
லிங்கன் கிறீம் ஹவுஸ்
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/30518)

புத்தம் புதிய ஆடைகளுக்கு
"அஜந்தாஸ்" ரெக்ஸ்ரைல்ஸ்
54, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம். ☎: 021 222 2899
(C/30515)

விழா சிறப்புற வாழ்த்துவோர்...

அழகு மிளிரும் அலங்காரப் படங்களுக்கு
சிறந்த இடம்
போட்டோ ரவி அன் வீடியோ
இல. 130, கன்னாதிட்டி வீதி
(சயன்ஸ் ஹோல் முன்பாக), யாழ்ப்பாணம்.
☎ :0777-110015, 021 222 6921
(C/30494)

நிறப்பூச்சு, சுண்ணாம்பு, கலர் பவுடர்கள்,
கட்டடப் பொருள்கள் விற்பனையாளர்!
வேல் முருகன் வணிக நிலையம்
56A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C/30491)

மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோ வாகனங்கள்
நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள்
மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
கஜன் மோட்டோர்ஸ்
இல. 54, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C/30492)

இன்ரநெற், ஈமெயில்,
பக்ஸ், போட்டோப் பிரதிகளுக்கு
அருள் கொமினிக்கேஷன்
இல. 01, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். ☎: 021 222 3536
(C/30493)

மின்சார உபகரணங்கள், எஸ்.லோன் பைப்
வகைகள், சைக்கிள் உதிரிப்பாகங்கள்
விற்பனையாளர்
சிவதர்ஷன்
இல. 394, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். ☎:021 222 2417
(C/30490)

மறுசீரமைக்கப்பட்ட யப்பான் சைக்கிள்
மற்றும் பாஸ்கெற், பூட்டு, டைனமோ, கரியல், பெல்,
கியர், இத்தனையும் கொண்ட சைக்கிள்
பெற்றிடலாம்.
முருகா ஏஜென்சி
நாவலர், வீதி (பிறவுண் வீதிச் சந்தி),
யாழ்ப்பாணம்.
(C/30503)

மொத்த, சில்லறை விற்பனையாளர்
ஏகாம்பரம் புடைவை மாளிகை
(72) 9, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம். ☎:021 222 2151
(C/30514)

ருசி மிக்க உணவு வகைகளுக்கு
சுவிஸ் விருந்தகம்
352, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C/30497)

உதயன்

## இனவாதம் கிளப்புவோர் சாதிக்கப்போவது என்ன?

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆலோசனைகளை அரசிடம் சமர்ப்பிக்கும் தினத்தில் நாட்டில் பரவலாகக் கலவரங்களை ஏற்படுத்தி நாட்டைத் தீவைத்துக் கொளுத்த எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. ஆனால், அதனை முறியடிக்க அரசு தயாராக இருக்கிறது. முப்படையினரும் உஷார்ப்படுத்தப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

அமைச்சரவைப் பேச்சாளரும் அரசமைப்பு விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் செய்தியாளர்களிடம் இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

பிரதான எதிர்க்கட்சிகள் - குறிப்பாக பேரினவாதப் போக்குடைய ஜே.வி.பி. போன்ற கட்சிகள் - அண்மைக் காலத்தில் மேற்கொண்டுவரும் பிரசார நடவடிக்கைகளும் அவற்றின் போக்கும் அமைச்சர் பீரிஸ் வெளியிட்ட தகவல்களை உறுதிப்படுத்துபவையாகவே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப்பூசலுக்கு சமாதான வழியில் அமைதித் தீர்வு காண்பதற்காக ஐக்கிய தேசிய முன்னணி அரசு எடுத்துவரும் முயற்சிகளை முறியடிப்பதற்கு இனவாதத்தை பெரும் ஆயுதமாகக் கையிலெடுத்திருக்கின்றது பேரினவாதம்.

இனவாதத்தைத் தூண்டும் விதத்தில் - பெரும்பான்மையினரின் உணர்ச்சியைக் கிளறிவிடும் வகையில் - தென்னிலங்கையில் அண்மைக்காலத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு போராட்டங்களின் பின்னணி இதுதான்.

இனவாதப் பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், பாதயாத்திரைகள் போன்றவற்றை நடத்துதல், தொழிற்சங்கப் போராட்டங்கள், நடவடிக்கைகளை மேற்கொண்டு பொதுச் சேவைகளை ஸ்தம்பிக்கச் செய்தல், வன்முறைகளைத் தூண்டி நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்துதல் போன்றவை இத்தீய சக்திகளின் திட்டங்களில் அடங்கும்.

இவையாவும் இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வுகாண முயலும் அரசை, அந்த முயற்சியில் வெற்றிபெறவிடாமல் தடுத்து வீட்டுக்கு அனுப்புவதை நோக்கமாகக் கொண்டவை.

நாட்டின் யதார்த்தபூர்வமான நிலையை உணராத - இந்த இனவாத சக்திகள், தமது இத்தகைய நடவடிக்கைகள் மூலம் சாதிக்கப்போவது என்ன?

தமிழ்பேசும் மக்களுக்கு - சிறுபான்மையினருக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதை இந்தச் சக்திகள கடுமையாக எதிர்க்கின்றன. அதைத் தடுப்பதற்காகவே இந்த இனவாதக் கூச்சலும், கிளர்ச்சியும், போராட்டங்களும்.

சரி, இந்த சக்திகள் எதிர்பார்ப்பது போல சிறுபான்மையினருக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு பெரும்பான்மைச் சிங்களவர்கள் - முக்கியமாக அரசு - இணங்காவிட்டால் என்ன நடக்கும்? சிறுபான்மையினரின் நியாயமான அபிலாஷைகளை நிறைவுசெய்யப் பெரும்பான்மையினர் சம்மதிக்காமல், தொடர்ந்து சிறுபான்மையினரை அடக்கி ஆளும் தங்கள் போக்கை அவர்கள் தொடர்ந்தால் அதன் விளைவு என்னவாகும்?

பேரினவாத அடக்குமுறைக்கு எதிரான சிறுபான்மையினரின் - குறிப்பாகத் தமிழரின் - விடுதலைப் போராட்டம் இன்று அடக்கப்படமுடியாத அளவுக்கு விஸ்வரூபம் எடுத்துள்ளது. இரண்டு தசாப்த கால இனப்போரில் அரசுத்தரப்பு கற்றுக்கொண்ட பாடம் அதுதான்.

தமிழர்கள் பிரிந்து செல்வதா அல்லது ஐக்கிய இலங்கைக்குள் சிங்களவர்களுடன் அதிகாரப் பகிர்வு செய்து இணைந்து வாழ்வதா என்று தீர்மானிக்க வேண்டிய இறுதிக்கட்டத்தில் நமது நாடு உள்ளது.

தமிழரின் விடுதலைப்போராட்டத்துக்கு இராணுவ வழியில் தீர்வுகாண முடியாது என்பதை நன்கு உணர்ந்த பின்னரே ரணிலின் அரசு சமரசத் தீர்வு முயற்சிக்கு முன் வந்தது.

அத்தோடு, அந்தப் போராட்டத்தைக் கட்டுப்படுத்தி வைப்பதற்கு இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு, அனுதாபம், உதவி, பரிவு அனைத்தும் அத்தியாவசியம்.

அதனைத் தக்கவைப்பதாயின் தமிழரின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் வகையில் அவர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்குவதும் கட்டாயமானதாகும்.

'இதனை ரணிலின் அரசு நிறைவுசெய்வதைத் தடுக்கும் வகையில் சிங்களப்பேரினவாதிகள் தற்போது கிளப்பும் இனவாதம் செயலில் பலிக்குமானால், இனயுத்தம் மீண்டும் வெடிப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

மேலும் அதிகாரப் பகிர்வுக்கு - அமைதித் தீர்வுக்கு - பெரும்பான்மையினர் மறுத்தமையே இனயுத்தம் மீண்டும் வெடிப்பதற்குக் காரணம் என்ற நிலைமை வந்தால் உள்நாட்டுப்போரில், சர்வதேச ஆதரவை பெரும்பான்மையினர் தரப்பு இழந்துவிடும்.

இந்தச் சூழ்நிலை தமிழர் தரப்புக்குத்தான் வாய்ப்பானதாகப் போய் முடியும் என்பதை இனவாதம் கிளப்புவோர் புரிந்துகொள்வது நல்லது.

# சுயாட்சியுடன் கூடிய இடைக்கால நிர்வாகமே எமது தேவையென அரசிடம் வலியுறுத்துங்கள்!

## தலைவர் பிரபாவிடம் பாடசாலை அதிபர்கள் வேண்டுகோள்

தென்மராட்சி,ஒக்.4

சுயாட்சியுடைய இடைக்கால நிர்வாகசபையே தேவையென அரசிடம் வலியுறுத்துங்கள்.

- இவ்வாறு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடம் தென்மராட்சிப் பாடசாலைகளின் அதிபர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்தக் கோரிக்கையைக் குறிப்பிட்டு தலைவர் பிரபாகரனுக்கு அச்சங்கம் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்நாட்டின் பூர்வீகக் குடிகளில் ஒன்றான தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகள் 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் அரசமைப்பு ரீதியாக உரிமைகள் பறிக்கப்பட்டன. அத்துடன், பல்வேறு அடக்குமுறைகளுக்கும் நாம் உள்ளாக்கப்பட்டோம். இந்நிலையில் எமது உரிமைக்கான அஹிம்சைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறி உச்ச நிலையை அடைந்தது. ஆனால், தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு போர் தணிந்த நிலைமையில் தீர்வுக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கை அரசுடன் பேச்சுக்களில் ஈடுபடும் தங்கள் வழிகாட்டுதலுடனான குழுவினர் கீழ்குறிப்பிடப்படும விடயங்களை உள்ளடக்கிய சுயாட்சியுடைய இடைக்கால நிர்வாக சபையை வலியுறுத்துமாறு வேண்டுகின்றோம்.

காணி:- தாயக நிலம் வரையறுக்கப்படுவதோடு அது தொடர்பான சகல அதிகாரங்களும் இடைக்கால நிர்வாக சபைக்கு வழங்கப்படவேண்டும்.

நிதி:- இலங்கை அரசாங்கம் (மத்தி) மற்றும் வெளிநாட்டு அரசுகளிடமிருந்து நிதிமூலங்களைப் பெற்று, அதனைத் திட்டமிட்ட முறையில் பயன்படுத்துவதற்கான அதிகாரங்களை இடைக்கால நிர்வாக சபைக்கு வழங்கல்.

கல்வி:- தேசிய கல்விக் கொள்கைக்கு முரண்படாத வகையில், எமது சமூக, பொருளாதார, கலாசார, பண்பாட்டு விழுமியங்களுக்கேற்ற கல்விக் கொள்கையை உருவாக்குவதற்கும், அதனை நடைமுறைப்படுத்துவதற்குமான அதிகாரங்களை வழங்குதல்.

பாதுகாப்பு:- எமது இனத்தின் முழுமையான பாதுகாப்புக்கு உறுதியளிப்பதோடு சுயபாதுகாப்பு. உள்ளக நிர்வாகம் என்பவற்றை ஒழுங்காக நடத்துவதற்கான பொலிஸ் சேவையை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரங்களை சபைக்கு வழங்கல்.

பொருளாதாரம்:- எமது பிரதேசத்தின் அழிந்த பொருளாதாரக் கட்டுமானங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கும், தேசிய நிலைக்கேற்ப புதிய பொருளாதாரக் கட்டுமானங்களை உருவாக்குவதற்குமான அதிகாரங்கள் இடைக்கால நிர்வாக சபைக்கு வழங்கல்.

இந்த எதிர்பார்ப்புகள் மற்றும் அபிலாஷைகள் என்பவற்றையே எமது மக்கள் கொண்டுள்ளார்கள். இதனைத் தங்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஒ-117)

## வவுனியாவில் 9 ஆம் திகதி பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை

யாழ்ப்பாணம்,ஒக்.4

வவுனியா பொது வைத்தியசாலையில் எதிர்வரும் 9 ஆம் திகதியில் இருந்து 22 ஆம் திகதி வரையும் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கென வெளிநாட்டில் இருந்து சத்திரசிகிச்சை நிபுணர்கள் அங்கு வருகை தரவுள்ளனர்.

எனவே, யாழ். குடாநாட்டில் இருந்து பிளாஸ்டிக் சத்திரசிகிச்சையை மேற்கொள்ள விரும்புவோர் வவுனியா வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியுடன் தொடர்புகொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகம் அறிவித்துள்ளார். (ஒ-10)

## கலாசார அலுவலர் பதவிக்கு பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்!

யாழ்ப்பாணம்,ஒக்.4

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் "கலாசார அலுவலர்" (இந்து) பதவிகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கீழைத்தேய மொழிகள், இந்துநாகரிகம், இந்துசமயம், வரலாறு, மெய்யியல், தொல்பொருளியல் மற்றும் சமூகவியல் ஆகிய பாடங்களில் ஏதேனும் இரண்டைக்கொண்ட கலைமாணிப்பட்டம் அல்லது அவற்றில் ஏதேனும் ஒரு பாடத்தில் சிறப்புப்பட்டம் பெற்றிருப்பதுடன் இந்துசமயம், கலாசாரம் மற்றும் தேசிய கலாசாரம் சம்பந்தமான போதிய அறிவு உடையவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும் என்று இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பிப்போர் விண்ணப்ப முடிவுதிகதியான அடுத்த மாதம் 21ஆம் திகதி 18 வயதுக்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல்வேண்டும். ஏற்கனவே அரசசேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது என்றும், விண்ணப்பிக்க விரும்புவோர் "பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம, இல.248 1/1, காலி வீதி, கொழும்பு" என்ற முகவரிக்கு விண்ணப்பங்களைப் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விவரங்கள் 03.10.2003 திகதிய வர்த்தமானியில் உள்ளன. இதனைப் பார்வையிட விரும்புவோர் 'உதயன்' பணிமனையில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். (ஒ-5)

## விவசாயிகளுக்கு வங்கிக்கடன் வசதி

### அரச அதிபரின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்,ஒக்.4

குடாநாட்டு விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்க இலங்கை வங்கி முன்வந்துள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் விவசாயம் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, பாதிப்படைந்த விவசாயிகளின் உற்பத்தித்திறனை அதிகரிக்கக் கூடிய வகையில் குடாநாட்டில் கடன் திட்டமொன்றை அறிமுகப்படுத்துமாறு இலங்கை வங்கியிடம் யாழ். செயலகத்தினால் கோரிக்கை விடப்பட்டது.

இதனை அடுத்து இலங்கை வங்கி முதற்கட்டமாக சிறுபோகம் மற்றும் பெரும்போகம் ஆகிய நெற்செய்கைகளில் ஈடுபடும் விவசாயிகளுக்கு 50ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட தொகையை குறைந்த வட்டியில் கடனாக வழங்க முன்வந்துள்ளது.

இக்கடனைப் பெற்றுக் கொண்டவர்கள் ஆறுமாத காலப்பகுதிக்குள் 8சதவீத வட்டியுடன் மீளச்செலுத்தவேண்டும்.

கடனைப்பெற்ற நெற்செய்கையாளர்கள் பணப்பயிர்களான வெங்காயம், மிளகாய், உருளைக் கிழங்கு ஆகிய பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கும் அதனைப் பயன்படுத்தலாம் என்றும்- கடனைப்பெற விரும்புவோர் தமது பகுதிகளிலுள்ள இலங்கை வங்கியின் கிளைகளுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ஒ-5)

**நாளை**

புரட்டாதி 18
ஞாயிற்றுக்கிழமை
(05.10.2003)
திதி : தசமி
பிற்பகல் 1.03 வரை
நட்சத்திரம்:திருவோணம்
முன்னிரவு 11.40 வரை
விஜயதசமி
கேதாரகௌரி விரதாரம்பம்
சுபநேரம்:9.02 -10.32
ராகுகாலம்: 4.32 - 6.02
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

போரை ஆரம்பிப்பதற்கு முன்னர் எதிரியின் பலத்தை தெரிந்து கொள்ளாதவர் வெற்றியடைவது அரிது.

## உள்ளூர் ட்றோலர்களால் சிரமப்பட நேரிடுகிறது!

### நெடுந்தீவு மீனவர் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.4

உள்ளூர் 'ட்றோலர்' படகுகளால் தாம் சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக நெடுந்தீவு மீனவர்கள் சார்பில் வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தில் நேற்று முறையிடப்பட்டது.

இதுவரை காலமும் இந்திய மீனவரின் ஆக்கிரமிப்பால் நெடுந்தீவு மீனவர்கள் சிரமங்களையும் நஷ்டங்களையும் எதிர்நோக்க நேரிட்டதாகவும் -

அது தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், நெடுந்தீவுக் கடற்பரப்பில் தொழில் செய்யவரும் உள்ளூர் மீனவர்களின் 'ட்றோலர்' படகுகள் நெடுந்தீவு மீனவர்கள் விரிக்கும் வலைகளைச் சேதப்படுத்துவதாகவும் - நெடுந்தீவு கடற்றொழிலாளர் சங்கம் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது.

இந்திய மீனவர்களால் ஏற்பட்ட சிரமங்களை விட, தற்போது பிற இடங்களில் இருந்து வருவோரால் அதிக சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் -

இது தொடர்பாக நல்லதொரு தீர்வினை காணும்படியும் - நெடுந்தீவு மீனவர்கள் கோரியுள்ளனர். (ஒ-4)

### உயர்புள்ளிகள் பெற்ற மாணவர்கள்

## பல்கலை. பதிவை ரத்துச்செய்வது குறித்து சட்டமா அதிபர் சிபாரிசு

கடந்த ஆண்டில் இடம்பெற்ற ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி, மருத்துவ மற்றும் பொறியியல் பீடங்களுக்கு பதிவு மேற்கொள்ளத் தேவைப்பட்ட புள்ளிகளைப் பெறாத மாணவர்கள் பல்கலைக்கழக ஏனைய பீடங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்ளப் பதிவுகளை மேற்கொண்டிருந்தனர். அவர்களில் பலர் இந்த ஆண்டில் இடம்பெற்ற பரீட்சை முடிவுகளின்படி மருத்துவ மற்றும் பொறியியல் பீடங்களில் இணைந்து கொள்வதற்குத் தேவையான உயர் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். எனவே, முன்னைய முடிவுகளுக்கமைய பல்கலைக்கழகங்களில் மேற்கொண்ட பதிவுகளை ரத்துச்செய்ய அவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்குச் சட்டமா அதிபர் சிபாரிசு செய்துள்ளார்.

கடந்த ஆண்டில் இடம்பெற்ற பரீட்சையில் சித்திபெற்று மருத்துவ மற்றும் பொறியியல் பீடங்களுக்கு அனுமதி பெற முடியாமையால் ஏனைய பீடங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்ளப் பதிவுகள் மேற்கொண்ட மாணவர்கள் இந்த ஆண்டு இடம்பெற்ற உயர்தரப் பரீட்சையில் உயர்புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளனர். ஆனால், ஏற்கனவே பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்திருப்பதால், தற்போதைய முடிவின் மூலம் கிடைக்கும் பல்கலைக்கழக அனுமதியை பெறும் வாய்ப்பை அவர்கள் இழந்துள்ளனர். இதனால், தமது பல்கலைக்கழகப் பதிவுகளை ரத்துச் செய்ய உதவும்படி அவர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இது தொடர்பாக அறிவுறுத்தலைப் பெறும் பொருட்டு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சட்டமா அதிபரைத் தொடர்பு கொண்டிருந்தது.

அதன் பிரகாரம், மாணவர்கள் முதலில் மேற்கொண்ட பதிவுகளை ரத்துச்செய்யச் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டுமெனச் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முன்னைய ஆண்டுகளில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகள் போன்று இத்தடவையும் தேவையான உயர்புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் மருத்துவம் மற்றும் பொறியியல் பீடங்களில் இணைந்து கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கும் பொருட்டு ஏற்கனவே அவர்கள் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட பதிவுகளை ரத்துச்செய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமெனச் சட்டமா அதிபர் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ஒ)

# IN TREASURED REMEMBERANCE

Born - 3 - 8 - 1924



Entered Glory - 29 - 9 - 1998

## FAITH PUSHPAM SELVARAJ

*"Safe in the arms of Jesus"*
*Fondly remembered by all your loved ones.*

*'Bethel'*
*Puloly west, Puloly.*

(23264) (12-13-24)

# 8ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 19 ↓ 06 ↓ 1928



ஆண்டவன் அடியில் 04 ↓ 10 ↓ 1995

திருமதி
## பாலாமணி தெய்வேந்திரம்

எட்டு ஆண்டுகள் ஆனதுவே அம்மா
- உங்கள் ஆவி பிரிந்து!
தேறுதல் இன்றித் தவிக்கின்றது எமது நெஞ்சம்!
கூறுவதற்கு வார்த்தை இல்லை உங்கள் பிரிவுத்துயர்!
இல்லத்து விளக்காக இருந்தெம்மைக் காத்தவரே!
உங்கள் பசுமையான நினைவுகள்
எம்மைவிட்டு ஒருபோதும்
நீங்காது நிலைத்திருக்கும்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
அ.றோசா (மகள்)
*109/1, சிவன் றோட், நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

(23268) (24-12-13)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| குமாரசாமி ரகுநாதன் | | ரகுநாதன் சித்திரா |
|---|---|---|
| 18.02.1957 | தோற்றம் | 18.06.1960 |
| 29.09.1998 | மறைவு | 29.09.1998 |

திதி:- 04.10.2003

*ஆண்டுகள் ஐந்து சென்றாலும்*
*நீவிர் விண்ணில். விமானத்தில் பறந்து*
*மறைந்ததையிட்டு எம் உள்ளம் ஆறாது துடிக்கின்றது!*

தகவல்: ம.சுமதினி,
*சட்டநாதிப்பிள்ளை வீதி,*
*உடுவில் கிழக்கு.*

உங்கள் மறைவால் வாடும்:
சகோதரி, மைத்துனர்,
மருமக்கள்.

(23269) (12-13-24)

## நான்கு பேரைத் தீண்டிய விஷஜந்துகள்

தென்மராட்சி,ஒக்.4

ஒரே இரவில் நால்வர் பாம்பு மற்றும் விஷஜந்துகளால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றது.

தென்மராட்சி கல்வி வலய அலுவலக காவலாளியான சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த கதிரன் கந்தசாமி (வயது 52), மீசாலை வடக்கைச் சேர்ந்த சின்னையா சுப்பிரமணியம் (வயது 53), கச்சாய் தெற்கைச் சேர்ந்த கந்தசாமி சுதந்திரன் (வயது 30), மீசாலை மேற்கைச் சேர்ந்த தனபாலசிங்கம் நிஷாந்தினி (வயது 17) ஆகியோரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

(எ-117)

"நியூ வீணா கானம்" இசை மன்றத்தின்

# விஜயதசமி இசை வகுப்புகள்

❊ ஓர்கன் ❊ கிற்றார் ❊ மெலோடிக்கா ❊ வீணை ❊ புல்லாங்குழல் ❊ வயலின் ❊ வாய்ப்பாட்டு ❊ சித்திரம்

காலம்: நாளை (05-10-2003) ஞாயிற்றுக்கிழமை

இடங்கள்:-
- 16/2, கச்சேரி நல்லூர் வீதி - 5.00 p.m.
- மெதடிஸ் மிஷன் தேவாலயம், புத்தூர் - 10.00 a.m.
- 33, முத்துக்கிருஷ்ணன் லேன், சுன்னாகம் 2.30 p.m.
- ஆலடி, உயரப்புலம், ஆனைக்கோட்டை (வைரவர் கோயிலடி முன்பாக) 3.30 p.m.

நியூ வீணா கானம் மன்றம்.

T.P.: 0777 159237

(12) (23266) (24-13)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நோர்வேயைச் சேர்ந்த திரு.திருமதி சிவகுமார் - லோஜினி தம்பதிகளின் செல்வப் புதல்வி

## செல்வி மீனுஜா



அவர்கள் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (04.10.2003) சனிக்கிழமை சுன்னாகத்தில் கொண்டாடுகின்றார்.

செல்வி மீனுஜாவை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், சித்திமார், அத்தைமார், சித்தப்பாமார்களான சசிகுமார் (லண்டன்), விஜயகுமார் (லண்டன்), பெரியம்மா தர்மினி, பெரியப்பா கோபி, தனுஷியாக்கா, வேணு அக்கா (ஜேர்மனி), ஆசை அம்மா, இந்திரா அம்மா, பூட்டம்மா மற்றும் மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்ந்து சீரோடும் சிறப்போடும் திகழ வேண்டுமென்று அன்புடன் வாழ்த்துகின்றனர்.

நடராஜா வீதி,
சுன்னாகம் மேற்கு, சுன்னாகம். (23212) (25-12-13-24)

S.SIVAKUMAR,
KVARVEN,
5423, BRANDASUND, NORWAY.

# மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.அருணாசலம் திருநாவுக்கரசு
பெரியநாவலடி, கொடிகாமம்
இளைப்பாறிய அதிபர்
யா/அரசினர் வித்தியாலயம்
கொடிகாமம்.



திரு.அந்தோனிப்பிள்ளை அல்பிரட்
தவசிகுளம், மிருசுவில்
உள்ளக கணக்காய்வாளர்
நகரசபை,
சாவகச்சேரி.



டாக்டர் ஐயாத்துரை ஜெபநாமகணேசன்.
உசன், மிருசுவில்
ஆயுர்வேத வைத்திய
உத்தியோகத்தர்
சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம்.

*நீதி அமைச்சினால் சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்டு 11.09.2003இல் யாழ்ப்பாணம் மேலதிக மாவட்ட நீதிபதி உயர்திரு. மா. சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து, பதவியேற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன். மேன்மேலும் சேவைகள் பல புரிந்து நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.*

வாழ்த்துவோர்:
செல்லையா அமரசேகரம் குடும்பம்
பெரியநாவலடி, கொடிகாமம்.

(சி-30510) (12-13-24)

# பதின்மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில் 17 07 1960



திதி: (தசமி) 04 10 2003



ஆண்டவன் அரவணைப்பில் 28 09 1990

அமரர் கந்தையா ஜீவரட்ணம் (குமார்) (மின்பஸ் சாரதி)

திருமதி சுமதி ஜீவரட்ணம்

நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து
நீண்ட வருடங்கள் ஓடி மறைந்தாலும்
நீதியற்ற பகைவர் செய்த கொடுமை
நீறுபூத்த நெருப்பாய் எமை வாட்டுதே

இல.7, செல்மேரிஸ்
2ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவோடு
நிதம் வாழும்:
ஐயா, அம்மா,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மருமக்கள்.

(C/39482)

# புலம்பெயர்ந்தவர்கள் திரும்பிவந்தால் தாயகத்தில் தொழில் வாய்ப்புகளுண்டா?

**யுத்தத்தால் அழிவுற்ற நிலையிலுள்ள வடக்கு - கிழக்கில் முதலீடுகளை மேற்கொள்ள முதலீட்டாளர்கள் முன்வராத நிலையில் புலம்பெயர்ந்த தமிழர்கள் தாயகம் திரும்பினால் அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைக்குமா என்பது குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது. பாலித அமரசூரியவால் எழுதப்பட்டு 'லக்பிம' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

அண்மையில் இலங்கைக்கு விஜயஞ்செய்த உலக வங்கி அதிகாரிகளுள் மிகவும் பொறுப்பு வாய்ந்த அதிகாரி பீற்றர் வொய்க் ஆவார். அவர் கடந்த மே மாதம் இரண்டாம் திகதி இங்கு விஜயஞ்செய்தார். உலக வங்கியின் நிர்வாகப் பணிப்பாளராகவும், அவ்வங்கியின் சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFA- INTERNATIONAL FINANCE CORPORATION) என்னும் நிறுவனத்தின் நிறைவேற்று உபதலைவராகவும் பணியாற்றும் அவர் தமது இலங்கை விஜயத்தின் நோக்கம் பற்றி கொழும்பு ஹில்ட்டன் ஹோட்டலில் வைத்து, பின்வருமாறு தெரிவித்தார்.

'இலங்கை அரசும் விடுதலைப் புலிகள் அமைப்பும் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர், வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் பெரும் முதலீடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன. அது போட்டியிடக்கூடிய சந்தை வாய்ப்பொன்றை கொண்டிராத பாரிய பிரதேசமாகும். சகலதையும் புதிதாக ஆரம்பிக்கக்கூடிய வசதிகள் அங்குள்ளன. எனவே, அப்பிரதேசத்தில் தனியார் துறைகளுக்கான முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை நான் மேற்கொள்ள விரும்புகின்றேன்' எனத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பின்னர், மே மாதம் ஐந்தாம் திகதி இலங்கையிலிருந்து திரும்பும்போது, அவர் இப்பிரதேசங்களில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் தாராளமாக அமைந்துள்ளன எனவும் அதற்கமைய புதிதாக தனியார்துறைகளுக்கான முதலீட்டுத் திட்டங்களை முன்வைக்கும் எந்தவொரு நிறுவனத்திற்கும் வரையறையற்ற கடனுதவிகளை தங்களால் வழங்க முடியும் என்றும் கூறினார்.

## கே.எஸ்.எம்.

உலக வங்கியின் உயர் பொருளாதார நிபுணரான பீற்றர் வொய்க், இங்கு எடுத்துக்காட்டிய காரணத்தின் முக்கியத்துவம் இன்று தெளிவாகப் புலப்படுகின்றது. அவர் கூறிய முக்கிய காரணம் வடக்கு - கிழக்கின் அபிவிருத்திகள் சம்பந்தமான திட்டங்களைக் கையளிப்பதற்கான நிறுவனமொன்று இங்கு அமைய வேண்டியது அவசியமென்பதாகும். அவரது கூற்றுக்கமைய இன்றுள்ள உண்மையான நிலை, புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒன்றரை ஆண்டுகள் கடந்த நிலையிலும், வடக்கு - கிழக்கின் பொருளாதார அபிவிருத்திக்கான முதலீடுகளை எந்தவொரு தனியார் துறையும் முன்வைக்காததேயாகும். இதுவரை பிரித்தானியாவில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் மாத்திரமே முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்துள்ளனர். அவையும் தங்கும் விடுதிகள் தொடர்பான முதலீடுகளாகும். அது, உலக வங்கியின கூற்றுக்கமைய முதலீடாகக் கணிக்க முடியாததாகும்.

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் சமாதானம் உருவான பின்னர் கனடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளில் வாழும் யாழ் வாசிகளே, இங்கு பெரும் முதலீடுகளில் ஈடுபடக்கூடும் என்பது அநேகரின் கருத்தாக இருந்தது. ஆனால், அத்தகையோர் திரும்பவும் யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கான அறிகுறிகள் இதுவரையில் தென்படவில்லை. சமாதானத்திற்கான ஸ்திரமற்ற நிலையே இதற்கான காரணமென்று தீர்மானிக்க இயலாதபோதும், அவர்கள் முதலில் சிந்திப்பது யாழ்ப்பாணத்துக்கு வந்து என்ன செய்வது? என்பதாகும்.

கடந்த ஓகஸ்ட் 11 ஆம் திகதி பி.பி.ஸி. செய்திச் சேவைக்கு அதன் கொழும்பிற்கான செய்தியாளர் பிரான்சிஸ் ஹரிசன் விசேட நிகழ்ச்சியொன்றைத் தயாரித்திருந்தார். அவரது நிகழ்ச்சியில் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்து சென்று அண்மையில் மீண்டும் யாழ். வந்த குடும்பமொன்று பங்குபற்றியது.

பிரிட்டனில் உயர் பதவி வகிக்கும் ஏ.பாலராஜா அவர் மனைவி மற்றும் பிரிட்டனில் பிறந்து வளர்ந்த அவர்களது குழந்தையான ஷாமலி பாலராஜா ஆகியோருக்கு யாழ்ப்பாணத்தின் நுளம்புகள் மற்றும் இங்குள்ள சேதமடைந்த வீதிகள், குறைவான சுகாதார வசதிகள் போன்றவை எவ்வகையிலும் ஏற்புடையதல்ல என்பதை அந்நிகழ்ச்சி வாயிலாக பி.பி.ஸி. வெளிப்படுத்தியது.

கடந்த ஜுன் மாதம் 09 ஆம் மற்றும் 10 ஆம் திகதிகளில் இடம்பெற்ற, டோக்கியோ நிதியுதவி மாநாட்டில் வைத்து, வடக்குத் தெற்கு அபிவிருத்திப் பணிகளை இலக்காகக் கொண்டு முகமாக அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட "மீண்டும் இலங்கையை மலர வைப்போம்" என்ற செயற்திட்ட ஆவணையில் வடக்கிற்கான அபிவிருத்திப் பணிகளும் அடங்கியிருந்தன. கடந்த ஏப்ரல் 14 ஆம் திகதி வாஷிங்டனில் இடம்பெற்ற இலங்கைக்கு உதவும் நாடுகளின் மாநாட்டுக்கான முன்னோடி மாநாட்டில் இலங்கை முன்வைத்த அபிவிருத்திக்கான நடைமுறைகளில் யுத்தம் காரணமாக புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களை திரும்ப அழைப்பது சம்பந்தமாகக் கூறப்பட்டுள்ளது.

உலக வங்கியைப் போன்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியையும் பெற்று, வடக்கு - கிழக்கு மக்களை மீளக்குடியமர்த்தும் செயற்திட்டத்திற்கமைய இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கையர்களைத் திரும்ப அழைப்பது மாத்திரமன்றி, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள் மற்றும் வேறு வளர்ச்சியடைந்த நாடுகளில் தஞ்சமடைந்துள்ளோரையும் திரும்ப அழைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையிலான காலப் பகுதிக்குள், இந்தியாவில் அமைந்துள்ள 108 அகதி முகாம்களில் 16,700 குடும்பங்களைச் சேர்ந்த 62,717 அகதிகள் உள்ளனர். இது 2003 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதிய 'ப்ரொன்ட்லைன்' பத்திரிகையில் வெளியான தகவலாகும்.

இது தொடர்பான அறிக்கையைத் தயாரித்த சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வீ.சூரியநாராயணன், இக்குடும்பங்களில் 57 குடும்பங்கள் மாத்திரமே இலங்கை திரும்பியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். கொழும்பிலுள்ள ஐ.நா. அகதிகளுக்கான பணிமனை வெளியிட்ட புள்ளிவிவரங்களுக்கமைய, அக்குடும்பங்களைச் சேர்ந்த 196 பேர் மாத்திரமே இங்கு வந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்திய அகதி முகாம்களில தங்கியிருந்த, 16 ஆயிரத்து 700 குடும்பங்களில் 57 குடும்பங்கள் மாத்திரம் இலங்கைக்கு வந்தது ஏன்? என்ற வினாவுக்கு எதிர்மாறான வினாவை முன்வைக்கும்போது, அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து என்ன செய்யப்போகிறார்கள்? என்பது மாத்திரமன்றி யாழ்ப்பாணத்தில் அவர்களுக்கான வேலைவாய்ப்புக்களும் இருப்பதாகத் தெரியவில்லை.

இன்று, இந்தியாவிலிருந்தும் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் அல்லது வேறு வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்தும் யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளோர்க்கு மட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் இருப்பவர்களுக்கும் இங்கு தகுதியான வேலைவாய்ப்புக்கள் இல்லை. ஆண்டுதோறும் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும பட்டதாரிகள் வேலை வாய்ப்புக்களைப் பெறும்நிலையும் யாழ்ப்பாணத்தில் இல்லை. இதைப்பற்றி யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றத்தின் தலைவர் எம்.ராமதாஸ், "யாழ்ப்பாணத்திலுள்ள படித்த 100 இளைஞர்கள், யுவதிகளில் 40 - 50 பேர்களுக்கு அவர்களது தகுதிகளுக்கான வேலை வாய்ப்புகள் கிடைப்பதில்லை. அவர்கள் தமக்குத் தகுதியான வேலைகளைத் தேடிஅலைந்து திரிகின்றார்கள்" எனக் கூறியுள்ளார். மேலும், யாழ்ப்பாணத்தில் பயின்று இந்நாட்டு கல்வித்துறைகளில் பட்டங்கள் பெற்றுள்ள இத்தகையோருக்கு யாழ்ப்பாணத்தில் வேலை வாய்ப்புக்கள் இல்லாத நிலையில், வளர்ச்சியடைநத நாடுகளில் சிறந்தகல்வித் தகைமைகளைப் பெற்று இங்கு வரவுள்ள முன்னாள் யாழ்ப்பாண வாசிகளுக்கு இங்கு வேலை வாய்ப்புகளை எவ்வாறு வழங்கமுடியும்? என்பதும் பிரச்சினைக்குரியதே.

இத்தகைய சகலரும் தகுதியான வேலை வாய்ப்புகளைப் பெறும்போது, யுத்தத்தால் அழிந்து போயுள்ள வடக்கும் கிழக்கும் மீண்டும் உயிர் பெற்று, இலங்கையின் பொருளாதார அபிவிருத்திகள் புத்துயிர் பெறும் என்று உறுதியளிக்க முடியாவிட்டாலும் இங்கு அதை ஞாபகப்படுத்துவது பொருத்தமானதாக அமையும். ஏனெனில் அதற்கான திட்டமொன்றை சர்வதேச சமூகமும், விடுதலைப் புலிகள் அமைப்பும் அரசுடன் இணைந்து உருவாக்கியுள்ளன.

இதற்கான மதிப்பீடுகளை இங்கு விஜயம் மேற்கொண்ட, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பு ஆகியவற்றைச் சேர்ந்த 72 பொருளாதார நிபுணர்கள் மேற்கொண்டனர். அத்துடன் விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளும் அரச பிரதிநிதிகளும் இதில் பங்கேற்றுள்ளனர். மேற்கொள்ளப்பட்டுள்ள இம்மதிப்பீடுகளுக்கமைய வடக்குக் கிழக்கிற்கான அபிவிருத்திப் பணிகளுக்கு சுமார் 14 ஆயிரத்து 800 கோடி ரூபா தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது டோக்கியோ உதவி நிதியின் மூன்றில் ஒரு பங்கு நிதி வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திப் பணிகளுக்காகத் தேவைப்படும்.

ஆயினும், தற்போது இந்த அபிவிருத்திச் செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு அல்லது வடக்குக் கிழக்கிற்கான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு பெரும் தடையொன்று அமைந்துள்ளது. அது சமாதானப் பேச்சுகள் இடைநிறுத்தப்பட்டதால் உருவான தடை அல்ல. வடக்குக் கிழக்கின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதியை யாரிடம் கையளிப்பது? என்பதே அந்தத் தடையாகும்.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜப்பானிய அரசு ஆகியவை வெவ்வேறான திட்டங்களைக் கொண்டுள்ளபோதும் அவற்றைக் கையளிப்பதற்கான முறையான நிறுவன அமைப்பொன்று வடக்கு - கிழக்கில் இல்லை. பதிலாக கொழும்பில் இருக்கும் நிறுவனங்களிடம் இத்திட்டங்களைக் கையளிப்பதாயின் தற்போதைய நிலையில், பொதுவாகவே விடுதலைப் புலிகள் அமைப்பும், தமிழ் மக்களும் அதனை விரும்பவில்லை. யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றத்தின் தலைவரான எம்.ராமதாஸ் "கொழும்பிலிருந்து பெறப்படும் ஆலோசனைகள் எமக்குப் பொருத்தமானவையாக அமையமாட்டா. அவைகள் இப்பிரதேசத்தைப் பற்றி நன்கறிந்தவர்களாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

தற்போது எழுந்துள்ள இவ்விவாதத்திற்கும், செயற்திறன் கொண்ட நம்பிக்கையான நிறுவனமொன்று இல்லாத சிக்கலைத் தீர்ப்பதற்கும் ஏற்ற மாற்று வழியொன்றை காண்பதற்கு இதுவரையில் எவருமே முன்வந்துள்ளதாகத் தெரியவில்லை. டோக்கியோ மாநாட்டின் பின்னர், இத்தனை மாதங்கள் கடந்தும் கூட யாழ்ப்பாணம் முன்பிருந்த நிலையிலேயே இன்றும் இருப்பதற்கான காரணம் அதுவாகவே உள்ளது. இன்னமும் டோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்டதற்கமைய கோடிக்கணக்கான நிதியில்ஒரு சதமேனும் வடக்கிற்கோ அல்லது கிழக்கிற்கோ செலவழிக்கப்படாதிருப்பதும் இக்காரணத்தை முன்னிட்டேயன்றி வேறு காரணங்களால் அல்ல. ✳



'மனமுண்டானால் வாழ்க்கை உண்டு' என்பதை நிருபிப்பதுபோல் தென்னிலங்கையிலிருந்து வந்த வியாபாரிகள் யாழ். ஆரியகுளம் பகுதியில் உருவாக்கியுள்ள சிறு சந்தை.

---

## திறந்த பல்கலை அனுமதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.4

திறந்த பல்கலைக்கழக சட்டமாணி கற்கைநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதிப் பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி நாடுபூராவும் நடைபெறவுள்ளது.

யாழ். பிராந்திய நிலையத்தினூடாக விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9 மணிக்கு திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதேவேளை - மேற்படி பரீட்சையில் தோற்றுவோருக்கான ஆங்கில முன்னோடி வகுப்பு ஒன்று இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் எந்திரி ச.ஆ. ஞானேந்திரன் அறிவித்துள்ளார்.(எ-9)

## தையல் பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.4

நல்லூர் வன்னியசிங்கம் பொதுப் பணி மன்றத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை விஜயதசமி அன்று புதிய தையல் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

(ஐ)

---

## இலங்கை சமாதான முயற்சிக்கு இந்தியா முழு ஆதரவு வழங்கும்

### அமைச்சரவைப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு,ஒக்.4

இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றை ஏற்படுத்தும் நோக்குடன் அரசு மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு இந்திய அரசின் முழு ஆதரவு உண்டு என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் உறுதியளித்துள்ளார் என்றும் -

நியூயோர்க்கில் இந்தியப் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கையில் விவசாயம், அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் தொழில் முயற்சிகளுக்கு இந்தியா வழங்கிவரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்துள்ளார் என்றும் - அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு மேற்கொண்டுவரும் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமரிடம் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதனை மிகவும் உன்னிப்பாக அவதானித்த இந்தியப் பிரதமர், இலங்கை அரசு இனப்பிரச்சினைத் தீர்வுக்காக மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளுக்கும் இந்திய அரசின் முழு ஆதரவு உண்டு எனவும் உறுதி அளித்துள்ளார்.

இலங்கை அரசின் சமாதானத் தீர்வுத் திட்டங்களுக்குத் தவறான வடிவம் கொடுத்து இந்தியாவை இலங்கைக்கு எதிராக திசைதிருப்பி விட முயன்ற சில எதிர்க்கட்சிகளின் சிரேஷ்ட தலைவர்கள் மேற்கொண்ட தீவிர முயற்சிகள் படுதோல்வி அடைந்துவிட்டன எனவும் அமைச்சர் பீரிஸ் கூறியுள்ளார். (எ)

## முதியோர் கௌரவம்

கோப்பாய்,ஒக்.4

அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகத்தினர் முதியோர் வாரத்தை முன்னிட்டு முதியோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு ஒன்றை இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயத்தில் நிகழ்த்தவுள்ளனர்.

இவ்விழாவில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் முப்பதுக்கும் மேற்பட்ட முதியோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (எ-72)

# வெளிவாரிப் பிரிவின் உள்ளே நடந்தது என்ன?




- அன்ரன், ரமா -

யாழ்ப்பாணத்தின் பெரும் சொத்து - வளம் எல்லாமே கல்விதான். உலகம் முன் யாழ்ப்பாணத்தை அடையாளப்படுத்துவதும் இதே கல்விதான். அதனால்தான் யாழ். பல்கலைக்கழகம் குடாநாட்டுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

யாழ்ப்பாணம் மாணவர்களின் கல்வி தரப்படுத்தலால் பாதிக்கப்பட்டதால் இன்று இந்த நாடே பாதிக்கப்பட்டுள்ளது. அத்தனை தூரம் கல்வியை நேசித்தவர்கள் தமிழர்கள். அதிலும் யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் அதனை இன்னும் அதிகம் நேசித்தார்கள்; நேசிக்கிறார்கள்; நேசித்துக்கொண்டே இருப்பார்கள்.

### வெளிவாரிப் பட்டப்படிப்பு

தரப்படுத்தலால் தமிழர்கள் பாதிக்கப்பட்ட போது தகுதியுடைய அனைவருமே பல்கலைக்கழகத்துக்குச் செல்லமுடியாது என்ற ஒரு நிலைமை வந்தது. இந்த நிலைக்கு ஒரு மாற்றாக - அருமருந்தாக - பல்கலைக்கழகங்களால் அறிமுகப்படுத்தப்பட்டதுதான் வெளிவாரிப் பட்டப்படிப்பு.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட வெளிவாரிப் பட்டப்படிப்புப் பிரிவு யாழ்ப்பாண மாணவர்களுக்கும் வடக்கு - கிழக்கு மாணவர்களுக்கும் ஒரு வரப்பிரசாதம். ஆண்டுதோறும் யாழ். பல்கலைக்கழகத்தில் உள்வாரியாகக் கற்கும் மாணவர் தொகைக்கு இணையாக வெளிவாரிப் பிரிவிலும் மாணவர்கள் கற்றுப் பட்டம் பெற்றார்கள்.

பல்கலைக்கழகம் செல்லமுடியாத பலருக்கு இது ஒரு பேறாக இருந்தது. வெளிவாரியாகப் பட்டம் பெற்ற பலர் இன்று வாழ்வின் உயர் நிலையில் இருக்கிறார்கள். இன்னும் பலர் அந்த நிலைக்காக காத்திருக்கிறார்கள்.

ஆனால், யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்புகள் பிரிவு கடந்த சில மாதங்களாக இயங்கவில்லை. நடைபெற வேண்டிய பரீட்சைகள் காலவரையறையின்றிப் பின் போடப்பட்டுள்ளன. கடந்த மாதத்தின் நடுப்பகுதியிலிருந்து வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகின் அலுவலகம் மூடப்பட்டு சீலிடப்பட்டுள்ளது.

ஏன் இந்த நிலை?

நாங்கள் உள்ளே இறங்கி விசாரிக்க ஆரம்பித்தோம்.

கிடைத்த பதில், வெளிவாரிப் பரீட்சை முடிவுகளில் செய்யப்பட்ட குளறுபடிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அதனால் அது பற்றிய விசாரணை நடைபெறுகின்றது. அது முடிந்த பின்னர்தான் நிலைமைகள் தெளிவுபடுத்தப்படும் என்பது.


கல்விக்காக உயிரை விடும் யாழ்ப்பாணத்தின் உயர் கல்வி நிலையம் ஒன்றில் பரீட்சையில் முறைகேடா? எமக்கு அதிர்ச்சி. தொடர்ந்து துருவினோம்.

### விசாரணைக் குழு

முறைகேடுகள் பற்றி விசாரிக்க மூவர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது.

பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி எஸ். இராஜதுரை தலைமையில் பேராசிரியர் கே.கந்தசாமி, பேராசிரியர் எஸ்.மணிவாசகர் ஆகியோர் அடங்கிய மூவர் கொண்ட குழுவே விசாரணைகளை நடத்தியது.

2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடந்த வெளிவாரிப் பட்டப்பிரிவின் பகுதி-1 (Part-1) பரீட்சைப் பெறுபேறுகளில் ஏற்பட்ட குளறுபடிகள் பற்றி இந்தக் குழு ஆரம்ப விசாரணைகளை நடத்தியது.




2002 மார்ச் மாதம் பகுதி-1 பரீட்சை எழுதிய சில மாணவர்களுக்கு 'பரீட்சைக்கு வரவில்லை' (Absent) என்று பெறுபேறு வழங்கப்பட்டுள்ளது. சிலருக்கு பரீட்சைக்குப் போகாமலேயே பெறுபேறு வழங்கப்பட்டுள்ளது. இதனால் அதிர்ச்சி அடைந்த மாணவர்கள் சிலர் வெளிவாரிப் பிரிவின் இணைப்பாளரிடம் சென்று விசாரிக்கப்போக விடயம் பூதாகரமானது.

விடயத்தைக் கேள்விப்பட்டதும் அவர் இதனை துணைவேந்தரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளார். அதன் பயனாக விசாரணைக் குழு அமைக்கப்பட்டு உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கடந்த ஜூன் மாதம் 11ஆம் திகதி முதல் 11தினங்கள் இந்தக் குழு தனது விசாரணைகளை நடத்தியது. ஒவ்வொரு நாளும் சுமார் 5 முதல் 6 மணித்தியாலங்கள் விசாரணைகள் இடம்பெற்றுள்ளன.


பரீட்சை ஆவணங்கள், விடைத்தாள்கள், பரீட்சை நிலைய வரவுப் பதிவேடுகள், பரீட்சை அனுமதி அட்டைகள், புள்ளியிடல் தாள், மற்றும் புள்ளிகள் பதியப்பட்ட பதிவேடு என்று அனைத்தையும் இந்தக் குழு கவனமாகப் பரிசீலித்துள்ளது.

11 நாள்கள் - சுமார் 66 மணித்தியாலங்கள் - விசாரணையின் பின்னர் பரீட்சைப் பெறுபேறுகளில் மட்டுமல்ல பரீட்சை நடத்தப்பட்ட முறைகளிலும் முறைகேடுகள் உள்ளன என்று இந்தக் குழு கண்டுபிடித்தது.

ஜூலை மாதம் 3ஆம் திகதி விசாரணைக் குழு தனது 30 பக்க முதற்கட்ட அறிக்கையை துணைவேந்தரிடம் சமர்ப்பித்தது. அதில் பரீட்சைப் பெறுபேறுகள் இறுதியாகப் பதியப்படும் பதிவேட்டில் நூற்றுக்கணக்கான பதிவுகள் தவறானவை என்று விசாரணைக் குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் இன்னும் பல அதிர்ச்சிகரமான தகவல்களையும் அறிக்கை வெளிப்படுத்தியிருக்கிறது.

எந்தெந்தப் பாடங்களில் என்னென்ன தவறுகள் இருக்கின்றன, அவற்றுக்குக் காரணமானவர்கள் யார்?, அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய தண்டனைகள், தங்களுடைய அவதானிப்புக்கள், வருங்காலத்தில் இந்தப் பிரிவை திறம்பட இயக்குவதற்கான தமது சிபாரிசுகள் என்பன பற்றியும் விசாரணைக் குழுவினர் அறிக்கையில் விரிவாகத் தெளிவுபடுத்தியுள்ளனர்.



## Observations

**1. Violation of examination regulation**

The examination regulation of 1994 Chapter 5 approved by the senate stipulate that "External degree registration is valid for a period of 5 years subject to renewal each year". At present many candidates registered in early 90s" are allowed to sit the examination. This is highly irregular and such an act is not valid without the senate approval. The degree conferred for these categories candidates are not valid.

**2. Undue delay in sending marks by the examiners**


It was found that most of the examiners take nearly over one year to evaluate the answer scripts. The attitude and response of few examiners were very bad and they failed to co-operate with the unit.

**3. Entering marks in the mark return sheet by the examiners**

a) It was found that most of the examiners failed to enter the marks on the front sheet of the script which is important to check the marks with marks return sheet. Further marks of the first marking and second marking were not given in the mark return sheet by the examiners.

b) Many examiners failed to check of their marks return sheet. As a result the following mistakes were committed

- Double entries of numbers with diff[illegible] marks.
- Marks given for the scripts which were not available.
- Scripts found without evaluation and marks.
- Wrong entry of marks in the mark return sheet, were observed.




### முறைகேடுகள்

விசாரணைக் குழு அறிக்கையின்படி,

★ முதலாவது மற்றும் இரண்டாவது புள்ளியிடல் தாள்களில் பல பாடங்களுக்கு புள்ளிகள் பதியப்படவில்லை.

★ விடைத்தாள்களின் முன் பகுதியில் பல பாடங்களுக்கு புள்ளிகள் பதியப்படவில்லை.

★ சில பாடங்களில் விடைத்தாள்கள் கிடைத்தபோதும் புள்ளியிடல் தாள்களில் அவற்றுக்கான புள்ளிகள் பதியப்படவில்லை.

★ ஒரே சுட்டெண்ணுக்கு இருவேறு புள்ளிகள் புள்ளியிடல் தாள்களில் இடப்பட்டுள்ளன.

★ பரீட்சைக்கு தோற்றாதவர்களுக்கு புள்ளிப் பதிவேட்டில் புள்ளிகள் பதியப்பட்டுள்ளன.

★ சில பரீட்சார்த்திகளுக்கான புள்ளிகள் பதிவேட்டில் பிழையாகப் பதியப்பட்டுள்ளன.

★ சில பரீட்சார்த்திகளின் புள்ளிகள் பதிவேட்டில் பிழையான இடங்களில் பதியப்பட்டுள்ளன.

★ பல பரீட்சார்த்திகளுக்கு பதிவேட்டின் இரண்டு இடங்களில் புள்ளிகள் பதியப்பட்டுள்ளன.

★ சங்கீத பாடத்துக்கான புள்ளிகள் அரசியல் விஞ்ஞான பாடத்துக்கான புள்ளிகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

★ இணைப்பாளரின் அனுமதி பெறப்படாமல் பல பரீட்சார்த்திகளின் புள்ளிகள் பதிவேட்டில் மாற்றப்பட்டுள்ளன.

★ புள்ளியிடல் தாள்களில் பதியப்பட்ட புள்ளிகள் பல பதிவேட்டில் பதியப்படவில்லை.

★ வெவ்வேறு பெயர்களில் ஒரே சுட்டெண் பயன்படுத்தப்பட்டுள்ளது.

★ ஆங்கில பாடத்தில் சில பரீட்சார்த்திகளுக்கு 36ஆக இருந்த புள்ளிகள் 40ஆக மாற்றப்பட்டுள்ளன. ஆனால், இந்தமுறை எல்லோருக்கும் ஒரே மாதிரியாகப் பின்பற்றப்படவில்லை.

★ பரீட்சைக்குத் தோற்றிய சிலருக்கு அவர்கள் பரீட்சைக்கு வரவில்லை என்று பதியப்பட்டுள்ளது.

★ ஆங்கில பாடத்தில் 62 விடைத்தாள்கள் கிடைத்த போதும் புள்ளியிடல்தாளில் 42 பேரின் புள்ளிகளே பதியப்பட்டுள்ளன.

★ புள்ளியிடல் பதிவேட்டில் புள்ளிகள் இல்லாத சிலருக்கு பதிவேட்டில் புள்ளிகள் பதியப்பட்டுள்ளன.

★ பரீட்சையின் 1.1 அலகு மற்றும் 1.2 அலகு புள்ளிகள் மாற்றி மாற்றிப் பதியப்பட்டுள்ளன(வரலாறு).

★ நாடகமும் அரங்கியலும் பாடத்துக்கு வவுனியா வளாகத்தில் நடந்த பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தப்படாமலேயே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

★ வர்த்தக பாடத்தில் 36 புள்ளிகள் எடுத்த சில மாணவர்களுக்கு அந்தப் புள்ளிகள் பரீட்சகரால் 40ஆக மாற்றப்பட்டுள்ளன. ஆனால், இந்தமுறை எல்லா மாணவர்களுக்கும் பின்பற்றப்படவில்லை.

★ அதே வர்த்தகபாட புள்ளியிடல் தாளில் கீழே இரு சுட்டெண்களுக்கு புள்ளிகள் எழுதப்பட்டுள்ளன. ஆனால், அதனைத் தான் எழுதவில்லை என்று பரீட்சகர் தெரிவித்துள்ளார்.

★ அதேபாடத்தில் புள்ளியிடல் தாளில் 26 புள்ளிகள் பதியப்பட்டுள்ளன. ஆனால், பரீட்சகருக்குத் தெரியாமல் அது பின்னர் 40 ஆக மாற்றப்பட்டுள்ளது.

★ அரசியல் விஞ்ஞான பாடத்தில் பரீட்சைக்கு சமுகமளிக்காத (Absent) மூவருக்கு புள்ளியிடல் தாளில் பரீட்சகரால் புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், விடைத்தாள்கள் கிடைக்கவே இல்லை. நாங்கள் வரவுப் பதிவுகளை ஆராய்ந்ததில் அவர்கள் பரீட்சைக்கு சமுகமளிக்கவேயில்லை என்று தெரிந்தது.

★ அதேபாடத்தில் பரீட்சகரிடம் இருந்து 149 விடைத்தாள்களின் புள்ளிகள் கிடைத்தபோதும் 143 விடைத்தாள்களே கிடைக்கப்பெற்றுள்ளன.

- இவ்வாறு விசாரணைக்குழு தனது அறிக்கையில் முறைகேடுகள் பற்றி அடையாளப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு பாடத்திலும் இத்தகைய முறைகேடுகள் எத்தனை நடந்தன?, எத்தனை பரீட்சார்த்திகளுக்கு அவ்வாறு இடம்பெற்றுள்ளன? என்பன போன்ற விவரங்கள் அந்த 30 பக்க அறிக்கையில் விரிவாகத் தரப்பட்டுள்ளன.

புள்ளிகள் பதிவு மற்றும் அவற்றில் இடம்பெற்ற முறைகேடுகள் என்பன பற்றிய பகுதியிலேயே அறிக்கை இவற்றைக் குறிப்பிட்டுள்ளது.

இது தவிர அவதானிப்புக்கள் என்ற பகுதியில் அறிக்கை, வெளிவாரிப் பரீட்சை முறை குறித்தும் பரீட்சர்கள் மற்றும் அவர்களின் ஒத்துழைப்புக் குறித்தும் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.

### அவதானிப்புகள்

பல்கலைக்கழக பரீட்சை விதிமுறைகளுக்கு மாறாக இங்கு நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன என்று அறிக்கை கூறுகின்றது.

"வருடா வருடம் புதுப்பித்தலுக்கு அமைய வெளிவாரிப் பட்டப்படிப்புக்கான பதிவுகள் 5 ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும் என்று 1994 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பிரிவு பரீட்சை விதி தெரிவிக்கின்றது. இது பல்கலைக்கழகப் பேரவையால் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், 1990களின் முற்பகுதியில் பதிவுசெய்த பல பரீட்சார்த்திகள் தற்போது பரீட்சையில் தோற்ற அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். பல்கலைக்கழகப் பேரவை அனுமதித்தாலன்றி இம்முறையானது மிகத் தவறானதாகும்; வலுவற்றதுமாகும். இந்த [illegible] பட்டம் பெற்ற பரீட்சார்த்திகளின் பட்டம் [illegible]தாகும்" என்று அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பரீட்சகர்களில் சிலர் வெளிவாரிப் பிரிவுடன்

(மறுபக்கம் பார்க்க)

# Report of the Preliminary Investigation on the External Degree Programme of the University of Jaffna

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)


இணங்கிச் செயற்படுவதில் மிக மோசமாக இயங்கி உள்ளனர் என்று அறிக்கை சாடியுள்ளது. பல பரீட்சர்கள் தமக்கு வழங்கப்படும் விடைத்தாள்களைத் திருத்திக் கொடுப்பதற்கு ஒரு வருடத்துக்கும் மேலான காலத்தை எடுத்துள்ளனர் என்பதையும் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

### கடமை தவறிய பரீட்சகர்கள்

விடைத்தாள்கள் திருத்தப்பட்டு புள்ளிகளை புள்ளியிடல் தாளில் பதிவு செய்யவேண்டியதீ பரீட்சகர்களின் கடமை. அத்தோடு விடைத்தாள்களின் முன்புறம் அவற்றின் புள்ளிகள் பதியப்படவேண்டியதும் கட்டாயம். ஆனால் இவையிரண்டையும் பல பரீட்சகர்கள் செய்யவில்லை. தமக்குக் கொடுக்கப்பட்ட கடமையை அவர்கள் சரிவரச் செய்யவில்லை என்பதே முறைகேடுகள் இடம்பெறுவதற்கான முதற்காரணமாகக் கொள்ளமுடியும்.

இத்தகைய தமது கடமைகளை பரீட்சகர்கள் சரியாகச் செய்யவில்லை என்பதையும் அறிக்கை கூறுகின்றது. அவர்கள் "புள்ளியிடல் தாளில் பதியப்பட்ட புள்ளிகள் சரியாக இருக்கின்றனவா என்பதைக்கூட சரிவரக் கவனித்திருக்கவில்லை" என்று விசனப்படுகின்றது அறிக்கை. இதனாலேயே "இரட்டைப் பதிவுகள், புள்ளிகள் இடப்படாமல் விடைத்தாள்கள் காணப்பட்டமை, பிழையான பதிவுகள் என்பன ஏற்பட்டன" என்றும் கூறப்படுகிறது.

தங்களால் வழங்கப்பட்ட புள்ளிகள், புள்


பட்டப்படிப்பு (வெளிவாரி)
மாணவர்களின் கவனத்திற்கு.

வெளிவாரி பரீட்சைப் பகுதி இன்று தொடக்கம் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றேன்.

பதிவாளருக்காக

யாழ்.பல்கலைக்கழகம்.
யாழ்ப்பாணம்.
2003.09.19.

ளப் பதிவேட்டில் சரியாகப் பதியப்பட்டனவா என்று பார்க்க வேண்டியதும் பரீட்சகர்களின் கடமை. ஆனால், அவர்கள் அதனைச் செய்யவில்லை. பதிவேட்டில் காணப்பட்ட நூற்றுக்கணக்கான பிழைகளுக்கு இதுவே அடிப்படைக்காரணம். அவர்கள் தமது கடமையை சரிவரச் செய்திருந்தால் இந்தத் தவறுகள் எல்லாம் தவிர்க்கப்படச் சந்தர்ப்பங்களுக்கு நிறையவே இடமிருந்தது.

பலரது எதிர்கால வாழ்க்கை தொடர்புபட்ட விடயத்தில் அவர்கள் மிகக் கவனயீனமாக விளையாடி உள்ளார்கள் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. விடைத்தாள் திருத்துவதற்கும் புள்ளிகளைப் பதிவதற்கும் பெருந்தொகைப் பணம் அவர்களுக்குக் கொடுக்கப்படும் நிலையில் அவர்கள் தமது கடமைகளைப் புறக்கணித்திருப்பது கவலை தரும் - அதேநேரம் விசனம் தரும் - ஒரு விடயம்.

புள்ளிகள் பதியப்படும் பதிவேடு வெளிவாரிப் பரீட்சைகள் தொடர்பான இறுதிப் பதிவு. அதில் பதியப்பட்டுள்ளவை சரியாக இருக்கின்றனவா? என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு பரீட்சகர்கள் அதில் கையெழுத்திட வேண்டும். இதில் அவர்கள் மிகக் கவனமாக நடந்துகொண்டிருக்க வேண்டும். பதிவேட்டில் எல்லா பரீட்சகர்களும் கையெழுத்திட்டுள்ளார்கள். எனினும் அந்தப் பதிவேட்டில் பல விடயங்களில் குளறுபடிகள் உள்ளன என்று அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

★ பல புள்ளிகள் எந்த கையெழுத்தும் இன்றி பதிவேட்டில் மாற்றப்பட்டுள்ளன.

★ நூற்றுக்கணக்கான பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு சமூகமளிக்காத போதும் அவர்களுக்கு பதிவேட்டில் புள்ளிகள் பதியப்பட்டுள்ளன.

★ புள்ளியிடல் தாளில் புள்ளிகள் குறிக்கப்பட்டிருந்த போதும் பதிவேட்டில் அது பதியபடவில்லை.

★ பல பரீட்சார்த்திகளுக்கு பிழையான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ பல பரீட்சார்த்திகளுக்கு இரட்டைப் பதிவுகள் காணப்படுகின்றன. அவற்றில் சில ஒரே புள்ளிகளாகவும் சில வேறுவேறு புள்ளிகளாகவும் பதியப்பட்டுள்ளன.

★ பரீட்சைக்குத் தோற்றாத பரீட்சார்த்திகள் பலருக்கு பதிவேட்டில் புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்தனை முறைகேடுகளும் பரீட்சகர்கள் பார்த்து சரியெனக் கையெழுத்திட்ட பதிவேட்டில இருந்தே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அப்படியானால், அவர்கள் மிக முக்கியமான தமது பணியில் ஏனோ தானோப் போக்கிலேயே நடந்துகொண்டிருக்கிறார்கள் என்றுதானே அர்த்தமாகிறது?

நூற்றுக்கணக்கானோரின் வாழ்க்கையுடன் விளையாடிய இவர்களால் அதற்கெல்லாம் பதிலளிக்க முடியுமா?

### காரணமானவர்கள்

இதுபோக, இந்த முறைகேடுகள் குளறுபடிகளுடன் அறிக்கை மூவரை தொடர்புபடுத்துகின்றது. ஒருவர் வெளிவாரிப் பிரிவின் எழுதுநர், மற்றொருவர் அதனுடன் தொடர்புபட்ட உதவிப் பதிவாளர், மூன்றாவது நபர் பிரிவின் இணைப்பாளர். எனினும் முறைகேடுகளுக்காக எழுதுநரையும் உதவிப் பதிவாளரையுமே அறிக்கை குற்றஞ்சாட்டியுள்ளது. இணைப்பாளர் தனது கடமையைச் சரியாகச் செய்துள்ளார் என்று தெரிவித்து அவரை குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவித்துள்ள அறிக்கை, தனது கடமையை சரியாகச் செய்ததற்காக அவரைப் பாராட்டியுமுள்ளது.

இந்தக் குளறுபடிகளுக்குக் காரணமான சேவை நீடிப்பில் உள்ள எழுதுநரை உடனடியாக வேலைநீக்கம் செய்யும்படி அறிக்கை சிபாரிசு செய்துள்ளது. உதவிப் பதிவாளரை வேறு பிரிவுக்கு மாற்றும்படியும் அது கேட்டுள்ளது. இணைப்பாளர் தனது சேவையை தொடர்வதற்கு அறிக்கை அனுமதித்துள்ளது.

ஆனால், இணைப்பாளருக்கு மேலதிக அதிகாரங்களும் பொறுப்புக்களும் வழங்கப்பட வேண்டும் என்று அறிக்கை கூறுகின்றது.

குளறுபடிகளுக்குரிய விடைத்தாள்கள் அனைத்தும் ஒரு மாத காலத்துக்குள் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்றும்-

அதற்கு அனைத்து பரீட்சகர்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் -

எந்த ஒரு நபரையும் பதிவேட்டில் திருத்தம் செய்ய அனுமதிக்கக்கூடாது என்றும் - அறிக்கை சிபாரிசு செய்துள்ளது.

இவை உட்பட 10 சிபாரிசுகளை அறிக்கை முன்வைத்துள்ளது.

"பதிவேட்டில் புள்ளிகளைப் பதிவதற்காக ஒவ்வொரு புள்ளிக்கும் 85 சதப்படி இணைப்பாளரால் பெறப்பட்டுள்ளது. சுற்றறிக்கை ஒன்றின் அடிப்படையில் இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், அந்தக் கொடுப்பனவுக்கு அங்ககாரம் வழங்கப்படவில்லை. அது முறைகேடானது. எனவே, அந்தக் கொடுப்பனவுகளை மீளப்பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்" - என்று அறிக்கை தெரிவித்துள்ளது.

இதுதவிர எதிர்காலத்தில் இந்த வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் பிரிவை திறம்பட இயங்க வைப்பதற்கான தனது சிபாரிசுகள் பத்தையும் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

### தற்போதைய நிலை

இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துவிட்டன. அறிக்கையின் படி என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று துணைவேந்தரைத் தொடர்புகொண்டு கேட்டோம்.

"இது ஒரு முதற்கட்ட விசாரணை அறிக்கை. என்றாலும் அதில் கூறப்பட்டுள்ள நல்ல விடயங்களை உடன் செயற்படுத்தி உள்ளேன்" - என்றார்.

வெளிவாரிப் பிரிவு கடந்த மாத நடுப்பகுதியில் முற்றாக மூடப்பட்டு அதில் பணியாற்றியவர்கள் வேறு பிரிவுகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எழுதுநர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்; உதவிப்பதிவாளர் வேறு பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கடந்த மாத இறுதியுடன முடிவடைந்த இணைப்பாளரின் ஒப்பந்தம் நீடிக்கப்படவில்லை.

முதற்கட்ட விசாரணை அறிக்கைக்கு மேலதிகமாக, வெளிவாரிப் பட்டப் படிப்புப் பிரிவு தொடர்பான முழுமையான விசாரணைகளை நடத்துவதற்கு ஐவர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், கலாநிதி எஸ்.ரி.பி.இராஜேஸ்வரன், கலாநிதி சபா. ஜெயராஜா, கே.கே.அருள்வேல், பேராசிரியர் கந்தசாமி ஆகியோர் அடங்கியுள்ளனர்.

பத்து நாள்களுக்குள் இந்தக்குழுவினர் தமது விசாரணை அறிக்கையை நிர்வாகத்துக்கு சமர்ப்பிப்பார்கள் எனக் கூறப்பட்டது.

இந்தக் குழுவினர் விரிவாக ஆராய்ந்து, வெளிவாரிப் பிரிவை எப்போது ஆரம்பிப்பது, பரீட்சைகளை எப்போது நடத்துவது என்று விரிவான அறிக்கை சமர்ப்பிப்பார்கள். அதனடிப்படையில் செயற்பாடுகள் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவாரிப் பிரிவின் இணைப்பாளர் பதவிக்காக விண்ணப்பிக்குமாறு துணைவேந்தர் விடுத்த அழைப்புக்கு யாரிடம் இருந்தும் சரியான பதில் இல்லாததால், தற்போது கலாநிதி எஸ்.ரி.பி. இராஜேஸ்வரனை துணைவேந்தர் இணைப்பாளராக நியமித்துள்ளார். அவர் விசாரணைக் குழுவிலும் இடம்பெற்றுள்ளார்.

### ஊழியர் சங்கம் கிளப்பியுள்ள சர்ச்சை

இதற்கிடையில், முதற்கட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் பற்றி பல்கலைக்கழக ஊழியர் சங்கம் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

கல்விசார் ஊழியர்களைக் காப்பாற்றி கல்விசாரா ஊழியர்களை மட்டும் இந்த அறிக்கை தண்டனைக்குள்ளாக்கியுள்ளது என்று அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். அது தொடர்பான அறிக்கைகளையும் அவர்கள் வெளியிட்டுள்ளனர். விசாரணைக் குழு மீதும் அவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

மேலும் "கலைப்பீடத்தின் மீதான காழ்ப்புணர்ச்சியோ, போதனைசாரா ஊழியர் மீதான காழ்ப்புணர்ச்சியோ விசாரணையில் பிரதிபலிப்பதைத் தவிர்க்க அரச சேவையிலுள்ள வெளி விசாரணையாளரை நியமிக்கவேண்டும்" என்றும் ஊழியர் சங்கம் தனது அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளது.

"இறுதிவரை வைத்திருந்துவிட்டு பெறுபேறுகளை வெளியிடவேண்டும் என்ற கட்டத்தில் புள்ளிகளைக் கொண்டுவந்து தந்துவிட்டு பதியுங்கள் என்றால் எங்களால் எப்படி அதனைச் சரிவரச் செய்ய முடியும்?" என்றும் கேள்வி எழுப்பப்படுகின்றது ஊழியர் தரப்பில்.

என்ன இருந்தாலும் பல மாணவர்களதும் தொழில்புரிபவர்களதும் கல்வி உயர்வுக்கு பெரும் உதவியாக இருந்த வெளிவாரிப் பிரிவில் இததகைய முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்பது ஜீரணிக்க முடியாத ஒன்றே.

இதேவேளை -

காரணம் ஏதும் கூறாமல் தன்னை சேவையில் இருந்து நிறுத்தியதற்கு எதிராக குறிப்பிட்ட எழுதுவினைஞர் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாகவும் ஒரு தகவல்.

உயர் புத்திஜீவிகளைக் கொண்ட ஒரு நிறுவனத்தில் - யாழ்ப்பாணத்தை வழிநடத்த முற்படுபவர்களைக் கொண்டுள்ள நிறுவனத்தில் - இத்தகைய முறைகேடுகள் என்பது மக்கள் அவர்கள் மீது அவநம்பிக்கை கொள்ளவே வழி வகுக்கும்.

எனவே இந்த விடயத்தில் பல்கலைக்கழக நிர்வாகம் மிகக் கவனமாக நடந்துகொண்டு யார் தவறுசெய்திருந்தாலும் அவற்றைத் திருத்தி புதுப் பொலிவுடன் வெளிவாரிப் பிரிவு இயங்குவதற்கு ஆவன செய்யவேண்டும்.

அதேநேரம் -

இதுவரை வெளிவாரிப் பிரிவில் இடம்பெற்ற முறைகேடுகள் திட்டமிட்டுச் செய்யப்பட்டனவா? அவ்வாறு செய்யத் தூண்டியதன் மூலம் பயனடைந்தவர்கள் யார்? என்பன போன்ற கேள்விகளுக்கும் இனிவரும் விசாரணையாளர்கள் பதில் தேடவேண்டியது அவசியம். இந்தப் பிரிவின் எதிர்கால வளர்ச்சிக்கும் குடாநாட்டு மாணவர்களின் நன்மைக்கும் இது மிகவும் தேவையானது.

இன்னும் பல நூற்றுக்கணக்கானவர்களின் வாழ்வில் விளக்கேற்றப் போகும் இந்தப் பிரிவின் மீள் இயக்கத்துக்காக பலநூறு இளைஞர்களும் மற்றவர்களும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுமா?

"பட்டம் பெற்றவர்களே வேலைக்காக வருடக்கணக்கில் காத்துக்கொண்டிருக்கின்றனர். நாங்களோ பட்டத்துக்காகவே நீண்ட காலம் காத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அப்படியானால், பின்னர் எவ்வளவு காலம் வேலைக்காகக் காத்துக்கொண்டிருக்கவேண்டியிருக்குமோ?" என்று தன் ஆதங்கத்தை வெளியிட்டார் ஒரு சில புள்ளிகளில் பல்கலைக்கழக அனுமதியைத் தவறவிட்டுவிட்டு வெளிவாரிப் பிரிவு மூலம் பட்டத்துக்காகக் காத்துக்கொண்டிருக்கும் சதீஸ் என்ற மாணவன்.

பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அவரது ஆதங்கம் சமர்ப்பணம். ★

## மக்கள் முகம்



கிளிநொச்சி ஜெயந்திநகரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி புவனேந்திரன் அண்மையில் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பிரபல சமூகசேவையாளராகிய இவர், கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் பழைய மாணவனும், தற்போதைய பழைய மாணவர் சங்க செயலாளரும், கரைச்சி பல நோக்கு கூட்டுறவுச்சங்க பொதுச்சபை உறுப்பினரும், புதுமுறிப்பு விவசாயக்குழு செயலாளரும் ஆவார். (எ)

★ ★ ★



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி கனகபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற அதிபர் அப்பாசாமி கனகரத்தினம் அவர்கள் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர் முன்னிலையில் அண்மையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

சமய, சமூக சேவையாளரான இவர், வன்னிப்பகுதியில் அரச சார்பற்ற நிறுவனங்களிலும் மற்றும் ஆலயங்கள், பொதுநிறுவனங்களில் இணைந்து முக்கிய பதவிகளை வகித்துவருகிறார்.

★ ★ ★




இன்பவாசம், சமரபாகுவைச் சேர்ந்த சின்னத்தம்பி இன்பரூபன் அண்மையில் யாழ். மாவட்ட நீதிபதி முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் சமரபாகு சகல்விபவத்தை அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயம், சமரபாகு ப.நோ.கூ.சங்க கிளை 12 இன் செயலாளரும், கொற்றாவத்தை பூவோடை ஞானவைரவர் ஆலய உபதலைவர் மற்றும் சமரபாகு அறவழி மழலைகள் கல்விப்பூங்கா, சமரபாகு சர்வோதய சிரமதான சங்கம், யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் தலைவர் பதவிகளையும் வகித்து வருகிறார்.

றெட்பானா ஸ்தாபனத்தில் வெளிக்கள இணைப்பாளராக கடமையாற்றிய இவர் தற்போது சிறுவர் பாதுகாப்பு நிதியத்தில் நிகழ்ச்சித்திட்ட அலுவலராக கடமையாற்றி வருகின்றார். (எ)

★ ★ ★



அம்பலவாணர் வீதி, உடுவிலை சேர்ந்த விஸ்வநாதஐயர் பரிபூரணானந்த சர்மா அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

34 வருட ஆசிரிய சேவையின் பின்னர் கடந்த ஆண்டு கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

சமூக, சமய, கல்விப்பணிகளை ஆற்றிவரும் இவர், 43 வருடங்களுக்கு மேலாக பத்திரிகையாளராகவும் பணியாற்றி வருகிறார்.

செய்திக்கட்டுரைகள், பேட்டி நிகழ்ச்சிகள், சிறுகதைகள் போன்ற பல ஆக்கங்களை பத்திரிகைகள் மூலமாக தற்போதும் இவர் வழங்கி வருகிறார்.

(எ-152-135)

★ ★ ★



'ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ்' நிறுவனம் நாடளாவிய ரீதியில் நடத்திய 'சிறகடிக்கும் ஆசைகள்' என்ற தலைப்பிலான பொது அறிவுப்போட்டியில் யாழ். மாவட்டத்தில் இருந்து தேவராஜா தேவமொகீசன் என்பவர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இவர் மாலைதீவில் சுற்றுப் பயணம் மேற்கொள்ள அழைத்துச்செல்லப்படவுள்ளார். யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய உயர்தர வகுப்பில் இவர் கல்வி பயில்கிறார்.

இந்தப் போட்டியில் நாட்டில் ஒன்பது மாகாணங்களில் இருந்தும் மொத்தம் 54 பேர் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர். (ஐ)

# சமாதான காலத்தில் புதிய உத்வேகத்துடன் தொடரப்படுகின்ற கலைப் பயணங்கள்

மனிதன் மனிதனாகும்போது அவனை மேம்படுத்தியவை, கலைகளான இசை, நடனம், ஓவியம் போன்றனவாகும். இங்கு இசையினை இயற்கையின் ஒலியிலிருந்து பெறுகிறான்; இதுவே அவன் பாஷைக்கும் வழி சமைத்தது. எனினும், அவன் பேச நினைத்ததனை உணர்வுடனும் உருவ அசைவுடனும் வெளிப்படுத்தியபோது நடனம் தோற்றம் பெறுகிறது. இதனை அடுத்து சந்ததியினருக்கு தெரிவிக்க முற்படுகின்றபோது ஓவியம் பிறக்கின்றது. எனினும், மனித மெய்ப்பாட்டில் முதலில் தோன்றியது நடனமே என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மேலும் நடனத்தின் தொன்மையினை சிந்துவெளிகால இலச்சினைகள் மூலம் அறியக்கிடக்கிறது. ஆனால், இந்துக்களின் கலை பண்பாட்டுக் கருவூலமான வேத இலக்கியங்களிலேதான் நடனத்திற்கான இலக்கியச்சான்றுகள் முதன் முதல் பெறப்படுகின்றன. இவ்வாறு இந்தியாவில் தோற்றம் பெற்ற பரதநாட்டியமானது சேய்நாடான இலங்கையின் பல இடங்களிலும் நிலவுகின்றது. ஆனால், இங்கு ஏற்பட்ட காலதேச வர்த்தமானத் தாக்கங்களால் இக்கலையானது இடையிடையே தேங்கி நின்று நிலவிவந்துள்ளது என்பதும் யாவரும் அறிந்த விடயமே.

இந்த வகையில் அண்மைக் காலமாக சமாதானக் கீற்றுக்கள் வெளிப்படும் இவ்வேளையில், கலைப்பயணங்கள் மீண்டும் புதிய உத்வேகத்துடன் தொடரப்படுகின்றன. இத்தனை பேரழிவுகளுக்கு மத்தியிலும் எதிர்நீச்சல் போட்டு தம் கலைத்திறன் வளர்க்கும் எம்நாட்டுக் கலைஞர்களுக்கும் ஒரு சபாஷ் போடத்தான் வேண்டும். பரதநாட்டியம், மிருதங்கம், வயலின் என இவர்கள் தமது ஆற்றுகையை திறம்பட வெளிப்படுத்துகின்றனர். இவ்வகையில் இவ்வருட முற்பகுதியில் நடைபெற்ற ஒரு பரதநாட்டிய அரங்கேற்றம் பலரது கவனத்தையும் ஈர்த்தது.

உடுவில் பரதகலா நிவேதன் நாட்டியாலய நாட்டிய கலாவித்தகர்



திருமதி நந்தினி சிவராஜன அவர்களின் மாணவி செல்வி சோபனா நந்தகுமார் அவர்கள் வழங்கிய பரத நாட்டிய அரங்கேற்றம் 12.02.2003 அன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இவ்வரங்கேற்ற அணிசெய் கலைஞர்களாக நட்டுவாங்கம் திருமதி நந்தினி சிவராஜன் அவர்களும், வாய்பாட்டு ஸ்ரீதாஷனன் அவர்களும் மிருதங்கம் சிவகேந்திரன் அவர்களும், வயலின் அ.ஜெயராமன் அவர்களும், வீணை திருமதி காதம்பரி சர்வேஸ்வர சர்மா அவர்களும் இணைந்து வழங்கி நிகழ்வை மெருகூட்டினர்.

ஒரு பரதநாட்டிய அரங்கேற்றம் என்கின்றபோது பலவிடயங்கள் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை. இந்த வகையில் அவைக்காற்றுகை, ஒப்பனை, அரங்க அமைப்பு, அணி செய் இசைகள், நட்டுவாங்கம், அவையோர் நிலை, வர்ணனை என்பனவற்றோடு இவற்றையெல்லாம் தாண்டிய குருசிஷ்ய பாவம் என்பன சிறப்பாக எடுத்து நோக்கத்தக்கன. இந்த வகையில் செல்வி சோபனாவிற்கும் அவர்தம் குருவிற்குமிடையில் இருந்த நல்லுறவின் வெளிப்பாடே இப்பரதநாட்டிய அரங்கேற்றம் அரங்கேற வகை செய்தது என்பதில் சந்தேகமில்லை. பரஸ்பரம் ஒருவர் ஒருவரில் நல்மதிப்பும், நம்பிக்கையும், அன்பும் கொண்டவர்கள் என்பது நிதர்சனம்.

**சௌ.சசிகுமாரசர்மா**

இந்த பரதநாட்டிய அரங்கேற்றத்தின் மதிப்பீடு என்று நோக்குகையில் பலவிடயங்கள் அலசிப் பார்க்கப்படவேண்டியவையே. செல்வி சோபனா அவர்களுடைய அவைக்காற்றுகையைப் பொறுத்தவரை பெரும்பாலும் மிகச் சிறப்பாகவே செய்திருந்தார். ஆற்றுகையின் முழு உருப்படிகளிலும் மண்டி மிகச் சுத்தமாக இருந்தது. அத்துடன், பாத்திரலக்ஷணத்திற்கு ஏற்றவகையில் சலங்கை மணிகள் காலில் குத்தியபோதும் ஆற்றுகையில் எந்தத் தளர்வையும் வெளிப்படுத்தாதது அரங்கேற்றக் கலைஞரின் சிறப்பென்றே கூறலாம். அலாரிப்பில் வழக்கில் குறைந்து விட்ட சங்கீர்ணசாபு தாளத்தில்




செய்தது பாராட்டுக்குரியது.

நாட்டிய நிகழ்ச்சிகளின் இதயம் போன்று சிகரமாக விளங்கும் வர்ண உருப்படியில் நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் இம்மூன்றும் சிறப்பாக அமைந்திருந்தது. பதத்தில் மதுர பக்தியை வெளிப்படுத்துகின்றபோது விரசமில்லாமல் இருந்ததும் பாராட்டுக்குரியதுவே. மேலும் கீர்த்தனையில் (செல்லக் கனிவாயால்) வாத்சல்ய பாவம் செய்கின்றபோது உண்மையில் ஒரு தாய்சேய் உறவில் நின்று அவையோரையும் அந்நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறார் குமாரி சோபனா.

ஈற்றில் தில்லானா செய்கின்றபோது நல்ல தளப்பிடிப்பு இருந்தது. ஆனால், ஆரம்பம் விறுவிறுப்பாக அமைந்திருந்தால் மேலும் சிறப்பாக அமைந்திருக்கும். இதுபோல் சில சாஹித்திய பாவங்களையும் இன்னும் சிறப்பாக அமைத்திருக்கலாம். அரங்க அமைப்பைப் பொறுத்தவரை ஆற்றுகையை பாதிக்காத வகையில் அமைந்திருந்தது. ஒப்பனையும் நாட்டிய உருப்படிகளுக்கேற்றால்போல் சிறப்பாக இருந்தாலும் குமாரி சோபனாவின் விசாலாக்ஷித்திக்கேற்ப அஞ்சனம் தீட்டியிருக்கலாம். அணிசெய் இசைக்கலைஞர்கள் ஆற்றுகை சிறப்பாக அமைதற்கு தத்தம் பங்கினை சிறப்பாகச் செய்துள்ளனர். எனினும் வீணையின் பங்கு வெளிப்படுத்தப்பட்டமை போதாது போல் உள்ளது.

"வேடிக்கை பார்க்க வந்தவனுக்கு சத்தியம் புலப்படாது" என்று ஞானரதத்தில் பாரதி குறிப்பிட்டது போலன்றி இங்குவந்த அவையோர் நல்ல கலைஞானமுடையவர்களாய் ஆற்றுகையை ரசித்தனர். அவ்வாறு அவர்கள் கவனமும். அவர்களும் சிதறாது கட்டிவைத்திருந்த பெருமை அவ்வாடல் அணங்கிற்கே உரியது. பரத நாட்டியத்தை பொறுத்தவரையில் நட்டுவாங்கம் என்பதும் மிகமுக்கியமானதே. நட்டுவாங்க நுட்பங்களோடு அவைக்காற்றாளரை நெறிப்படுத்தவேண்டிய விதத்தில் நெறிப்படுத்தி மிகமிகச் சிறப்பாகச் செய்திருந்தார்கள்.

விருந்தினர்களின் உரையும், இடைவேளைப்பாடல்களும் அளவோடு



இருந்தன. அறிவிப்பாளர், அறிவிப்பை இன்னும் மிகச்சிறப்பாகச் செய்திருக்கலாம். இப்பரதநாட்டிய அரங்கேற்றத்தைத் தொகுத்து நோக்குமிடத்து அபிநய தர்ப்பணத்தில் குறிப்பிடுவது போன்று.

*'யதோ ஹஸ்த ஸ்ததோ திருஷ்டிர்யதோ திருஷ்டிர்ஸ்ததோ மன:*
*யதோ மனஸ்ததோ பாவோ யதொபாவ ஸ்ததோ ரச:'* என

கைகள், கண்கள், மனம் என்பன ஒன்றித்து அதன்வழி பாவத்தையும் ரசத்தையும் வெளிப்படுத்தி அன்றைய பரதநாட்டிய அரங்கேற்றத்தை மிகமிகச்சிறப்பாகச் செய்த திருப்தியோடு குமாரி சோபனா நந்தகுமார் அவர்களும், நல்லதோர் அவைக்காற்றுகை பார்த்த திருப்தியோடு நாமும் உடுவில் பரதகலா நிவேதன் நாட்டியாலயத்தை வாழ்த்துவோமாக! ★

---

## ஆஸ்திரேலிய நாடாளுமன்ற குழு பிரதமர் ரணிலை சந்தித்து பேச்சு!

கொழும்பு,ஒக்.4

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஆஸ்திரேலிய நாடாளுமன்றக் குழு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தியது.

கடந்த புதனன்று நடைபெற்ற இந்தப் பேச்சுக்களில் சமாதான முயற்சிகள் குறித்து பிரதமர் விளக்கினார்.

செனட்டர்களான ஜோன் வற்சன், டஸ்மானிய தலைமையிலான ஆறு பேர் அடங்கிய குழுவினரே இலங்கை வந்துள்ளனர்.

மேற்படி குழுவினர் ஒருநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

ஆஸ்திரேலியாவின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சியை சேர்ந்த இவர்கள் யாழ் அரச அதிபர் செபத்மநாதனைச் சந்தித்து குடாநாட்டு நிலைமைகளை கேட்டறிந்தனர்.

தற்சமயம் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் மற்றும் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்தும் அவர்கள் கேட்டறிந்தனர்.

ஆஸ்திரேலியாவின் உதவியுடன் யாழப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் குறித்தும், எதிர்காலத்தில் மேற்கொள்ள உத்தேசித்துள்ள திட்டங்கள் குறித்தும் அவர்கள் அரச அதிபருடன் ஆராய்ந்துள்ளனர்.

தமது நாடு வழங்கும் நிதி உதவியுடன் ஐ.நா. அபிவிருத்தித் திட்டம், அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் ஆகியன மேற்கொள்ளும் திட்டங்களையும் அவர்கள் நேரில் பார்வையிட்டனர்.

(எ-3)

## நிர்வாகிகளை அறையில் பூட்டி சிறை வைத்து தோட்டத் தொழிலாளர்கள் மறியல் போராட்டம்

பதுளை,ஒக்.4

தோட்டத் தொழிற்சாலையையும், அலுவலகத்தையும் தோட்டத் தொழிலாளர்கள் முற்றுகையிட்டனர், தோட்ட நிர்வாகிகள் இருவரையும், தோட்ட அலுவலக உத்தியோகத்தர்களையும் அவர்கள் உள்ளே சிறைவைதது மறியற்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இச்சம்பவம் பண்டாரவளையைச் சோந்த "டெல்சி" தோட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய இலாபப் பங்கு ஊக்குவிப்புப் பணம் கிரமமாக வழங்கப்படாததை ஆட்சேபித்தே இப்போராட்டம் நடைபெறுகிறது. 500 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இப்போராட்டத்தால் தோட்ட அலுவல்கள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. தோட்டத்திலும் பெரும் பதற்றம் நிலவுகிறது. இத் தொழிலாளர்கள் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றைச் சேர்ந்தவர்களாவர்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க மாநிலப் பிரதிநிதி ஜீ.கே.பிரகாஸ், மாநில அமைப்பாளர் எஸ்.ஜேக்கப் மற்றும் ஜே.டி. மனுவேல் ஆகியோர் தோட்டத்திற்கு விரைந்து தொழிலாளர்களுடன் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஊவா ஹைலன்ஸ் தோட்டத் தொழிலாளர்களுக்கு இலாபப் பங்கு ஊக்குவிப்புப் பணமாக 2,500 ரூபா வழங்க இணங்கப்பட்டது போன்று தமக்கும் ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படவேண்டுமென்று 'டெல்சி' தொழிலாளரும் கோருகின்றனர். (எ)

## மடு ஆலயம் செல்வோருக்கு!

யாழ்ப்பாணம்,ஒக்.4

மடு தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இன்று சனிக்கிழமை திருவிழாத் திருப்பலி இடம்பெறும். ஆலயத்துககு வருகை தரும் அடியார்களின் வசதி கருதி தினமும் காலை 7மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் மடுவீதி திறந்திருக்கும் என்று ஆலய பரிபாலகர் அறிவித்துள்ளார்.

தேவாலயத்துக்கு பக்தர்களை வாகனங்களில் ஏற்றிவருவோர் அடையாள அட்டை, வாகனத்தின் ஆவணங்கள் ஆகியவற்றின் 3 பிரதிகளுடன் வரும்படியும் அவர் கேட்டுள்ளார். (ஒ-10)

## தங்கி மீன்பிடிக்க கடற்படை அனுமதி

குருநகர்,ஒக்.4

குருநகர் பகுதியில் உள்ள கடற்றொழிலாளர்கள் தற்போது ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் கோயில் கடற்பகுதியில் தங்கிநின்று 'ட்றோலர்' தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இப்பகுதிக் கடலில் தங்கி நின்று மீன்பிடிப்பதற்கு கடற்படையின் அனுமதி வழங்கியுள்ளனர் என குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் தெரிவித்தது. (10-51)

## தியான நிகழ்வு

சர்வேதயம் அமைப்பின் தியான நிகழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு 'இலக்கம் 3, பிளச்சர்ஸ் ஒழுங்கை, கண்டுக்குழி' என்னும் முகவரியில் அமைந்துள்ள அமைப்பின் யாழ். அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அமைப்பின் தலைமையகப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர் என மாவட்ட இணைப்பாளர் கே.கனகரட்ணம் தெரிவித்தார். (எ-10)

## விடுதலையை வலியுறுத்தி பிரதமர் ரணிலுக்கு மகஜர்

### களுத்துறை தமிழ் அரசியல் கைதிகள் அனுப்பினர்

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மூன்றாவது தடவையாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த மகஜரை களுத்துறை சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் கையொப்பமிட்டுச் சிறைச்சாலை நிர்வாகத்தின் ஊடாக பிரதமருக்கு அனுப்பியுள்ளனர்.

சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசனுக்கும் தமது விடுதலையை விரைவுபடுத்துமாறு இவர்கள் மகஜர் அனுப்பியுள்ளனர்.

'விடுதலைப் புலிகள் கோரியவர்களை உடனடியாக விடுதலை செய்த அரசு அப்பாவிகளான எம்மைத் தொடர்ந்து தடுத்து வைத்திருப்பது நியாயமா' என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யுத்தத்தில் காணாமற்போனோரின உறவினர்களுக்கு உருப்படியான பதிலைக் கொடுக்க முடியாதிருக்கும் அரசு, உயிருடன் இருக்கும் எங்களை விடுவிப்பது பெரும் மனிதாபிமானதாகும்.

எமது விடுதலை தொடர்ந்து இழுத்தடிப்புச் செய்யப்படின் ஐ.நா. செயலர் கோபி அனான் இலங்கை வந்தால் அத்தருணத்தில் உண்ணாவிரதம் இருப்போம்.

எமக்கு பொதுமன்னிப்பு வழங்கக் கோரி ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதங்களையும் அனுப்பியுள்ளோம். ஆனால், அது குறித்து இன்னமும் எமக்கு தெரிவிக்கப்படவில்லை. விடுதலைக்காக ஏங்கும் எமக்கு இது வேதனையளிக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

## துணைவேந்தரை பதவி நீக்குமாறு கோரி ஜயவர்த்தனபுர பல்கலை மாணவர் ஊர்வலம்

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக துணைவேந்தரை பதவியிலிருந்து அகற்றுமாறு கோரி பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுமுன்தினம் எதிர்ப்பு ஊர்வலமொன்றை நடத்தினர்.

கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தை நோக்கி அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தியது.

ஊர்வலமாக வந்தோரை லிப்டன் சுற்றுவட்டத்தைக் கடந்துசெல்லவிடாமல் பொலீஸார் தடை போட்டுத் தடுத்து நிறுத்தினர். மாணவர்கள் அத்தடையை உடைத்துக் கொண்டு மூன்றாம் நிலைக் கல்வியமைச்சரின் அலுவலகம் நோக்கிச் சென்றனர்.

எனினும், கல்வியமைச்சின் அலுவலகத்தினுள் செல்ல சில மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது.

அங்கு மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சரிடம், பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மோதல்கள் தொடர்பான விவரங்கள் மற்றும் அதற்குக் காரணமான உபவேந்தரை உடனடியாக மாற்றக் கோரியும் பல கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அவர்கள் கையளித்தனர்.

ஊர்வலமாக வந்தோர் இறுதியில் லிப்டன் சுற்றுவட்டத்தில் கூட்டமொன்றை நடத்திய பின் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# விடுதலைப் புலிகள் மட்டும் பங்குகொள்ளும் இடைக்கால நிர்வாக அமைப்பே வேண்டும்

**ஸ்ரீலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒன்றரை வருடங்கள் பூர்த்தியடைகின்றன. புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் இருதரப்புகளுக்கும் இடையே நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைந்துள்ளது.**

**இக்காலப் பகுதியில் நடந்தவைகள் என்ன, அவை தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு என்ன பரிகாரத்தைத் தந்தன என்பன பற்றிய கருத்துக்களை தாங்கி வரும் செவ்விக்களம் இது.**

**தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் செவ்வி இன்று வெளியாகின்றது.**

*கேள்வி*: புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து ஒன்றரை வருடங்களாகிவிட்டன. இந்த உடன்படிக்கையால் மக்களுக்கு பூரணமான இயல்பு வாழ்க்கை ஏற்பட்டுள்ளதா?

*பதில்*: புரிந்துணர்வு உடன்படிக்கையின் முக்கிய அம்சம் மக்களின் இயல்பு வாழ்க்கை உறுதிப்படுத்தப்படவேண்டும் என்பதாகும். ஆனால், இயல்பு வாழ்க்கை வடக்கு - கிழக்குக்கு வெளியே பெருமளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இலங்கைத் தீவில தெற்கில், மலைநாட்டில், வடக்கு - கிழக்குக்கு வெளியில் சகல பிரதேசங்களிலும் அமைதியான வாழ்க்கை நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் தமிழர் தாயகப் பகுதியில் எதிர்பார்த்த அளவு இயல்பு வாழ்க்கை ஏற்படவில்லை. குறிப்பாக இயல்பு வாழ்க்கை ஏற்படுத்துவதற்கு மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் நடக்கவேண்டும். அப்போதுதான் இயல்பு வாழ்க்கை சாத்தியமாகும். இடம்பெயர்ந்த மக்கள் அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தொடர்ந்து தங்கியிருப்பதன் காரணத்தால் அவர்கள் மத்தியில் மனக்குழப்பம் காணப்படுகின்றது. அவர்கள் நிம்மதியாக வாழ முடியாத சூழ்நிலை தொடர்கின்றது. இதன காரணமாக புரிந்துணர்வு உடன்படிக்கையில் முக்கியமான அம்சம் இது வரை நிறைவேற்றப்படாத காரணத்தால், மக்கள் மத்தியில் அதிருப்தி காணப்படுகின்றது.

*கேள்வி*: புரிந்துணர்வு உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்ட கால அட்டவணைப்படி செயற்பாடுகள் இடம்பெற்றனவா?

*பதில்*: இல்லை. புரிந்துணர்வு உடன்படிக்கையின்கீழ் குறிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பாடசாலைகள், வழிபாட்டுத்தலங்கள், பொது இடங்களில் இருந்து படையினர் வெளியேறியிருக்க வேண்டும். ஆனால், இன்னமும் பல பாடசாலைகள், ஆலயங்கள், பொதுக்கட்டடங்கள் பொதுமக்களுக்குத் திறக்கப்படவில்லை. இதற்குப் படைத்தரப்பினர், உயர்பாதுகாப்பு வலயம் என்ற ஒரு சாட்டைக் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

பாதுகாப்பு வலயம் என்று புதிய பிரச்சினை ஒன்று எம்மத்தியில் இன்று உருவெடுத்துள்ளது. பாதுகாப்பு வலயத்தை முழுமையாக அகற்றும்படி நாம் கேட்கவில்லை. முடிந்தளவு மக்களுக்கு இடைஞ்சல் இல்லாத வகையில் கூடியளவு விட்டுக்கொடுப்புத் தன்மையுடன் இந்தப் பிரச்சினைக்கு அரசு தீர்வுகாண முன்வரவேண்டும்.

*கேள்வி*: அதிபாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு எந்தவகையில் தீர்வு காணலாம் எனக் கருதுகிறீர்கள்?

*பதில்*: நிச்சயமாக மனம் விட்டுப் பேசினால், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும். அரசின் தரப்பிலும் இருவகையான நிர்வாகங்கள் இருப்பதும், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமைக்குக் காரணம். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஓர் அரசும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்னோர் அரசும் இருப்பதால், பாதுகாப்புப் பிரச்சினை தொடர்பாக இருவரும் கூட்டாக முடிவு எடுக்கமுடியாமல் இருப்பதும் ஒரு காரணம். அதைவிட இருதரப்பினருமே உளப்பூர்வமாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண விருப்பம் கொண்டவர்களாகத் தெரியவில்லை. இதுதான் உண்மை நிலை. 'மனமுண்டானால் இடம் உண்டு' என்பதுபோல கணிசமான பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலத் தவறியுள்ளனர்.

குறிப்பாக, தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை இயங்கவைக்க முன்னரங்க நிலையை 200 மீற்றர் பின்நகர்த்தத் தயங்கும் சூழ்நிலை காணப்படுகின்றது. போராட்டங்கள் நடந்துகொண்டிருக்கும் காலகட்டத்தில் எத்தனையோ மீள்குடியமர்வுகள் அனுமதிக்கப்பட்ட சூழ்நிலையில், புரிந்துணர்வு உடன்படிக்கையின்கீழ் 200 மீற்றரை பின்தள்ள மறுப்பது -

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த கல்லூரிக்குப் பெற்றோர், கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஏன் நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட சென்று வருவதற்குக் காட்டப்படும் கெடுபிடிகள் -

இவை நிச்சயமாக வேண்டுமென்றே விடுதலைப் புலிகளைப் போருக்கு இழுக்கும் தந்திரமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகம் எங்களுக்குத் தோன்றுகின்றது.

*கேள்வி*: புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் இயல்பு வாழ்க்கை ஏற்படாததால், அந்த உடன்படிக்கை மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனக் கருகிறீர்களா?

*பதில்*: புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, யுத்தநிறுத்தம் நடைமுறையில் இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் வடக்கு - கிழக்கில் மீண்டும் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையை மீள்பரிசீலனை செய்வதோ புதிய அத்தியாயங்களைச் சேர்ப்பதோ தேவையில்லை. இதற்குப் பதிலாக விடுதலைப் புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகத்தை வழங்கினால், தமிழர் தாயகப் பகுதியில் சுமுகநிலைமை தோன்றி, அது நிரந்தர சமாதானத்தை நோக்கிய பயணத்துக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும் என நாங்கள் நம்புகிறோம்.

*கேள்வி*: இடைக்கால நிர்வாக சபை எந்தவித அதிகாரங்களுடன் இருக்கவேண்டும் எனக் கருதுகிறீர்கள்?

*பதில்*: இடைக்காலு நிர்வாக சபையில் சட்டம், ஒழுங்கு, நீதி, காணி போன்ற நிர்வாக அமைப்புக்கள் நிச்சயம் இருக்கவேண்டும். குறிப்பாக புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்வு ஆகியவற்றை மேற்கொள்ளவும், வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதி உதவிகளை ஒருமுகப்படுத்தி, தாயகத்தில் அழிந்துபோன பகுதிகளைக் கட்டியெழுப்பவும், உட்கட்டமைப்புக்களைப் பேணவும் நிச்சயமாக இந்த இடைக்கால நிர்வாக சபை அவசியமாகின்றது.

*கேள்வி*: இடைக்கால சபையில் விடுதலைப் புலிகள் மட்டும் இடம்பெற வேண்டுமா? ஏனைய கட்சிகளுக்கும் இடம்கொடுக்க வேண்டுமா?

*பதில்*: எம்மைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசிய இனத்தின் சார்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் மாத்திரம் அதில் அங்கம் வகிக்க வேண்டும் என்பதே எமது கருத்து. இதே நேரத்தில் சிங்கள மக்களின் பிரதிநிதித்துவம், முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் அதில் இடம்பெற்றிருக்க வேண்டும் என்பது எமது கோரிக்கை.

தமிழ்த்தரப்பில் விடுதலைப் புலிகளைத் தவிர ஏனைய கட்சிகள் இடம்பெற்றால் அது நிச்சயமாக எமக்கிடையே கருத்துமுரண்பாட்டையும் மோதலையும் நோக்கி இட்டுச்சென்று சிங்களப் பேரினவாதிகள் அதைப் பயன்படுத்தி குழப்பத்தை ஏற்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படலாம் என்பதற்காகவே ஏனைய கட்சிகளுக்கு இடமளிக்க வேண்டாம் என்று கூறுகின்றோம். நிச்சயமாக நிரந்தரமான தீர்வு ஒன்று ஏற்படும்போது, பல கட்சி ஆட்சிமுறை ஒன்றுக்கு எல்லாத் தமிழ்க் கட்சிகளும் தமது கருத்தைத் தெரிவித்து ஒரு சுதந்திரமான தேர்தலில் பங்குபற்றக்கூடிய நிலைமை உருவாக்கப்படும்; உருவாக்கப்பட வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கின்றோம்.



*கேள்வி*: இடைக்கால நிர்வாக சபையை வழங்க அரசு பின்னடித்துக்கொண்டிருக்கின்றது. இந்நிலையில், எந்தவகையில் தமிழ்க் கூட்டமைப்பு அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றது?

*பதில்*: அரசுக்கு அழுத்தம் கொடுப்பது தொடர்பாக கூட்டமைப்பு தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கின்றது. அரசுடனான சந்திப்புக்களிலும் சரி, வெளிநாட்டு தூதர்களுடனான சந்திப்புக்களிலும் சரி, இடைக்கால நிர்வாக சபை உருவாக்கப்படாவிட்டால் சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்து ஒரு பாரிய யுத்தம் ஏற்படக்கூடிய ஆபத்து உள்ளது என்பதைச் சுட்டிக் காட்டி வருகின்றோம். அவ்வாறான நிலை ஏற்படுமாயின் அரசும் பேரினவாத சக்திகளும்தான் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் நாம் கூறியுள்ளோம்.

இடைக்கால நிர்வாகசபை வழங்கப்பட வேண்டும் என்ற அழுத்தத்தை அரசுக்கு கொடுத்து வருகின்றோம். இந்த விடயத்தில் நாம் மேற்கொண்ட பிரசாரம் காரணமாகவே, ஜே.வி.பியுடனான கூட்டை ஜனாதிபதி கைவிட்டார். தற்சமயம் இடைக்கால நிர்வாக சபையை வழங்கக்கூடிய சூழ்நிலை உருவாகி வருகின்றது என்றே நாம் நம்புகிறோம்.

*கேள்வி*: இடைக்கால நிர்வாக சபை அமைப்பது தொடர்பாக சர்வதேசத்தின் நிலைப்பாடு எப்படி உள்ளது?

*பதில்*: சர்வதேச சமூகம் கொண்டுள்ள நிலைப்பாட்டில் பாரிய மாற்றம் காணப்படுகின்றது. ஒரு நாட்டின் தலைநகர் போல் கிளிநொச்சிக்கு அடிக்கடி வெளிநாட்டுத் தூதர்கள் வந்து போகிறார்கள். வெளிநாட்டு உதவியுடன் எமது தாயகப் பகுதியைப் புனரமைக்கக் கூடியநிலை உருவாகியுள்ளது. இடைக்கால நிர்வாகத்தில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவதால் சர்வதேச பார்வையில் ஒரு பயங்கரவாத அமைப்பு என்ற நிலையில் இருந்து கணிசமான மாற்றம் ஏற்படக் கூடிய வாய்ப்பு ஏற்படும். ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாத அமைப்புக்கள் பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகள் நீக்கப்பட்டுள்ளமை வெளிநாடுகளின் பார்வையில் எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமாக பார்க்காது உண்மையாக ஓர் இனத்தின் விடுதலைக்கான போராட்டமாகக் பார்க்கின்றார்கள் என்றுதான் கூறவேண்டும்.

*கேள்வி*: விடுதலைப் புலிகளுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையிலான முரண்பாடுகளை நீக்க தமிழ்க் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் ஏதாவது முயற்சி மேற்கொண்டுள்ளனவா?

*பதில்*: இந்த முரண்பாடுகளைத் தீர்க்க தமிழ்க் கூட்டமைப்பு தீவிரமாகச செயற்பட்டு வருகின்றது. குறிப்பாக தமிழ்க் கூட்டமைப்பின் நடவடிக்கைக் குழுவும், நாடாளுமன்ற உறுப்பினர் குழுவும் எதிர்வரும் 8 ஆம் திகதி கொழும்பில் கூடவிருக்கின்றன. இதையடுத்து, முக்கிய முடிவுகள் எடுககப்பட்டு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் முழுமையான சுமுகமான உறவு எட்டப்படும் என நம்புகிறோம்.

**செவ்வி கண்டவர்**
**குகா**

*கேள்வி*: அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகப் படைத்தரப்பு கடும்போக்கு நிலையைக் கடைப்பிடிக்கின்றது. இது விடயமாக தமிழ்க கூட்டமைப்பு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கின்றது?

*பதில்*: அதியுயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக கடந்த 25 ஆம் திகதி நாடாளுமன்றக் கட்டடத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. சகல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பைப் பெற்று அரசுக்கு அழுத்தம் கொடுக்கவிருக்கின்றோம்.

★ அரசுக்கு வழங்கும் ஆதரவை மீள்பரிசீலனை செய்வது -

★ அதைவிட நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் போராட்டங்களை நடத்துவது -

மேற்படி இருவித ஆலோசனைகள் குறித்து கலந்துரையாடி அரசுக்கு அழுத்தம் கொடுக்க எண்ணியுள்ளோம்.

இதற்குப் புறம்பாக வெளியில் மக்கள் போராட்டங்களையும் முன்னெடுக்க உத்தேசித்துள்ளோம்.

உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினையில் கணிசமான ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்பது எமது கருத்து. இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டால், இந்தப் பிரச்சினைகுச் சுமுகமான தீர்வு கிட்டும் என நம்புகிறோம்.

*கேள்வி*: தெற்கில் உருவாகி வரும் அரசியல் நிலை சமாதானப் பேச்சுக்களைப் பாதிக்குமா?

*பதில்*: சமாதானப் பேச்சுகளின் இறுதியான முடிவுகள், தீர்வுகள் எட்டப்படுவதற்கு, பிரதான கட்சிகளின் ஆதரவு தேவை. அப்படியான தீர்வு எட்டப்பட இரு பிரதான கட்சிகளும் ஆதரவு வழங்கும் நிலை இதுவரை இல்லை. ஆனால், காலப்போக்கில் இரு கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கக் கூடிய சூழ்நிலை உருவாகும். சர்வதேச நாடுகளின அழுத்தங்கள் இருப்பதால் அது சாத்தியமாகலாம்.

இருகட்சிகளும் நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டுமென விரும்புகின்றன.

ஆனால், உட்கட்சி அரசியல் மற்றும் ஆதிக்கப்போட்டியால் இந்த இழுபறிநிலை நீடிக்கின்றது. எது எப்படியிருந்தாலும், சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவேண்டிய அவசியத்தை தென்னிலங்கை மக்கள் உணர்ந்துள்ளார்கள். இதன் காரணமாக சமாதானப் பேச்சுக்கள் குழம்பக்கூடிய சாத்தியம் குறைவு என்றே கூறலாம்.

*கேள்வி*: குடாநாட்டில் பல சர்வதேச நிறுவனங்கள் செயற்படுகின்றன. அவற்றின் சேவைகளால் மக்கள் பயன் அடைந்துள்ளார்களா?

*பதில்*: ஒரு சில நிறுவனங்களைத் தவர பெரும்பாலான நிறுவனங்களின் நிர்வாக நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை. பெருமளவில் பணம் வருகின்றது, போகின்றது. ஆனால், மக்களின் வாழ்க்கையில் விடிவு இல்லை என்பதுதான் கருத்து. உள்நாட்டு நிறுவனங்களுக்கும் பொருந்தும் சர்வதேச நிறுவனங்களுக்கும் பொருந்தும். 'பேச்சுப்பல்லக்கு தம்பி கால் நடை' என்ற நிலைமையில்தான் எமது மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

*கேள்வி*: குடாநாட்டில் அடிதடிக் கலாசாரம் ஒன்று உருவாகியிருக்கிறது. இதை எந்தவகையில் தடுக்கலாம்?


*பதில்*: புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் - ஏ-9 பாதை திறக்கப்பட்ட பிறகு பல விடயங்கள் நடைபெற்றிருக்கின்றன. தென்னிலங்கையில் இருந்து யாத்திரிகர்கள் வந்து போகிறார்கள். மக்கள் வருகின்றார்கள், வெளிநாட்டில் இருந்து எமது மக்களின் உறவினர்கள், நண்பர்கள் வருகின்றனர். இதனால், இங்கு பணப் புழக்கம் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக சமுதாயத்தில் ஓர் ஏற்றத்தாழ்வும் சமநிலையற்ற தன்மையும் உருவாகியிருக்கின்றது.

இதன் காரணமாகத்தான் இந்த அடிதடிக் கலாசாரம்.

இவையெல்லாம் எமது பகுதியில் சட்டம், ஒழுங்கு சீரழிந்துள்ளதையே காட்டுகின்றன. ஒரு நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டு, சட்டம், ஒழுங்கு ஒழுங்காகப் பராமரிக்கப்படும்போதுதான் இது சீராகும். ஸ்ரீலங்கா பொலீஸாரால் சட்டம், ஒழுங்கு ஓரளவு பராமரிக்கப் பட்டாலும்கூட முழுமையாக அவர்களால் அதைச் செயற்படுத்த முடியவில்லை. மொழிப் பிரச்சினை, போதிய ஆளணியின்மை ஆகியனவே அதற்குக் காரணமாகும்.

நிர்வாகம் எமது கைகளில் இருக்குமாயின் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட முடியும் என்ற நம்பிகையை

(12ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் நடக்கும் சமாதான முயற்சிகளில் சம்பந்தப்பட இந்தியா விரும்புகிறது. இந்த விவகாரத்தில் எப்படி நுழைவது என்று தெரியாது தடுமாறுகிறது இந்தியா.

ஆப்பிழுத்த குரங்கின் நிலையில்தான் அது தற்சமயம் உள்ளது. சமாதானப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படுமென்றோ, விடுதலைப் புலிகளின் கை ஓங்கு மென்றோ இந்தியா எதிர்பார்த்திருக்கவில்லை. இன்றுள்ள நிலையில் இலங்கையில் தமது ஆதிக்கம் இல்லாமல் போய்விடுமா என்ற அச்சம் அவர்களுக்கு வந்துவிட்டது. நோர்வே, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் ஓரணியில் நிற்பதே இந்த அச்சத்துக்கு காரணம்...

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

Sony, National T.Vகள் (14", 19", 20", 21",25",29") Video Deck, ஸ்பீக்கர்கள் (Pineor, Kenwood) சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்டு மலிவான விலையில் விற்பனைக்குண்டு. (ஒரிஜினல் ஜப்பான்) தொடர்பு: 150, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (23108)

தற்காலிக மலசலகூட பாவனைக் காகப் பொருத்தப்பட்ட துளைகள் இடப்பட்ட 100 சோடி எண்ணெய் பரல்கள் (210 லீற்றர்), பாவித்த வாகன ரயர்கள் (7x50-16) 27 தனி என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 222 2026 (23225)

நல்ல நிலையிலுள்ள L.G. சலவை இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தருபாஜா, 73/1, கலட்டி அம்மன் தெரு, வண்வட கிழக்கு, யாழ்ப்பாணம். (23234)

### வீடு விற்பனைக்கு

கண்டி வீதி, பென்ரிக்கோஸ் லேனில் கச்சேரிக்கு அண்மையில் 3பரப்புக் காணியில் நன்னீர் கிணற்றுடன் சகல வசதிகளுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: R.ரஞ்சித், 278, பருத்தித்துறை வீதி, நல்லூர். T.P.: 0777 111225 (23265)

### காணி விற்பனைக்கு

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வீதி, வடலியடைப்பில் (வடலியடைப்பு ஐயனார் ஆலயத்திற்கு அண்மையில்) 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு.து.பகீரதன், அரசடி வீதி, வடலியடைப்பு. (சி-30410)

### O/L கணிதம்

ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் இதுவரை சித்தி அடையாத வர்களுக்கும் 38 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் 40 மணித்தியாலங் களில் கணிதத்தில் A பெறுபேறடையக் கற்பிக்கப்படும். காலை 6.00 மணி - 9.00 மணிக்கு சந்திக்கவும். தொடர்பு: க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (23137)

### தவறிவிட்டது

அருளானந்தம் லின்ரன்ஜோன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.651044944V) 02.09.2003 அன்று யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 101, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.: 222 6930. சன்மானம் வழங்கப்படும். (23270)

### மணமகள் தேவை

இந்து, கௌரவ குடும்பம், 1967 இல் பிறந்த, மிருகசீரிடம் நட்சத்திரம், இடபராசி 8 இல் செவ்வாய் (குற்ற மற்றது), விவாகரத்துப் பெற்ற, கொம் பியூட்டர் இஞ்சினியராக மாதம் 50,000/- இற்கு மேல் வருமானமுடைய யாழ்ப்பாணத்தில் வேலை பார்க்கும் மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விளம்பர இல. 2064, மே/பா உதயன். (23273)


# விடுதலை....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமக்குண்டு.

1996ஆம் ஆண்டு குடாநாடு படையினர் வசம் வந்தபின்பே போதைவஸ்து பாவனை, கலாசார சீரழிவு, அடிதடி கலாசாரம் ஆகியன ஆரம்பமாகி இன்று அவை விஸ்வரூபம் எடுத்துள்ளன.

மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியும் பரவலான பிரசாரமும் தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும்.

ஆபாசப்படங்களாக இருந்தால் என்ன, போதைவஸ்துகளாக இருந்தால் என்ன, அடிதடிகள் என்றால் என்ன அவற்றைத் தடுப்பதற்கான சட்ட வலுக்கொண்ட நிர்வாக அமைப்பு இல்லாததால், தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்ற மோசமான நிலைமை காணப்படுகின்றது.

இவற்றைத் தடுக்க வலுவான பின்னணி கொண்ட அணி இல்லாமல் எதுவும் செய்யமுடியாது. விடுதலைப் புலிகள் சில விடயங்களைச் செய்கிறார்கள். அவர்கள் ஏற்கனவே ஆயுதம் தாங்கிய அமைப்பு என்ற மனப்பயம் காரணமாக அவர்கள் சொல்வதைப் பெருமளவில் கேட்கிறார்கள்.

ஆனால், குடாநாட்டில் அவர்கள் வசம் ஆயுதம் இல்லை என்ற காரணத்தால் அவர்களால் முழுமையாக இத்தகைய செயல்களைக் கட்டுப்படுத்த முடியாதநிலை காணப்படுகின்றது. ஆயுதபலம் இல்லாமல் இதை முழுமையாகக் கட்டுப்படுத்தமுடியாது என்றே கருதுகின்றேன்.

*கேள்வி:* பேச்சுக்களில் மூன்றாம் தரப்பாக முஸ்லிம் தரப்பு பங்குபற்ற வேண்டும் என்று விடுக்கப்படும் கோரிக்கை தொடர்பாக...?

*பதில்:* பேச்சுக்களில் 3 ஆம் தரப்பாக முஸ்லிம் தரப்பு பங்குபற்ற வேண்டும் என்ற கோரிக்கையை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது. பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இருதரப்புகள்தான் பேசவேண்டும். இன்று பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகள் என்றால் விடுதலைப் புலிகளும் அரசும்தான் போரில் ஈடுபட்டன. அவர்கள் பேசி தீர்வு ஒன்றைக் காணாமல், 3 ஆம் தரப்பாக முஸ்லிம் தரப்பு நுழையத் தேவையில்லை. என்ன தீர்வு கிடைக்கின்றது என்று பார்த்தே முஸ்லிம்களும் தமிழர்களும் அதிகாரங்களை எப்படி பிரிப்பது என்று பேசலாம். எது கிடைக்கப் போகின்றது என்று தெரியாமல் எப்படி பிரிப்பது என்று முன்கூட்டி பேசிப்பயனில்லை.

இந்நிலையில், முஸ்லிம்களையும் தமிழர்களையும் முட்டிமோதவைத்து குழப்பத்தை ஏற்படுத்த அரசு முயலலாம். பேச்சுக்களில் ஹக்கீம் பங்கு பற்றி அங்கு என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொண்டு வருகின்றார். இந்நிலையில், ஏன் 3 ஆம் தரப்பு அவர்கள் பங்குபற்ற வேண்டும்?

*கேள்வி:* இலங்கை விவகாரத்தில் இப்போது இந்தியாவின் நிலைப்பாடு எப்படியிருக்கின்றது?

*பதில்:* சமாதான முயற்சிகளில் ஈடுபட இந்தியா விரும்புகிறது. எப்படி இந்த விடயத்தில் நுழைவது என்று தெரியாது இந்தியா தடுமாறுகின்றது. திருகோணமலையில் எண்ணெய்த் தாங்கியை வாடகைக்கு எடுத்தது இதையே காட்டுகிறது.

ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் தான் இந்தியா தற்சமயம் உள்ளது. சமாதானப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படும் என்றோ, விடுதலைப் புலிகளின் கை ஓங்கும் என்றோ இந்தியா நினைத்திருக்கவில்லை. இன்றுள்ள நிலையில், இலங்கையில் தமது ஆதிக்கம் இல்லாமல் போய் விடுமா என்ற அச்சம் அவர்களுக்கு வந்துவிட்டது. நோர்வே, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் ஓரணியில் நிற்பதே அதற்குக்காரணம்.

நோர்வே வர முன்னர் இந்தியா தலையிடவேண்டும் எனக் கோரினோம். அதை அப்போது செய்யாமல் இப்போது தடுமாறிப் பயன் ஏற்படப் போவதில்லை.


### நிதம்ஸ் இசைப் பயிலகம்

✦ ஓர்கன் ✦ கிற்றார்
✦ ஹார்மோனியம்
✦ மலேடிக்கா

புதிய வகுப்புகள் ஆரம்பம்:
நேரம்: 4.00 p.m. (ஞாயிற்றுக்கிழமை)
05.10.2003 - விஜயதசமி
R.கீதன்
691, ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்.
(23271) (24-13-16)



### விற்பனை உதவியாளர் தேவை

பிரபல வர்த்தக தாபனம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர் தேவை.

தொடர்புகட்கு:-
தி.சற்குணராசா ஐயா
சதுர்த்திகா களஞ்சியம்
இருபாலைச் சந்தி, கோப்பாய். (C/30511)



### கணனி வகுப்புகள்

MS. Word
MS. Excel
MS. Access
Page Maker
(காலம் - 3 மாதம்)
ஆரம்பம்: 05.10.2003
ஞாயிறு - பி.ப. 4மணி

**திகழ் கல்வி நிறுவனம்**
K.K.S. வீதி, இணுவில்.
(23272)


## இன்று பெருமாள் ஆலயத்தில் இரதோற்சவம்

யாழ்ப்பாணம்,ஒக்.4

யாழ். வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் அதனைத் தொடர்ந்து வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேரில் வீதியுலா வருதலும் இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆலயத்தின் சந்திர புஷ்கரணியில் தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்க உற்சவமும் நடைபெறும். (எ-10)

## இந்திய நிலையம் நடத்தும் போட்டி

கொழும்பு,ஒக்.4

சிறுவர்தினத்தையொட்டி கொழும்பில் உள்ள இந்திய கலாசார நிலையம் சிறுவர்களுக்கான வர்ணம் தீட்டுதல், படம் வரைதல் மற்றும் எழுத்துப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இப்போட்டிகள் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு இலக்கம் 133, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 4 எனும் முகவரியில் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் சிறுவர்கள் 01-2-500014 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தமது பெயர், விவரங்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-10)

## விவசாயபீடம் நடத்தும் அறிவுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.4

யாழ்பல்கலைக்கழக விவசாயபீட மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்படுகின்ற ஜெயக்குமார், கிருபாகரன் ஞாபகார்த்த பொது அறிவுப் போட்டி இன்று காலை 10மணிக்கு வடமராட்சி பாடசாலைகளுக்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும் தென்மராட்சி மற்றும் வலிகாமம் பாடசாலைகளுக்கு யாழ். பல்கலைக்கழக விவசாயபீடத்திலும் - கிளிநொச்சிப் பாடசாலைகளுக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. (ஓ-10)

## வேலைத்திட்டங்கள் தொடர்பான பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்,ஒக்.4

2004 ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டில் மேற்கொள்ள வேண்டிய அவசர வேலைத்திட்டங்களைப் பற்றி இனங்காண்பதற்கான இருநாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 17 ஆம், 18ஆம் திகதிகளில் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் குடாநாட்டில் இயங்கும் சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டு அடுத்த ஆண்டுக்கான வேலைத்திட்டங்களைப் பற்றி ஆராய்வர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ-5)

## சாவகச்சேரி இந்துவின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.4

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே கல்வி, விளையாட்டு, கலை மற்றும் கலாசாரப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இக்கல்லூரியின் நூற்றாண்டு நிறைவுவிழா, எதிர்வரும் பெப்ரவரி மாதம் கொண்டாடப்படவுள்ளது. இதற்காகப் பாடசாலை அதிபர் இ.கயிலைநாதன் தலைமையில் பாடசாலைச் சமூகம் அடங்கிய செயற்பாட்டுக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

நூற்றாண்டு நிறைவையொட்டி முத்திரை ஒன்று வெளியிடப்படவுள்ளது. சுமார் 2 ஆயிரத்து 500 இருக்கைகள் கொண்ட பெரியளவிலான அரங்கமொன்றும் ஐரோப்பிய பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் அமைக்கப்படவுள்ளதாக மேற்படி செயற்பாட்டுக் குழுவின் செயலாளர் ஜே.ஜெயக்குமார் தெரிவித்தார். (எ-9)

லஞ்ச ஊழல் மோசடிகள் ஆணைக்குழு விவகாரம்

# ஜனாதிபதி அடம்பிடிப்பதில் எவ்வித நியாயமும் இல்லை

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

லஞ்ச, ஊழல் மோசடிகள் ஆணைக்குழு தனது கட்டுப்பாட்டிலேயே இருக்கவேண்டும் என ஜனாதிபதி அடம்பிடிக்கிறார். இது 17 ஆவது அரசியல் யாப்பின்படி அரசமைப்புக்கு முரணானது. ஜனாதிபதி அடம்பிடிப்பதில் எவ்வித நியாயமும் இல்லை என்கிறார் அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

லஞ்ச ஊழல்கள், மோசடிகள் ஆணைக்குழுவின் முன் பல ஆயிரம் புகார்கள் தேங்கிக் கிடக்கின்றன.

ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் காலமானதைத் தொடர்ந்து அதன் செயற்பாடு முடக்கிவைக்கப்பட்டுள்ளது. எனவே, அதனை இயங்க வைக்கும் வகையில் லஞ்ச ஊழல்கள், மோசடி ஆணைக்குழு சட்டத்தில் திருத்தம் ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார இது தொடர்பான சிபார்சுகளை நேற்றுமுன்தினம் அமைச்சரவையில் சமர்ப்பித்தார். 45 ஆவது நிலையியல் கட்டளைச் சட்டத்தின்படி நீதி அமைச்சரே திருத்தச் சட்டத்தினை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் உரித்துடையவர். 17 ஆவது திருத்தச் சட்டமும் இதனை உறுதிப்படுத்துகின்றது. ஆனால், ஜனாதிபதி இந்த ஆணைக்குழு தன் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும் என அடம்பிடிப்பதில் நியாயமில்லை.

லஞ்ச, ஊழல் மோசடிகள் தொடர்பான விடயத்தில் தனி ஒரு மனிதரின் ஆதிக்கம் இருக்கக்கூடாது என்பதை உறுதிப்படுத்தும் நோக்குடனேயே அதில் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன. ஆனால், ஜனாதிபதி இது பற்றிப் பேசவேண்டும் என்கிறார்.

இவ்விடயத்தில் தொடர்ந்தும் காலம் கடத்தமுடியாது. எனவே, அரசியல் அமைப்பின்படியும், நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் 45 ஆவது பிரிவின்படியும் நீதி அமைச்சர் லொக்குபண்டார இந்தத் திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# போதைப்பொருள் வியாபாரிகளுடன் பொலிஸ் அதிகாரிகளுக்குத் தொடர்பு

கொழும்பு,ஒக்.4

அண்மையில் சுமார் 70 லட்சம் ரூபா பெறுமதியான 'ஹெரோயின்' போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட இரு போதைப்பொருள் வியாபாரிகளின் நடவடிக்கைகளில் ஏழு பொலிஸ் உயரதிகாரிகளுக்கு நெருங்கிய தொடர்பு இருந்தமை தெரியவந்துள்ளது. இந்தப் போதைப் பொருள் வியாபாரிகளில் ஒருவர் சிங்களவர்; மற்றவர் தமிழர்.

முல்லேரிய பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இந்த இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக போதைப் பொருள் தடுப்புப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சம்பந்தப்பட்ட வியாபாரிகளின் வீடுகளில் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மூலம், அண்மையில் ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவர் உட்பட்ட ஆறு பொலிஸ் அதிகாரிகள் இவ்வியாபாரிகளின் நடவடிக்கைகளுக்கு உதவி வந்த தாகவும் -

சொகுசு வாகனங்களையும் மாதாந்தம் பல லட்சம் ரூபா பணத்தையும் அவர்கள் லஞ்சமாகப் பெற்று வந்த தாகவும் - தெரியவந்துள்ளது.

இவ்விரு வியாபாரிகளுடன் இணைந்து இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்ட மற்றுமொரு வியாபாரியைக் கைதுசெய்ய நடவடிக்கைகள் மேற்கொண்டுவரும் போதைப்பொருள் தடுப்புப் பொலிஸார், குறிப்பிட்ட வியாபாரியின் குடும்பத்தினர் பொலிட்டனில் வசித்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

இவ்வியாபாரிகளுடன் நெருங்கிய தொடர்புவைத்திருந்த மேலும் சில பொலிஸ் அதிகாரிகள் பற்றித் தெரியவந்துள்ளதாகக் கூறிய பொலிஸார் அதுபற்றி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

## சிறுவர், முதியோர் தினவிழா

தென்மராட்சி,ஒக்.4

தென்மராட்சிப் பிரதேச செயலகம் நடத்தும் சிறுவர், முதியோர் தினவிழா நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் சாவகச்சேரியில் உள்ள தென்னிந்தியத் திருச்சபை பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. பிறேமகாந்தனும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் மு.செ.சரவணபவனும் கௌரவ விருந்தினர்களாக அருட்திரு. ரி.எச். வசந்தகுமார், சாவகச்சேரி நகர கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் பி.என்.சற்குணராசா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-10-117)

## அ.அட்டைகள் விநியோகம்

தென்மராட்சி,ஒக்.4

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தோரில் 400 பேரின் அடையாள அட்டைகள் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த அடையாள அட்டைகள் அந்தந்த கிராம அலுவலரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் - உரியவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் பெற்றுக்கொள்ளுமாறும் - பிரதேச செயலக அடையாள அட்டைகள் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஓ-117)


### Sky Computer Systems

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

MS Office 3 months
Auto CAD 3 months
Hard ware 6 months
Financial Planning Using Excel } 1month

Note: ஒவ்வொரு மாணவர்களையும் தனித்தனியான முறையில் கவனிக்கப்படும்.
உங்களுக்கு வசதியான நேரத்தைத் தெரிந்தெடுத்துக்கொள்ளலாம்.
✳ சான்றிதழ்கள் யாவும் கொழும்பு தலைமைக்காரியாலயத்தில் இருந்து பெற்றுத்தரப்படும். 15,000/= இல் இருந்து கணனிகளை பெற்றுக்கொள்ளலாம்.
மொனிட்டர் 15" 6000/=

**Sky computer system**
109, Kandy Road, Chundikulli. Jaffna (கச்சேரிக்கு அருகில்).
Today you learn Tomorrow you lead.
(C/30523) (24-13-16)



### பாலசுப்ரமணியனின் மிருதங்க வகுப்பு

புதிய வகுப்புக்கள்
விஜயதசமியன்று மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகும்.
சட்டநாதர் பின் வீதி, நல்லூர் - யாழ்.
(23281) (24-13-16)



### 2ஆம் வருடம் கலைப்பீடம்

சுற்றுலா செல்பவர்கள் 6.10.2003 இன் முன்பு (4,5,6 திகதிகளில்) மாணவர் பொது அறையில் காலை 10.00 - 1.00 மணிவரை பணத்தைச் செலுத்திப் பதிவினை உறுதிப்படுத்தவும். 8.10.2003 காலை 7.00 மணிக்கு சுற்றுலா செல்ல இருப்பதால் உறுதிப்படுத்தியோர் சமுகம் தரவும்.

(23280) (24-13-16) *2ஆம் வருட பிரதிநிதி, கலைப்பீடம்.*



மிஸ் செர்பியாவாக பெல்கிரேடு நகரில் தேர்ந்தெடுக்கப்பட்ட மோண்டேநீக்ரோ பொஜானா வுஜாடிநோவிக் (வயது22). சீனாவில் டிசெம்பர் 6 ஆம் திகதி நடைபெறும் உலக அழகிப் போட்டியில் செர்பியா (முன்னாள் சோவியத் குடியரசு) சார்பில் இவர் போட்டியிடுகிறார்.

# முதலாளியின் அனுமதி இல்லாமலேயே சீனர்கள் இனிமேல் திருமணம் முடிக்கலாம்

திருமணம் செய்து கொள்வதற்கு சீனாவில் இதுவரை காலமும் நடைமுறையிலிருந்த சட்டம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. பணிகொள்வோரிடம் (முதலாளி) இனிமேல் அனுமதி பெற்றுக்கொள்ளாமலேயே திருமணம் செய்யலாம் என்று பணியாளர்களுக்கு சீன அரசு அறிவுறுத்தியுள்ளது.

நேற்றிலிருந்து இந்த நடைமுறை அங்கு அமுலுக்கு வந்தது. இதுவரைகாலமும் திருமணம் செய்து கொள்ளவிரும்பும் ஜோடிகள் தமது முதலாளிமாரிடம் அனுமதி பெற வேண்டியிருந்தது. கடந்த மாதம் அங்கு நிறைவேற்றப்பட்ட புதிய சட்டவிதிகளின் படி ஜோடிகள் தமது அடையாள அட்டையையும், வதிவிட அனுமதிப்பத்திரத்தையும், திருமணப் பதிவாளரிடம் காண்பித்தால் போதுமானது.

இதனால், திருமணம் செய்வதற்கு முதலாளிமாரிடம் அனுமதி பெற்று வந்த முறை நேற்றிலிருந்து அங்கு ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், கட்டாய மருத்துவ சோதனை செய்யப்பட வேண்டுமென்ற நிபந்தனையும் நீக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் நடைமுறையில் இருந்த திருமணச் சட்டத்தால் பலரது திருமணம் தடைப்பட்டுள்ளது என்று மனித உரிமைக் குழுக்களுக்கு அறிவித்ததையடுத்தே முதலாளிமாரிடம் அனுமதி பெறும் முறையை சீன அரசு ரத்துச் செய்துள்ளது.

★★★

# இலக்கியத்துக்கான நோபல் பரிசு



தென்னாபிரிக்க எழுத்தாளர் ஜோன் மேக்ஸ்வெல் கோட்ஸிக்கு இலக்கியத்துக்கான இந்த ஆண்டின் நோபல் பரிசு கிடைத்துள்ளது

ஸ்டாக்ஹோமில் டிசெம்பர் 10ஆம் திகதி நடைபெறும் விழாவில் ஸ்வீடன் மன்னர் கார்ல் கஸ்டர்.'.ப். பரிசினை வழங்குவார். அன்றைய தினம் நோபல் பரிசை நிறுவிய ஆல்பிரெட் நோபல் நினைவு தினம் ஆகும்.

'டிஸ்கிரேஸ்', 'வெயிட்டிங்போர் திபார்பேரியன்ஸ்', 'இன் திஹார்ட் ஒப்த கன்ட்ரி' உள்ளிட்டவை இவரது புதினங்கள். இவரது சமீபத்திய புத்தகம் 'எலிசபெத் காஸ்டிலோ', 'எயிட் லெசன்ஸ்' இது இந்த ஆண்டு வெளியானது.

கட்டுரையும் புனைகதையும் சேர்ந்தவகைப் புத்தகம் இது.

ஜோன் மேக்ஸ்வெல் கோட்ஸி 1940ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவின் கேப்டவுன் நகரில் பிறந்தார். 2002 முதல் ஆஸ்திரேலியாவில் வசித்து வருகிறார்.

# இறந்த முன்னோர்களுக்கு உணவு வழங்கும் விநோதம்

கம்போடியாவில் 'பிதுர்' தினத்தை முன்னிட்டு மக்கள் புத்தகோயில்களுக்கு சென்று தங்களது முன்னோர்களுக்கு உணவு, ஆடைகள், மலர்கள் மற்றும் பணம் என்பன வழங்கி வருகின்றனர்.

கம்போடியாவில் ஒவ்வொரு ஆண்டும் 'பிதுர் தினம்' சடங்கு பதினைந்து நாள்களுக்கு நடக்கும். முககியமான சடங்கின் முதல் மூன்று நாள்களும் மக்கள் புத்த கோயில்களுக்குச் சென்று தங்களது முன்னோர்களுக்கு உணவு, ஆடைகள், மலர்கள் மற்றும் பணம் வழங்குவார்கள். இந்த சடங்கு கடந்த ஒன்பதாம் நூற்றாண்டில் இருந்து 13 ஆம் நூற்றாண்டு வரை கம்போடியாவை ஆண்ட அங்கோர் மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் இருந்து பின்பற்றப்பட்டு வருகிறது. இந்த மூன்று நாள்களுக்கு இறந்த முன்னோர்கள் புத்த கோயில்களுக்கு தங்களது உறவினர்களைத் தேடி வந்து அடுத்த ஆண்டு வரை தங்களுக்குத் தேவையானவற்றை வாங்கிச் செல்வார்கள் என்று நம்பப்படுகிறது.



இந்தச் சடங்கை முன்னிட்டு உலக அளவில் கம்போடிய மக்கள் எங்கிருந்தாலும் தங்களது தாயகத்திற்குச் செல்கின்றனர். தங்களது முன்னோர்களுக்கு பிதுர் சடங்கை நிறைவேற்றுகின்றனர். பதினைந்து நாள்கள் நடக்கும் விழாவில் முதல் மூன்று நாள்களுக்கு அரச அலுவலகங்களுக்கு விடுமுறை விடப்படும்.

★★★

தமிழகத்தைச் சேர்ந்த வீ. மோகன் என்பவர் கைகளை பின்னால் கட்டிக்கொண்டு 25 கிலோ மீற்றர் தூரத்தை 10 நிமிடங்களில் ஸ்கூட்டரில் கடந்து லிம்கா சாதனை முயற்சி மேற்கொண்டார்.

# மகாராஷ்டிராவில் ஒரு பாலியல் கிராமம்

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் மஹோஜி என்னும் கிராமத்தின் வருமானமாக உலகத்தில் புராதன தொழிலாக கருதப்படும் விபசாரத் தொழில்தான் உள்ளது.

இக்கிராமத்தில் பெண்ணாக பிறப்பதே மிகப்பெரும் கொடுமை என்று கூறுமளவிற்கு இவ்வூர் மக்களின் முக்கிய தொழிலாக பாலியல் குற்றம் உள்ளது.

மஹோஜி கிராமத்தில் பெண் குழந்தை பிறந்தால்தான் அவர்கள் மகிழ்ச்சி அடைகின்றனர். ஏனெனில், ஈடுபடும் பெண்களின் பிற்கால வாழ்க்கை நரக வேதனையிலேயே கழிகிறது. இவர்களில் பெரும்பாலானவர்கள் பால்வினை நோய்களாலேயே இறப்பதாகக் கூறப்படுகிறது. ஆயினும் இத்தொழிலில்

இம்மாநிலத்தில் ஜலகான் என்னும் ஊருக்கருகே உள்ள சிறிய கிராமம் மஹோஜி. இங்கு ஒவ்வொரு குடும்பத்திலும் இளம்பெண்களை விபசாரத்தில் ஈடுபடுத்தி அதன் மூலமே வருமானம் ஈட்டுகின்றனர்.

அவர்கள் மூலம் பணத்தை குவிக்கலாம் என்ற எண்ணம்தான்.

ஒரு பெண் 16 வயதை அடைந்ததும் அவளுக்கு " நாத் உத்தர்னா" என்னும் சடங்கைச் செய்து பாலியல் தொழிலுக்கு களமிறக்குகின்றனர். இவ்வாறு பாலியல் தொழிலில் புதிது புதிதாக யுவதிகளை ஈடுபடுத்தும் வழக்கம் மட்டும் நிறுத்தப்படுவதாகத் தெரியவில்லை. இந்த விடயத்தில் பொலீஸாரும், அதிகாரிகளும் கண்மூடி , வாய் பொத்தியே காலம் கடத்துகின்றனர்.

★★★

# கள்ளக் காதல் கண்ணை மறைத்ததால் ஒருவருக்கு சாகும் வரை சிறைத்தண்டனை

தமிழகத்தில் கள்ளக் காதலியின் கணவனை வெட்டிக்கொன்றவரை சாகும் வரை சிறையில் அடைக்க வேண்டும் என்ற தீர்ப்பை திண்டுக்கல் நீதிமன்ற நீதிபதி வழங்கினார்.

பழனி அருகே உள்ள பழைய ஆயக்குடியைச் சேர்ந்தவர் இளஞ்செழியன் (வயது 30) இவர் கொய்யாப்பழ வியாபாரம் செய்துவந்தார்.

இவருக்கு பிரியதர்சினி (வயது 11) என்ற மகள் உள்ளார். இவரது மனைவி மல்லிகாவிற்கும், மற்றொரு கொய்யாப்பழ வியாபாரியான முருகானந்தம் (வயது 34) என்பவருக்கும் கள்ளத் தொடர்பு ஏற்பட்டது. இதை அறிந்த இளஞ்செழியன் இருவரையும் கண்டித்த நிலையில், மல்லிகா முருகானந்தத்துடன் சென்றுவிட்டார்.

இருவரும் உடுமலைப்பேட்டையில் குடும்பம் நடத்திவந்தனர். இதை அறிந்த இளஞ்செழியன் ஊர் பஞ்சாயத்தில் முறையீடுசெய்தார். பஞ்சாயத்தார் மல்லிகாவையும் முருகானந்தத்தையும் வரவழைத்துக் கண்டித்ததுடன், மல்லிகாவை இளஞ்செழியனுடன் அனுப்பிவைத்தனர்.

அதன் பிறகும் முருகானந்தம் ரகசியமாக மல்லிகாவைச் சந்தித்து வந்துள்ளார். இதனிடையே மல்லிகாவின் மகள் பிரியதர்சினி, முருகானந்தம் ரகசியமாக தாயை சந்திப்பதைக்கண்டு தனது தந்தையிடம் தகவல் தெரிவித்தாராம்.

இதனால் பிரியதர்சினி மீது ஆத்திரம் கொண்ட முருகானந்தம், அவள் தனியாக இருந்த போது லட்டில் விஷத்தை வைத்துக் கொடுத்துள்ளார். அதைச் சாப்பிட்ட பிரியதர்சினி மயங்கி விழுந்தார். தீவிர சிகிச்சைக்குப் பிறகு பிரியதர்சினி பிழைத்துக் கொண்டார். முருகானந்தத்தை பொலீஸார் கொலை முயற்சி வழக்கின் கீழ் கைதுசெய்தனர்.

பிணையில் வெளிவந்த முருகானந்தம் மீண்டும் மல்லிகாவை சந்திக்க முயற்சிசெய்துள்ளார். ஆனால் மல்லிகா தனது மகளைக் கொல்ல முயற்சிசெய்ததால் முருகானந்தத்தை சந்திக்க மறுத்துவிட்டார். இதனால், மேலும் ஆத்திரமடைந்த முருகானந்தம் கடந்த ஆண்டு மார்ச் 29 ஆம் திகதி இடும்பன் கோவிலுக்கு மொபெட்டில் தனது தாயுடன் சென்று கொண்டிருந்த இளஞ்செழியனை வழிமறித்து அரிவாளால் வெட்டிக் கொலைசெய்தார்.

பொலீஸார் முருகானந்தத்தைக் கைதுசெய்து வழக்குத் தொடர்ந்தனர். வழக்கை திண்டுக்கல் நீதிபதி ராஜகோபால் விசாரணைசெய்தார். அவர் வழங்கிய தீர்ப்பில் முருகானந்தத்தை சாகும் வரை சிறையில் அடைக்க உத்தரவிட்டார். அத்துடன், சிறையில் நன்னடத்தைக்காக தண்டனைக்காலம் குறைக்கப்பட்டாலும் குறைந்த பட்சம் 20 ஆண்டுகள் முருகானந்தம் சிறைத்தண்டனை அனுபவித்தாக வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கி உள்ளார். சாதாரணமாக கொலைக் குற்றங்களுக்கு வழங்கப்படும் ஆயுள் தண்டனை என்பது 14 ஆண்டு சிறைத்தண்டனை ஆகும். ஆனால், குற்றத்தின் தீவிரத்தை ஒட்டி நீதிபதி இந்த வித்தியாசமான தீர்ப்பை வழங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.



இந்தியாவில் இந்து சமயச் சடங்குகளை நிறைவேற்றுவதற்கு நாட்டின் முக்கிய எதிர்க்கட்சியான காங்கிரஸ் அனுமதிப்பதில்லை என்று கூறி டில்லியில் இராமாயண கதாபாத்திர வேடங்களில் தோன்றி எதிர்ப்புத் தெரிவிக்கும் இந்துமதத் தொண்டர்கள்.

## அக்கரைச் சீமையிலே...

தொகுப்பு: மதுமதி

# மகளிர் கல்லூரியில் கற்பிக்கும் ஆண் ஆசிரியர் மணமுடிக்க ஆணை

பங்களாதேஷில் மகளிர் கல்லூரி ஒன்றில் பணியாற்றும் மணமாகாத ஆண் ஆசிரியர்கள் அனைவரும் 6 மாதத்துக்குள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அக்கல்லூரி நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

வடக்கு டாக்காவில் ராங்க்பூர் மாவட்டத்தில் உள்ள பிர்கஞ் மகளிர் கல்லாரியில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 6 மாதத்துக்குள் திருமணம் செய்து கொள்ளவில்லை எனில் வேலை போய்விடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்கல்லூரியில் பணியாற்றும் சாஜேதுர் ரஹ்மான் ராணா என்ற ஆசிரியர் சமீபத்தில் மாணவியை அழைத்துச் சென்று திருமணம் செய்துகொண்டார். இதற்கு இருவரின பெற்றோர்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்தே கல்லூரி நிர்வாகம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

★★★

# இராணுவ வீரருடன் சுசந்திகா, தம்மிக மோதல்!

இலங்கையின் முன்னணி ஓட்ட வீராங்கனையான சுசந்திகா ஜயசிங்க வும், அவரின் கணவர் தம்மிக நந்த குமாரவும் வீதி விபத்தொன்றையடுத்து இராணுவத்தைச் சேர்ந்த சாரதி ஒரு வருடன் மோதலில் ஈடுபட்டனர் என புகாரிடப்பட்டுள்ளது. எத்துல் கோட்டே, உஸ்வந்த சந்தியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணிக்கு மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

சுசந்திகாவும் தம்மிகவும், தமது வாகனத்தில் சென்றுகொண்டிருந்த போது அந்த வாகனம் இராணுவ உயர் அதிகாரி ஒருவரின் காரோன் றுடன் மோதியுள்ளது.

அதையடுத்து தம்மிக - சுசந்திகா ஆகியோருக்கும் இராணுவ சாரதிக் கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

"நானும் தம்மிகவும் இராணுவத் தில் இருந்தவர்கள்தான் அதனால் சில இராணுவ சாரதிகள் குறித்து தமக்குத் தெரியும்" என சுசந்திகா கூறி னார் எனவும், அங்கிருந்து அகலும் முன்னர் சாரதியின் கனனத்தில் தம் மிக அறைந்தார் எனவும் வெலிக் கடை பொலிஸ் நிலையத்தில் புகாரி டப்பட்டுள்ளது. எனினும் இக்குற்றச் சாட்டுக்களை சுசந்திகா மறுத்துள் ளார்.

"எனது கணவர் மேற்படி சாரதியை அடித்தார் என்பதை முற்றிலும் மறுக் கிறேன். எமது வாகனத்தை கடந்து சென்ற மேற்படி காரின் சாரதி வீதியை மறித்துக்கொண்டிருந்தார்.

"அதனால் நாம் இடது புறமாக அந்தக் காரைக் கடந்து செல்ல முற் பட்டோம். அப்போது எமது வாகனம் அந்தக் காருடன் மோதியது. அதனால், எமது வாகனத்தின் முன்பாகம் சேத மடைந்தது."

- இவ்வாறு சுசந்திகா கூறியுள் ளார். "இச்சம்பவம் தொடர்பாக மேற் படி இராணுவ சாரதியின் மனை வியிடம் நான் விளக்கமுற்பட்டேன். எனினும், தனது சாரதியின் மீது நம்பிக்கை இருப்பதாக கூறிய அவர், எம்மீதே குற்றம் சுமத்தினார்" என வும் சுசந்திகா கூறுகிறார்.

இச்சம்பவம் தொடர்பாக சுசந் திகாவும் தம்மிகவும் வெலிக்கடை பொலீஸ் நிலையத்திற்கு வருமாறு அழைக்கப்படுவார்கள் என வெலிக் கடை பொலீஸ்நிலைய பொறுப்பதி காரி நேற்றுமுன்தினம் தெரிவித்தார். (ஓ)

# அன்டி பிளவர், ஒலங்காவுக்கு எம்.சி.சி. கழகம் கௌரவம்

ஸிம்பாப்வே அணியின் முன்னாள் வீரர்களான அன்டி பிளவர், ஹென்றி ஒலங்கா ஆகியோருக்கு இங்கிலாந் தின் மேரில்போன் கிரிக்கெட் கழகத் தின் (எம்.சி.சி.) கௌரவ ஆயுட்கால உறுப்பினர் அங்கத்துவம் வழங்கப் பட்டுள்ளது.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின்போது ஸிம்பாப்வே அதி பர் ரொபர்ட் முகாபேயை எதிர்த்து செயற்பட்டதற்காக அன்டி பிளவர், ஒலங்கா இருவருக்கும் இந்த கௌர வம் வழங்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி யின்போது, ஸிம்பாப்வேயில் ஜன நாயகம் செத்துவிட்டது என்பதை உணர்த்தும் விதமாக கையில் கறுப் புப்பட்டி அணிந்து அன்டி பிளவர், ஒலங்கா இருவரும் விளையாடினர்.

முகாபேயை எதிர்த்ததன் காரண மாக தங்களுடைய சர்வதேச கிரிக் கெட் வாழ்வை இருவரும் இழக்க நேரிட்டது. இதற்காக அன்டி பிளவர், ஒலங்கா இருவருக்கும் கௌரவ ஆயுட்கால உறுப்பினர் பதவி வழங் கப்பட இருப்பதாகவும், இதை இரு வரும் ஏற்றுக்கொண்டது மகிழ்ச்சி அளிப்பதாகவும் எம்.சி.சி. தலைவர் சார்லஸ் பிரை தெரிவித்துள்ளார்.

முதல்தர கிரிக்கெட் போட்டியில் ஓய்வுபெறும் வீரர்களுக்கே வழக்க மாக எம்.சி.சியின் ஆயுட்கால உறுப் பினர் பதவி வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

## உதைபந்தாட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.4

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத் தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி யில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணி கள் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4 மணி - யாழ்.பல் கலைக்கழக வி.க.அணி எதிர் சென். மேரிஸ் வி.க. அணி.

★ மாலை 5.15 - நாவாந்துறை சென். மேரிஸ் வி.க. எதிர் பொற்பதி வி.க. (ஓ-5)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஒக்.4

பருத்தித்துறை ஐக்கிய விளை யாட்டுக்கழகம் வடமராட்சி ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை திக்கமுனை மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி பொலிகை விநாயகர் வி.க. அணி எதிர் அல் வாய் நண்பர்கள் வி.க. 'ஏ' அணி.

★ பிற்பகல் 4 மணி - கம்பர் மலை யங்கம்பஸ் வி.க. 'பி' அணி எதிர் கரணவாய் மத்தி 'ஏ' அணி. (ஓ-5)

# நவராத்திரி நிகழ்வுகள்

சுழிபுரம்,ஒக்.4

பண்ணாகம் அம்பாள் கலை மன் றத்தின் வாணிவிழா இன்று மாலை 4.30 மணிக்கு நெல்லியான் காளி கோயில் முன்றிலில் பே.இன்பராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-10-28)

★ ★ ★

தென்மராட்சி, ஒக்.4

சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் வாணிவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பொதுநூலக மண்டபத் தில் சங்கத்தின் தலைவர் மு.செ.சர வணபவ தலைமையில் நடைபெறும். (எ-10-117)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.4

கோப்பாய் கலைவாணி கல்வி நிலையத்தின் வாணிவிழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நிலைய நிர் வாகி சி.சிவரூபன் தலைமையில் நடை பெறவுள்ளது. (எ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.4

வட்டுக்கோட்டை, தெக்கணம்பாய் ஸ்ரீ கண்ணகாம்பிகா சமேத கண்ண லிங்கேஸ்வரர் ஆலயத்தின் மானம்பூ உற்சவம் விஜயதசமியன்று வட்டு. மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள இலுப்பையடி ஞானவைரவர் ஆலயத் தில் இடம்பெறும். (ஓ-10)

★ ★ ★

இணுவில், ஒக்.4

கோண்டாவில் வடக்கு சாமுண்டா தேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆல யத்தில் நாளை மாலை 6 மணிக்கு மானம்பூ நடைபெறும். (10-49)

★ ★ ★

இணுவில்,ஒக்.4

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை வாணி விழாவையொட்டி காலை 7 மணிக்கு வித்தியாரம்பம் இடம்பெறும்.

சங்கீதம், நடனம், மிருதங்கம், சித்திரமும் சிற்பமும் போன்ற பாடங் களுக்கான வகுப்புகளும் ஆரம்பமாக உள்ளன. (10-49)

★ ★ ★

தெல்லிப்பழை,ஒக்.4

தெல்லிப்பழை ஆஸ்பத்திரியி லுள்ள மனநோயாளர்களின் மகிழ்விற் காக காங்கேசன்துறை இலங்கை வங்கி நவராத்திரி விழாவொன்றை இன்று நடத்தவுள்ளது. இந்நிகழ்வு பி.ப. 3.30 மணிக்கு தெல்லிப்பழை வைத்தியசாலை மனநோயாளர் பிரி வில் நடைபெறவுள்ளது. (ஓ-150)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.4

பருத்தித்துறை வட இந்து மக ளிர் கல்லூரி வாணிவிழா நாளை காலை 9மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறும்.

அன்றைய தினம் கல்லூரி மாணவி களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். விஜயதசமியான இத்தினத்தில் பாலர் ஏடு தொடக்கும் நிகழ்வும் இடம் பெறும். (ஓ-15)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஒக்.4

இணுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில இன்று சனிக்கிழமை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை சனீஸ்வர ஹோமம் நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கேதார கௌரி விரத பூசை ஆரம்பமாகும். (எ-10-6)

★ ★ ★

கொழும்புத்துறை,ஒக்.4

கொழும்புத்துறை புனித செப மாலை அன்னை ஆலய வருடாந்த திருவிழாவில் இன்று மாலை5.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும். நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும். தொடர்ந்து தேர்ப்பவனி யும், திருச்சொரூப ஆசிரும் இடம் பெறும். (எ-10-30)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.4

அச்சுவேலி புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து நாளை ஞாயிற் றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு செபமாலைப் பேரணி ஆரம்பமாகி புனித சூசையப்பர் ஆலயத்தைச் சென்றடையவுள்ளது. (ஓ-10)

## அமைச்சரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.4

கைதடிப் பிரதேசத்தின் சில பகுதி களுக்கு மின்சாரம் வினியோகிப் பதில் பாரபட்சம் காட்டப்படுவதாக அப்பகுதி மக்கள் எரிபொருள் மின் சக்தி அமைச்சர் கரு ஜெயசூரியவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ள னர்.

"கைதடி மத்தி, கைதடி வடக்கு, கைதடி கிழக்கு ஆகிய பகுதிகளுக்கு இதுவரையில் மின்விநியோகம் செய்வ தற்கான எவ்வித நடவடிக்கையும் மின்சாரசபையினால் எடுக்கப்படவில்லை என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது. (ஓ-10)


## ஆள் தேவை

எமது IT Societyயிற்கு கணனி அறிவுள்ள உதவியாளர் ஒருவர் தேவை. இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோரை தமது சுய விவரக் கோவையுடன் 05.10.2003 அல்லது 12.10.2003 (ஞாயிறு) காலை 9.00 மணிக்கு ITS காரியாலயம், மருத்துவபீடம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குச் சமுகம் தருமாறு வேண்டுகிறோம்.

(கொடுப்பனவுகள் நேரில் பேசித் தீர்த்துக்கொள்ளப்படும்)

(23290) (22-11-14) - மருத்துவ மாணவர் ஒன்றியம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது மானிடவியல் விரிவுரையாளர்

செல்வி பகீரதி ஜீவேஸ்வரா அவர்களின் தந்தையாரான

நடராஜா ஜீவேஸ்வரா

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனை அடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்தித்து, அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

மானிடவியல் துறை மாணவர்கள்,
முதலாம் வருடம்,
(23291) (22-11-14) யாழ். பல்கலைக்கழகம்.

## படிவம்

இந்து சமய கலாசாரத் திணைக் களத்தில் கலாசார அலுவலர் பதவி களுக்கு (இந்து) விண்ணப்பிப்பதற் கான படிவங்கள் உண்டு.

விண்ணப்பம் முடிவு திகதி: 21-11-10-03

BHARATHY PATHIPPAKAM,
OFFSET PRINTERS,
430, K.K.S. ROAD, JAFFNA.

## ஊர்காவற்றுறை பிரதேச சபை
## கேள்வி அறிவித்தல்

ஊர்காவற்றுறை பிரதேச சபை செயலாளரினால் பின்வரும் வேலைக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப் பத்திரங்கள் 10.10.2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை ரூ.மானப் பயிற்சி நிறு வனத்தில் (இக்ராட்) தரம் M9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர் களிடமும் பொதுஸ்தாபனங்களிடமும் இருந்து கோரப்படுகின்றன. கீழே குறித்த தொகையைச் செலுத்தி அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

02. கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்பவர்கள் கணிய அளவுச் சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

03. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையில் இட்டு, அரக்கு முத்திரை வைத்து 'செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு இரண்டாவது பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்' அவர்களுக்கு 13.10.2003 நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

04. கேள்விகள் 13.10.2003 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.

05. கேள்விகளை ஏற்கவோ நிராகரிக்கவோ சபைக்கு உரிமையுண்டு.

06. மேலதிக விவரங்களை ஊர்காவற்றுறை பிரதேச சபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01. | கண்ணகை அம்மன் கோயிலடி இறங்கு துறை பயணிகள் தங்குமிடம் அமைப்பு வேலை | 6500.00 | 250.00 |

ஊர்காவற்றுறை பிரதேச சபை,
ஊர்காவற்றுறை.
02.10.2003

(2301526) (22-11-14)

கு.கணேசலிங்கம்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

## நீங்காத நினைவுகளில் ஐந்தாண்டுகள்



திருமதி
ஐயாத்துரை இளையாச்சி
(தையிட்டி - காங்கேசன்துறை)

மலர்வு: 05.03.1927 உதிர்வு: 30.09.1998

(திதி : 04.10.2003)
நவமி

"நாம் விடும் மூச்சு என்றும் நீ தந்த காற்று"
என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன் வாழும்:

- மக்கள், மருமக்கள், சகோதரி, பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

43/44, யாழ் வீதி,
சிறாம்பியடி,
யாழ்ப்பாணம். (23287) (11-14)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 - 01 - 1939



உதிர்வு 18 - 10 - 1997

திருமதி ஜெகதீஸ்வரி நடராஜா (B.Sc.) (Dip)
(இளைப்பாறிய ஆசிரியை, யா/வயாவிளான் ம.ம.வித்தியாலயம்)
திதி : 04.10.2003 - மகாநவமி

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

இ.நடராஜா (கணவர்)
(இளைப்பாறிய பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்)

சேச் லேன்,
உரும்பிராய். (23286) (29-10-14)

# காணாமற்போனோர் தொடர்பான விசாரணைக்கு அழைக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம்,ஒக்.4

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், எதிர்வரும் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தவுள்ளனர்.

காணாமற்போனோரின் பெற்றோர், பாதுகாவலர் அல்லது உறவினர்கள் சாட்சிகளுடன் இந்த விசாரணைக்கு வரும்படி அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 9 ஆம்திகதி காலை 10 மணிக்கு சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் பின்வருவோர் காணாமற்போனமை குறித்து விசாரணை நடத்தப்படும்:

ஆனந்தராசா நல்லதம்பி மட்டுவில் தெற்கு- சாவகச்சேரி, டிஜீவதயாபரன்- மறவன்புலோ, சாவகச்சேரி.

கே.உதயபாஸ்கரன- சாவகச்சேரி வடக்கு.

குணரத்தினம் ஆறுமுகம் - கைதடி மேற்கு, சுன்னாகம்.

மார்க்கண்டு ரங்கநாதன்- சப்பச்சி மாவடி, சாவகச்சேரி.

மைலோ பரமநாதன்- நாவற்காடு, அச்சுவேலி.

நாகமுத்து பிரபாகரன்- சாவகச்சேரி,

நாதன் தனராசலிங்கம்- மறவன புலோ மத்தி, சாவகச்சேரி.

வி.குணசேகரம்- இல.19, கோவிலடி மேற்கு, கைதடி.

ராமநாதன் பரமகுமார்- சாவகச்சேரி.

ராசலிங்கம் அன்பழகன்- நவபுரம, கைதடி மத்தி, கைதடி.

எஸ்.நற்குணதேவன்- நவபுரம், கைதடி.

சற்குணராசா சுப்பிரமணியம்- கைதடி மத்தி, கைதடி.

இரத்தினம் சந்திரதயான்- நவபுரம், கைதடி.

சின்னத்தம்பி ரஞ்சன்- நுணாவில், சாவகச்சேரி.

சுப்பிரமணியம் ஜெகதீபன்- இல. 5/1, கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

சுதர்ஷன் சிவஞானம், மட்டுவில் மேற்கு, சாவகச்சேரி.

சுகிர்தன் பூபாலசிங்கம்- சரசாலை மத்தி, சாவகச்சேரி.

சுப்பிரமணியம் ரவீந்திரன்- கைதடி சந்தி, கைதடி.

தனபாலன் சிறிஸ்கந்தராஜா- மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

வேலாயுதன் ஞானசேகரம்- மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.

அகிலேஸ்வரன் அமல்ராஜ்- பழைய வாய்க்கால் வீதி, மிருசுவில்.

எதிர்வரும் 10 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் பின்வருவோர் காணாமற்போனமை குறித்து விசாரணை நடத்தப்படும்.

கதிரவேலு யோகேஸ்வரன்- நவகிருலம், கொடிகாமம்.

கிருஷ்ணகுமார்- சரசாலை மத்தி, சாவகச்சேரி.

பி.சந்திரகுமார்- கச்சாய் வீதி, கொடிகாமம்.

சந்திரன் சந்தியசீலன்- கொடிகாமம்.

எஸ்சசீந்திரன்- இல.55, பாடசாலை ஒழுங்கை, கொடிகாமம்.

செல்வராசா- சிவகிருஷ்ணன், கோவிலடி, இயற்றாளை, வரணி, கொடிகாமம்.

சின்னத்தம்பி திலகேஸ்வரன் மட்டுவில் வடக்கு ,கொடிகாமம்.

குஞ்சன் அருந்தவராஜா- மல்வதி வீதி, கைதடி மத்தி, கைதடி.

## காலியில் வெள்ளம்; 7 பேர் உயிரிழப்பு!

காலி மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும் வெள்ளத்தினால் 900 குடும்பங்கள் அகதிகளாகியிருக்கின்றன. 42கிராம சேவகர் பிரிவுளில் வெள்ளம ஏற்பட்டது. ஏழு பேர் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

நேற்றுமுன்தினம் இம்மாவட்டத்தில் மழை பெய்யவில்லை. வெள்ளமும் வடிந்துவருகிறது.

மாத்தறை பிரதேசத்தில் வெள்ளத்தினால் சுமார் 50 வீடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. (ம)

## ரயில்வே தொழிற்சங்கங்கள் 14 நாள் கால அவகாசம்

ரயில்வே ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பாக அடுத்த 14 தினங்களுக்குள் திருப்திகரமான தீர்வு கிட்டவேண்டும் இன்றேல் கடும் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக ரயில்வே தொழிற்சங்கங்களின் கூட்டு முன்னணியின் அழைப்புக்குழு தீர்மானித்திருக்கிறது.

நேற்றுமுன்தினமிரவு கூடிய இக்குழு, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அல்லது ஒத்துழைப்பு வழங்கிய ஊழியர் எவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமேயானால் அதற்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

# ரயில் சேவைகள் நேற்று மீண்டும் வழமைக்குத் திரும்பின

கொழும்பு,ஒக்.4

இரண்டு நாள்களாக ஸ்தம்பித்திருந்த ரயில் சேவைகள் நேற்றுக்காலை மீண்டும் ஆரம்பமாகின. காலையில் பெரும்பாலான சேவைகள் ஆரம்பமான போதிலும் மாலையிலேயே நீண்டதூர ரயில் சேவைகள் உட்பட அனைத்து சேவைகளும் வழமைக்குத் திரும்பின என்று ரயில்வே கட்டுப்பாட்டாளர் அலுவலகம் தெரிவித்தது.

அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் அனைவரும் கடமைக்குத் திரும்பியுள்ளனர்.

12 ரயில் எஞ்ஜின்கள் பழுதடைந்திருந்ததால் ரயில் சேவைகளை உடனடியாக முழு அளவில் ஆரம்பிக்க முடியாதிருந்ததாக ரயில்வே பகுதி அதிகாரி ஒருவர் கூறினார்.

இதற்கிடையே, நேற்றுக்காலை இரண்டு ரயில் விபத்துக்கள் இடம்பெற்றன. அங்குலான ரயில் நிலையத்திற்கு அருகில் பாதசாரி ஒருவர் ரயிலில் மோதி அதே இடத்தில் உயிரிழந்துள்ளார். ஹுனுப்பிட்டிய ரயில் நிலையத்தில் மற்ற விபத்து நிகழ்ந்தது.

அங்கு ரயிலில் இருந்து இறங்கிய பிரயாணி ஒருவர் தடக்கி விழுந்ததால் ரயிலில் சிக்கி காலில் பலத்த காயமடைந்தார். இவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம)

# கொத்தணி பஸ் நிறுவனங்களை விற்க மீண்டும் கேள்விப்பத்திரம் கோர முடிவு

கொழும்பு,ஒக்.4

ஆறு கொத்தணி பஸ் நிறுவனங்களை விற்பதற்கு மீண்டும் கேள்விப்பத்திரம் கோருவது என அரசு தீர்மானித்துள்ளது. ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திரங்களுக்கு அமைய அந்த பஸ் நிறுவனங்களை விற்பதற்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்வதாலேயே மீண்டும் கேள்விப் பத்திரங்கள் கோருவதென தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

கொத்தணி பஸ் நிறுவனங்களைக் கொள்வனவு செய்திருக்கும் பிரிட்டனின் ஐ.பி.ஐ.எஸ். நிறுவனமும் புதிதாகக் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட இணக்கம தெரிவித்திருக்கிறது.

நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்வதால் பஸ் நிறுவனங்களின் முன்னேற்றத்துக்கோ அவற்றின் செயற்பாடுகளுக்கோ நடவடிக்கை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. நீதிமன்ற நடவடிக்கை தொடர்ந்து வரும் நிலையில் சுமார் ஆயிரம் பஸ்கள் சேவையிலிருந்து நீக்கப்படுகின்றன.

இந்தநிலை தொடர்ந்தால் பஸ் நிறுவனங்களின் பெறுமதி பெருமளவு குறைந்துவிடும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

# பனம்பொருள் உற்பத்தி தொடர்பாக பேராதனையில் ஒரு நாள் மாநாடு

பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் பனம் பொருள் உற்பத்திகள் தொடர்பான ஆராய்ச்சி மாநாடு ஒன்று எதிர்வரும் 15ஆம் திகதி பேராதனையிலுள்ள மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் ஜான்ஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த முழு நாள் ஆராய்ச்சி மாநாட்டில் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த துறைசார் பேராசிரியர்கள், 50 பேருக்கு மேற்பட்டோர் கலந்து கொள்ள இருக்கின்றனர்.

இதில் பனம் பொருள்களிலிருந்து தயாரிக்கக்கூடிய புதிய உணவு வகைகள் தொடர்பான ஆய்வும் நடைபெறவிருப்பதுடன், பனம் பழத்திலிருந்து தயாரிக்கப்படக்கூடிய நோய்த்தடுப்பு மருந்து ஒன்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அறிக்கையும் ஆராயப்படவிருக்கின்றது.

இந்த மாநாட்டுக்கு பிரதம விருந்தினராக இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-4)

## தவறிவிட்டது

**எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த மயில்வாகனம் மகேந்திரன், அழகதுரை சரஸ்வதி என்பவர்களது நிவாரணப் பங்கீட்டு அட்டைகளும், உணவு முத்திரைகளும் பொலித்தீன் பையுடன் 02.10.2003 அன்று சாவகச்சேரியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி ,கண்டி வீதி, தாமோதரம்பிள்ளை அன் சன்ஸ் கடையில் ஒப்படைக்கவும்.**

(சி-30529)(11-14)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக மாணவியான

செல்வி

**அரியகுணராஜா கார்த்திகா**

அவர்கள் அகாலமரணமடைந்ததையிட்டு அனாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அரியகுணராஜா கார்த்திகா
(2ஆம் வருடம், வணிகத்துறை)
தோற்றம்: 16.08.1981
உதிர்வு: 03.10.2003

*2ஆம் வருடம்,*
*வணிகத்துறை,*
**யாழ்.பல்கலைக்கழகம்.**

(23299)(11-14)

## கண்ணீர் அஞ்சலி



### செல்வி A.கார்த்திகா

**(வர்த்தகம் - 2ஆம் வருடம்)**

**03.10.2003 அன்று அகாலமரணமான செல்வி A.கார்த்திகா அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

முகாமை கற்கைகள், வணிக பீட மாணவர் ஒன்றியம்.

(23298) (31-11-14)

## கண்ணீர் அஞ்சலி



*மகாலிங்கம் – லிங்கரூபன்*

எமது ஆருயிர் நண்பன்

**மகாலிங்கம் லிங்கரூபன்**

அவர்கள் (03.10.2003) அன்று அகாலமரணம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் மேற்கு,
அன்னங்கை.

(23296)(11-14)

-நண்பர்கள்.

NEW ARRIVAL
உலகின் முதல்தர கணனிகளான IBM DELL COMPAQ GATEWAY

PII, PIII
ரூபாய் 15,000விருந்து
சிறந்த தெரிவிற்கு நாயதமிழைறிந் தொடர்பு கொள்ளுங்கள்
STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam, Jaffna
T.P 021 222 2674, email: stpedu@slt.lk

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், ரம்பா, குஷ்பூ நடித்த
மின்சாரக்கண்ணா
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
STRATEGIC COMMAND
இரவு 8.45 (பு.நே.)

நாகம்ஸ் சுன்னாகம்

விக்ரம், திரிஷா, விவேக் மற்றும் பலர் நடிப்பில்
சாமி
(ரீல்ஸ்)
காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே.)

ராஜா யாழ்ப்பாணம்
குதூகல ஆரம்பம
பிரசாந்த், கிரண், வடிவேல், நம்பியார் நடிப்பில்

வின்னர்
காட்சிகள் : 10.30, 2.30, 5.30, 9.30 (பு.நே.)

# மரண அறிவித்தல்கள்

## குருசுமுத்து சவரிமுத்து (திருச்செல்வம்)

**(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி உத்தியோகத்தர்)**

மானிப்பாயைப் பிறப்பிடமாகக்கொண்ட குருசுமுத்து சவரிமுத்து அவர்கள் 03.10.2003 வெள்ளிக்கிழமை இறையதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற அண்ணாவியார் குருசுமுத்து மரியம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற றெஜீனா மற்றும் பொன்னம்மாவின் பாசமிகு கணவரும் ஜெரின் மெரீனா (டென்மார்க்), அற்னா மரினா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சூசைதாசன், டெனிஸ் ஆகியோரின் மாமனாரும் மாக்கிரேட்,யேசுதாசன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் யேசுரத்தினம், செபமாலையம்மா ஆகியோரின் மைத்துனரும் கலோஜெறோ, டனி ஆகியோரின் ஆசைமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (04.10.2003) பி.ப.3.00 மணிக்கு ஆனைக்கோட்டை கத்தோலிக்க சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புனித அன்னம்மாள் கோவிலடி,*
*4 ஆம்கட்டை,*
*ஆனைக்கோட்டை*

(23301) (29)(11-14)

தகவல்:
ம.யேசுரத்தினம் (மைத்துனர்)

## பிரம்மஸ்ரீ நடராஜ ஐயர் உருத்திர சர்மா

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் கண்டி, உழுகங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜ ஐயர் உருத்திரசர்மா 02.10.2003 வியாழக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2003) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*உழுகங்கை,*
*கண்டி.*

(23293)(11-14)

தகவல்:
ந.சபாரத்தினக் குருக்கள்
(சகோதரன் - கோண்டாவில்)

## ஐயம்பிள்ளை சாம்பசிவம்

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை சாம்பசிவம் 01.10.2003 புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் மீனாம்பாளின் அன்புக் கணவனும் சொக்கநாதனின் சகோதரனும் காலஞ்சென்ற தர்மலிங்கம் - பாக்கியம் தம்பதிகளின் மருமகனும் கண்ணதாஸன், புனிதவதி (ஆசிரியை, யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை), இராஜநாயகி (ஜேர்மன்), ஜெயதாஸன் (நோர்வே), புஸ்பவதி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சேனாதிராஜா (உடுவில்), காலஞ்சென்ற தவராஜா (ஜேர்மன்) மற்றும் சாந்தி (நோர்வே), வேங்குளவன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கனகலட்சுமி, தியாகராஜா ஆகியோரின் மைத்துனரும் சுஜீவன் (ஜேர்மன்), தனுசன், கிருஸ்ணவேணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்பலவாணர் வீதி,*
*உடுவில்,*
*சுன்னாகம்.*

(C/30528) (29-11-14)

தகவல்:
சா.மீனாம்பாள் (மனைவி)
வை.சேனாதிராஜா (மருமகன்)

# இராணுவ ட்ரக். மோதி இளைஞர்கள்...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

இனங்காணப்படவில்லை. இவரது வயது 30 - 35 இற்கு இடையில் இருக்கலாம் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை, இச்சடலம் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவருடையது என உறுதிப்படுத்தப்படாத தகவல் ஒன்று தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட மோட்டார் சைக்கிள், பிரதான வீதியிலிருந்து கன்னியர் மட வீதிக்குள் நுழைவதற்கு எத்தனித்திருக்கலாம் எனவும் -

அவ்வேளை, நகரப்பகுதியில் இருந்து வந்த ட்ரக் பிரதானவீதி - கன்னியர் மடம் வீதிச் சந்தியில், மோட்டார் சைக்கிளை மோதியிருக்கலாம் எனவும் -

விபத்துக்குச் சிறிது கணம் முன்பாக மினிவான் ஒன்று மோட்டார் சைக்கிளுக்கு முன்னே சென்றுகொண்டிருந்ததாகவும் -

விசாரணைகளில் தெரியவந்திருப்பதாக யாழ்.பொலீஸ்நிலைய போக்குவரத்துப் பொறுப்பதிகாரி ஜி.டீ.ரி.கே. செனவிரத்ன தெரிவித்தார்.

மோதிய இடத்தில் இருந்து மோட்டார் சைக்கிள் 20 மீற்றர் தூரம் ட்ரக்கால் இழுத்துச் செல் லப்பட்டிருக்கிறது.

மோதிய இடத்தில் இருந்து படையினரின் ட்ரக் 24 மீற்றர் தூரம்வரை - அது வந்த திசையில் பிரதான வீதியில் இருந்து இடதுபுறமாக விலகி - அருகிலுள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்துக்குச் சமீபமாக - சென்று ஓய்வடைந்திருப்பதும் பொலீஸ் பதிவுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவர்கள் தலை, முகம் மற்றும் உடல் பகுதிகளில் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர். அடையாளம் தெரியாதளவுக்கு அவர்களது முகங்கள் சிதைந்து காணப்பட்டன. அவர்கள் பயன்படுத்தியிருந்த தலைக்கவசம் சுக்குநூறாகியிருந்தது.

விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்களை உடனடியாக அவ் விடத்திலிருந்து அகற்றிய படையினர், அவற்றை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

அதன்பின்னர், சம்பவ இடத்திற்கு வந்த பொலீஸார் பூர்வாங்க விசாரணைகளை மேற்கொண்டனர். யாழ். பொலீஸ்நிலைய தலைமைப் பொலீஸ அதிகாரி ஆனந்த செனவிரத்ன மற்றும் போக்குவரத்துப் பொலீஸ் பொறுப்பதிகாரி ஜி.டீ.ரி.கே.செனவிரத்ன ஆகியோரும் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை நெறிப்படுத்தினர்.

ட்ரக்கை பொலீஸ நிலையத்துக்குக் கொண்டுசெல்ல அவர்கள் முயன்றனர். அவ்வேளை அங்கு திரண்ட பொதுமக்கள், "பிரேக் இல்லாத ட்ரக்கைக் கொண்டுபோய் பிறேக்கைப் பூட்ட அனுமதிக்க மாட்டோம். முதலில் இந்த இடத்துக்கு நீதிவான் ஒருவர் வரவேண்டும். அதற்கு முன்னர் ட்ரக்கை எடுத்தால் அதனைக் கொளுத்துவோம்" எனக் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

எனினும், பொலீஸார் ட்ரக்கை அங்கிருந்து அப்புறப்படுத்தும் முயற்சியில் இறங்கினர்.

உணர்ச்சிவசப்பட்ட நிலையில் காணப்பட்ட பொதுமக்கள், ட்ரக்மீது கற்களை வீசித் தாக்கத் தொடங்கினர்.

உடனடியாகவே அவ்விடத்துக்கு பெருமளவு பொலீஸாரும் படையினரும் வரவழைக்கப்பட்டனர். அதனையடுத்து, பிற்பகல் 6 மணியளவில் அங்கு பெரும் களேபரம் ஏற்பட்டது. சரமாரியாக கற்களும் கொட்டன்களும் ட்ரக்கை நோக்கியும் பொலீஸார் மற்றும் படையினரை நோக்கியும் எறியப்பட்டன. உடனே இராணுவத்தினர் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். களேபரத்தையடக்க பொலீஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளைப் பிரயோகித்தனர். பொலீஸாரின் கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தையடுத்து அருகிலுள்ள வீடுகளிலிருந்தவர்கள் உட்பட அங்கு கூடியிருந்தவர்கள் அனைவரும் கலைந்து ஓடினர்.

பொலீஸ் மற்றும் படையினர் நின்ற திசையிலிருந்தும் கற்கள், பொல்லுகள் பொதுமக்களை நோக்கி எறியப்பட்டன. இக்களேபரத்தில் சிக்கி காயமடைந்த யாழ். பொலீஸ்நிலையத்தைச் சேர்ந்த எச்.பேட்டி (வயது 41) என்ற பொலீஸார் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காயமடைந்த படையினர் நால்வர் இராணுவ ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டனர் என்று கூறப்பட்டது.

நேற்று நள்ளிரவு வரை அப்பகுதியில் பதற்றம் நீடித்திருந்தது.

ட்ரக்கைச் செலுத்திவந்த சிப்பாய் யாழ். பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இன்று அவர் யாழ்.நீதிவான முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவார் எனக்கூறப்பட்டது. விபத்தில் சம்பந்தப்பட்ட ட்ரக் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன நேற்றிரவு யாழ். பொலீஸ் நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டன.

சம்பவ இடத்துக்கு நேற்றிரவு சென்று பார்வையிட்ட யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம், யாழ்.ஆஸ்பத்திரிக்கும் சென்று சடலங்களைப் பார்வையிட்டார். பிரேத பரிசோதனையின் பின் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் அவர் உத்தரவிட்டார்.

இந்த விபத்துச் சம்பவத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற களேப ரத்தை அடக்குவதற்கு யாழ். மாவட்டத்தின் பொலீஸ் நிலையங்களைச் சேர்ந்த பெருமளவு பொலீஸார் பயன்படுத்தப்பட்டனர் என்று யாழ்.பொலீஸ்நிலைய அத்தியட்சகர் ஹெக்டர் தர்மசிறி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

"இந்த விபத்துச் சம்பவத்தினை அடுத்து மக்கள் மிகவும் உணர்ச்சி வசப்பட்டுவிட்டனர்; ஆத்திரமடைந்துள்ளனர். இரண்டு உயிர்கள் கொல்லப்பட்டுள்ளமை மிகவும் பாரதூரமான விடயமாகும்.

சட்டப்படி, தேவையான நடவடிக்கைகளைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். அவர்கள் இதில் எந்தவித பாரபட்சத்திற்கும் இடமளிக்கமாட்டார்கள். இதனைப் பொதுமக்கள் புரிந்துகொள்ள வேண்டும். தற்போதைய சமாதானச் சூழலை பேணிக்கொள்வதில் எம் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த ஆண்டு யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற 38 விபத்துச் சம்பவங்களில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. ஆயினும், பொதுமக்கள் ஆத்திரமடைந்து களேபரத்தில் ஈடுபட்ட சம்பவம் இதுவே முதல் தடவையாகும். விபத்துடன் தொடர்புபட்டது படையினரின் ட்ரக் என்பதனாலேயே பொதுமக்கள் அதிகளவில் ஆத்திரமடைந்துள்ளனர் எனக் கருத இடமுண்டு. களேபரத்தில் ஈடுபட்ட மக்களுக்கு சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் யாரென்பதே தெரிந்திருக்கவில்லை.

- இப்படி யாழ்.பொலீஸ் நிலைய அத்தியட்சகர் மேலும் கூறினார். (ம-5-6-9-86-88)

## அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களிலும் எம்மீது அமெரிக்கா தடை விதித்திருந்தது. எனினும், எமது நடவடிக்கைகளும் தொடர்ந்த வண்ணம்தான் இருந்தன.

ஆனால், இப்போது நாம் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுகின்ற ஒரு நல்ல சூழ்நிலையில் அமெரிக்கா தனது தடையை மேலும் இருவருடங்கள் நீடித்துள்ளதென்பது எமக்கு மிகுந்த கவலையளிக்கின்ற விடயமாகத்தான் உள்ளது. ஏனெனில், சமாதான முன்னெடுப்பு கள் நடைபெறும் நேரத்தில் அமெரிக்க அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

அமெரிக்கா எம்மீதான தடையை மேலும் இருவருடங்கள் நீடித் தமைக்கு நியாயபூர்வமான காரணங்கள் எதுவும் இல்லையென்று தான் நாம் கூறுகின்றோம் - என்றார். (ம-8)

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளரொருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போது சரத் அமுனுகம எம்.பி. இந்த வரவேற்பைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

புலிகளுடன் ஆரம்பக்கட்ட பேச்சுக்களே இடம்பெறுகின்றன. இந்த நிலையில் புலிகள் மதான தடையை அமெரிக்கா நீக்குவது முறையல்ல.

புலிகளுடனான பேச்சுக்களில் சமாதானத்துக்கான அறிகுறிகள் தென்பட்டதும் அமெரிக்கா புலிகள் மீதான தடையை நீக்குவதை நாம் ஆதரிப்போம் என்றார்.

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் தெரிவித்திருக்கிறது.

இராணுவத்தை விட்டு சட்டபூர்வமாக விலக அனுமதியளிக்கும் நடவடிக்கையின் முதல் கட்டம் கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பமாகும். எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 25ஆம் திகதிவரை கம்பஹா மாவட்ட செயலகத்தில் இதற்கான அலுவல்கள் நடைபெறும்.

# புலிகள் உறுப்பினர் மீது நேற்று துப்பாக்கிச் சூடு!

யாழ்ப்பாணம் பிரதான வீதி கன்னியர் மடம் சந்தியில் நேற்று இடம்பெற்ற இராணுவ ட்ரக் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து அங்கு பொதுமக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் பெரும் களேபரம் ஏற்பட்டு பதற்றம் நிலவியது. இதனைத் தணிப்பதற்கு நேற்றிரவு 9 மணியளவில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப் புலிகளின் உதவியை நாடினர்.

"இதனை அடுத்து புலிகளின் அரசியல்துறை யாழ். மாவட்டப் பணிமனையைச் சேர்ந்த போராளிகள் சம்பவ இடத்துக்குச் சென்றனர். அங்கு நிலைமை மோசமாக இருந்ததனை அவர்கள் அவதானித்தனர். இதனால் சம்பவ இடத்துக்கு சற்றுத் தொலைவிலேயே அவர்கள் நின்று நிலைமையை அவதானித்தனர்.

"பொதுமக்களின் கோபத்தைத் தணிப்பதற்கான ஒரு நடவடிக்கையாக அங்கு அதிகளவில் காணப்பட்டிருந்த இராணுவத்தினரை தற்காலிகமாக அங்கிருந்து அகன்று செல்ல ஏற்பாடு செய்யுமாறு இராணுவத்தினருக்கு ஆலோசனை வழங்கினர்" - என்று அரசியல் துறையைச் சேர்ந்த ஊடக இணைப்பாளர் இமையவன் தெரிவித்தார்.

அங்கிருந்த இராணுவத்தினரை அவ்விடத்தை விட்டு அகற்றினாலேயே கோபமடைந்துள்ள மக்களிடம் சென்று அவர்களை தம்மால் சமாதானப்படுத்த முடியும் என்று புலிகள் தெரிவித்ததாகவும் -

ஆனால், அந்த ஏற்பாட்டுக்கு அங்கிருந்த இராணுவ கட்டளை அதிகாரி திட்டவட்டமாக மறுத்து விட்டதாகவும் - இமையவன் மேலும் தெரிவித்தார்.

"எனினும் மக்களை அமைதிப்படுத்தும் நோக்கோடு போராளிகள் அவர்களை நோக்கிச் சென்றனர். அப்போது சந்தியின் அருகே உள்ள மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச் சபை பால் விற்பனை நிலையத்தின் முன்பாகக் கூடியிருந்த இராணுவத்தினரில் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்.

"அந்தச் சன்னம் போராளிகள் எல்லோருக்கும் முன்னாள் சென்று கொண்டிருந்த கடற்புலிகளின் அரசியல்துறை யாழ். மாவட்ட பொறுப்பாளர் இனியவனை மிக அருகாகக் கடந்து சென்றது. மயிரிழையில் அவர் உயிர்தப்பினார். இதனை அடுத்து போராளிகள் அனைவரும் அந்த இடத்தில் இருந்து உடனடியாக வெளியேறிவிட்டனர்.

"போராளிகளை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததன் மூலம் அவர்கள் அங்கு உண்மையில் அமைதியை நிலைநாட்ட விரும்பவில்லை என்பது தெளிவு படுத்தப்பட்டுள்ளது" - என்று ஊடகத் தொடர்பாளர் இமையவன் மேலும் கூறினார்.

## புலிகள் பயங்கர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று அமெரிக்கா திருப்தி அடையும் பட்சத்தில் எந்தநேரத்திலும் புலிகள் மீதான பயங்கரவாத முத்திரையை நீக்க முடியும் என்று அமெரிக்கப் பிரதி ராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிடேஜ் கடந்த மாதம் 29ஆம் திகதி தம்மைச்சந்தித்த இலங்கை அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் தெரிவித்திருந்தார்.

அதேநேரம், புலிகள் மீதான தடையை மேலும் இரண்டு ஆண்டுகள் நீடிப்பதாக அமெரிக்கா நேற்றுமுன்தினம் அறிவித்தது.

விடுதலைப் புலிகள் பயங்கரவாதத்தை ஒதுக்கித் தள்ளி பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொண்டால் அப்போது அவர்கள் மீதான பயங்கரவாத முத்திரையை நீக்கி அவர்களின் இயக்கத்தை இலங்கையின் சட்டபூர்வமான அமைப்பாக அமெரிக்க அரசு ஏற்று அங்கீகரிக்கும் என்று அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் பிரதி ராஜாங்க அமைச்சர் ஆர்மிடேஜ் மேலும் தெரிவித்தார்.

இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையே மீண்டும் விரைவில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாக வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகிறது. வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம் உருவாக்கு வது தொடர்பாக புலிகள் சமர்ப்பிக்கும் ஆலோசனைகள மீண்டும் பேச்சுக்களைத் தொடங்குவதற்கான அடிப்படையை உருவாக்கக்கூடிய அளவுக்கு நியாயமானவையாகவும் நடை முறைச் சாத்தியமானவையாகவும் இருக்க வேண்டும் என்றும் ஆர்மிடேஜ் கூறினார்.

## பாதிக்கப்பட்ட சிறுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விருந்தினர்கள் இடைத்தங்கல் நிலையத்தைச் சுற்றிப் பார்வையிட்டனர்.

நிலையத்தில் 10 அறைகளும், விளையாட்டு மைதானம், நூலகம், உள்ளக விளையாட்டுத்திடல், யோகாசனப் பயிற்சி நிலையம் ஆகியனவும் அமைந்துள்ளன.

ஆறு அறைகளில் 22 சிறுவர்களும் நான்கு அறைகளில் 27 சிறுமிகளும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு பாடசாலைக் கல்வி, தொழில்கல்வி ஆகியன வழங்கப்படும் அவர்களுக்கு மறுவாழ்வு அளித்து 3 மாதங்களில் அவர்களைப் பெற்றோரிடம் ஒப்படைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நோக்கத்துடனேயே இடைத்தங்கல் முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தை தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் யு   ிசெவ் நிறுவனமும் இணைந்து நிர்வகிக்கவிருக்கின்றன.

**சிறுவர்கள் கருத்து**

"எமது சுயவிருப்பப்படியே விடுதலைப் புலிகளுடன் இணைந்தோம். பெற்றோருடன் சேர விரும்பவில்லை. எமது கல்வியைத் தொடர விடுதலைப் புலிகளின் பராமரிப்பில் இருக்க விரும்புகிறோம்"- என்று இடைத்தங்கல் முகாமிலுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள் 'உதயனுக்கு' கருத்துக் கூறுகையில் தெரிவித்தனர்.

சமாதானச் சூழல் உருவான பின்னர் விடுதலைப் புலிகளின் பராமரிப்பில் சேர்ந்துகொண்ட இவ்விரு சிறுவர்களும் தமது சோகக் கதையை எமது செய்தியாளர்களிடம் விவரித்தனர்.

"யாழ்ப்பாணத்தில் இளம் வயதுடையவர்களை இராணுவம் தாக்குவதை நேரடியாகக் கண்டு, எதிர்காலத்தில் இந்நிலை எமக்கு வரக்கூடாது என்ற காரணத்தால் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணையச் சென்றோம். எம்மைத் தமது அமைப்பில் சேர்க்க முடியாது என்று கூறி எம்மை மீண்டும் பெற்றோரிடம் ஒப்படைக்கப் போவதாக அவர்கள் கூறினர்.

"நாம் அதை ஏற்கமுடியாது என்று கூறி, இயக்கத்துடன் வைத்துப் பராமிக்கும்படி தெரிவித்தோம். இதை ஏற்று அவர்கள் எம்மைப் பராமரித்து வருகின்றனர். நாம் கல்வி பயில ஏற்பாடு செய்துள்ளனர். கல்வியைத் தொடர்ந்து எதிர்காலத்தில் எமது முடிவை எடுப்போம்"- என்று அவர்கள் கூறினர்.

அந்நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள சிறுவர், சிறுமிகளின் நலன் கருதி அவர்களைப் படம் எடுக்க 'யுனிசெவ்' அதிகாரிகள் செய்தியாளர்களை அனுமதிக்கவில்லை. அவர்களின் பெயர் விவரங்களைத் தெரிவிக்கவும் யுனிசெவ் அதிகாரிகள் மறுத்துவிட்டனர். (ம-3)


**INFORMATION TECHNOLOGY PARK**

*under the purview of*

MINISTRY OF REHABILITATION, RESETTLEMENT & REFUGEES

272, Stanley Road, Jaffna, Sri Lanka

e-mail: itp@sltnet.lk Office: 021 222 3641

தகவல் தொழில் நுட்பப் பூங்காவின் புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். விண்ணப்பப் படிவங்களை மேற்படி முகவரியில் 05-10-2003 தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

**Cetrificate Courses**

| Courses | Duration |
|---|---|
| Ms- Word | 3 |
| Ms- Excel | 3 |
| Ms- Access | 3 |
| PageMaker | 3 |
| CorelDRAW | 3 |
| AutoCAD | 3 |

Fee 1000/-

| Courses | Duration |
|---|---|
| Webpage&Graphics Design | 4 |
| C/C++ | 4 |
| Visual Basic | 4 |
| Java | 4 |
| Oragle | 4 |
| Hardware | 4 |
| Internet & E-mail | 4 |
| HTML & Java Script | 4 |

Fee 1800/-

**Diploma course (on line)**

Diploma in PC Application & Office Management (Including Ms-office Syllabus)

Duration - 3 months Fee - 2750/-

*(Week day batches only)*

குறிப்பு: 1) புதிய பிரிவுகள் யாவும் தேசிய வீடமைப்பு அதிகார சபைக் கட்டடத்தில் (கச்சேரி முன்பாக) நடைபெறும் என்பதனைக் கருத்தில் கொள்க.
2) பயிற்சிநெறிகள் யாவும் நவம்பர் மாத முதல் வாரத்தில் இருந்து ஆரம்பமாகும்.

Centre for Information Technology

*For further Details:* *Course Manager*

*Information:* *Director*



**வேலையாள் தேவை**

மருந்தக வேலையில் முன் அனுபவமுள்ள வேலையாள் தேவை. யாழ் நகரை அண்டிய பகுதியில் வசிக்கும் ஆண்,பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

சனி (04.10.03), ஞாயிறு (05.10.03) ஆகிய தினங்களில் காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை நேரில் வரவும்.

திருபாமசி, (23295)
இலுப்பையடி சந்தி, யாழ்ப்பாணம்.



**வேலையாள் தேவை**

★ பரிமாறுபவர்
★ சிட்டை எழுதுநர் (Bill Cleark)

பிரபலமான குளிர்பான நிலையத்துக்கு வேலையாள தேவை.

தொடர்பு:- T.P.: 0777-737491
(23294)



**தவறிவிட்டது**

கொழும்பில் இருந்து யாழ்பாணம வரும் போது முகமாலை சோதனைச் சாவடியில் நீல நிற ரவலின் பாக்கிற்குள் முக்கிய ஆவணங்களும், டயறி, கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் உடுப்புகள் அடங்கிய பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம வழங்கப்படும்.

Globul Informatics (Pte) Ltd.
376, Kasthuriyar Road,
Jaffna.

T.P.: 0777-364247, 021-2225735, 021-2225736. (சி-30507)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.10.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.